20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் TM
VLAMBARAM TM
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 | பாலம் 07 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 01, 2010

# தமிழ் தேசியக் கூட்டமைப்பை தடை செய்ய இலங்கை அரசு திட்டம்

மக்கள் மத்தியில், நாட்டை பிளவுபடுத்தும் வகையில் கருத்துக்களை தெரிவித்து வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை தடைசெய்ய வேண்டும் என, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்த கருத்தினை இலங்கை அரசாங்கம் ஆமோதித்துள்ளது.

இலங்கையில் வடக்கு கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாட்டை பிளவுபடுத்தும் வகையிலான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி வருவதாகவும் இதனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பை தடைசெய்ய வேண்டும் என பாதுகாப்பு செயலாளர் தெரிவித்த கருத்து தொடர்பில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செய்தியாளர் மாநாட்டின் போது கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்த கருத்து சரி-யென கூறினார். இது தொடர்பில் அவர் தெளிவுபடுத்துகையில் தற்போதைய நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பொறுப்புடன் செயற்பட வேண்டும் என கூறினார். பயங்கரவாதமும், விடுதலைப் புலிகளின் தலைவரும் ஒழிக்கப்பட்டுள்ள நிலையில், பொறுப்புடன் செயற்பட வேண்டியது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாரிய பொறுப்பு எனவும் அவர் எடுத்துரைத்தார். அதைவிடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பானது நாட்டை பிளவுபடுத்தும் வகையில் பிரிவினை வாதத்தை தூண்டும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்து வருவதாகவும் குறிப்பிட்டார். தமிழ் தேசியக் கூட்டமைப்பை தடைசெய்யவேண்டும் என பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்த கூற்று சரியெனவும் கூறினார்.

இதேசமயம் "வடக்கு கிழக்கை இணைக்க மாட்டேன் என மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார். அது அவருடைய கொப்பனது சொத்தல்ல. அது எங்களுடையது என்பதை புரிந்து கொள்ளவேண்டும்" என தமிழ் தேசிய கூட்டமைப்பின் திருமலை முதன்மை வேட்பாளர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். திகாமடுல்ல (அம்பாறை) தேர்தல் மாவட்டத்தின் காரைதீவில் நடை-பெற்ற தேர்தல் பரப்புரை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

நாம் அடிமையாக வாழமாட்டோம். உரிமையுடன் வாழவேண்டும் என்று மிக உறுதியாக இருக்கலாம். இதுவே நம் மத்தியிலுள்ள பெரும் சவாலாகும். இன்று ஒரு பெரும் சவாலை நாம் எதிர்நோக்கியுள்ளோம். காரணம் 30 ஆண்டு காலமாக யுத்தம் நாட்டில் நடைபெற்றது. தந்தை செல்வாவின் கோரிக்கையின் அடிப்படையில் சமாதானமாக இனப் பிரச்சனை தீர்த்துக் கொள்ளப்படாததால் எமது மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதன் நிமித்தம் நமது இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடும் நிலைக்கு தள்ளப்பட்டனர். அந்த ஆயுதபோராட்டம் முப்பது ஆண்டு காலமாக நடைபெற்றது. எமது போராளிகள் பல சாதனைகளைப் படைத்தார்கள். இது எல்லோரும் அறிந்த விடயம்.

வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் கணிசமானளவு பிரதேசம் அவர்களுடைய பொறுப்பிலிருந்தது. இன்று அது முடிவுக்கு வந்துள்ளது. ஏனைய நாடுகளின் உதவியுடன் போரை முடிவுக்கு கொண்டு வந்தது அரசு. தற்போது அந்த இயக்கம் எம்மத்தியில் இல்லை என கூறிவருகின்றது. ஆனால் நாம் ஒன்றை மட்டும் மறந்துவிட முடியாது. அந்த ஆயுதமேந்திய இயக்கம் நடத்திய போராட்டத்தின் நிமித்தமே எமது போராட்டம் சர்வதேச அரங்கில் முன்வரிசை-

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## அதிக அகதிகளை கனடா ஏற்கிறது

கனடாவின் குடியுரிமை மற்றும் குடிவரவிற்கான அமைச்சர் யேசன் கென்னி மார்ச் 30 ஆம் திகதி தெரிவிக்கையில் கனடாவில் அகதி நிலை கோருவோருக்கான சட்டமூலம் திருத்தி அமைக்கப்பட உள்ளது என்றார்.



புதிய சட்டத்தின் படி அகதிகளுக்கான விசாரணை துரிதப்படுத்தப்படும். இதன் மூலம் உண்மையான பாதுகாப்பு தேவைப்படுவோருக்கு விரைவில் பாதுகாப்பு வழங்கப்படும். இதேவேளை கனடாவின் சட்டத்தை தவறாக பயன்படுத்த முயல்வோர் விரைவில் இனங்காணப்படுவர் என்றார்.

கனடாவில் ஏற்கப்படும் அகதிகளின் தொகை

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

GSF Golden Store Fixtures
Friend for your Business
www.goldenstorefixtures.com sales@goldenstorefixtures.com Toll Free: 1 877-565-6554
நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம் Golden Store Fixtures Ltd.
» Counter Top Displays » Gift Bags & Ribbons » Glass Displays » Grid Panels & Accessories » Mannequins » Pegboard & Accessories » Racks » Shopping Cart & Baskets » Showcases » Sign & Sign Holders » Slatwall & Accessories » Steel Shelving » Wood Displays » And Much More.......
355 ADMIRAL BLVD. UNIT 5 MISSISSAUGA, ON, L5T 2N1
TEL: (905) 565 6555 FAX: (905) 565 8655

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers.
• Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE
TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
MONEY TRANSFER
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
HOMELIFE
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# ஒரு குடம் தண்ணீருக்கு ஒரு துளி நச்சு போதும்

பலர் குடிக்கக் கூடிய ஒரு குடம் தண்ணீருக்குள் ஒரு துளி நச்சைக் கலந்துவிட்டால் அக்குடத்தில் உள்ள தண்ணீரைக் குடிக்கின்ற அத்தனை பேரையையும் அழித்துவிடும். மதத்தைப் பற்றிய ஒழுக்க நெறிகளை மக்களுக்கு வழங்குகின்றவர்களில் ஒரு சாமியார் தவறான வழியில் நடந்திருந்தால் அவரை சாமியார் என சைவமக்களால் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஆயிரம் சாமியாரில் ஒரு சாமியார் பிழைவிட்டால் அது அந்த சமயத்தை முற்றாக அழித்துவிடும். சாமியார்கள் அனைவரும் தவறானவர்கள் என்ற நம்பிக்கை எம்மிடையே எழுகிறது. சாமியார் உண்மையை மறைப்பதற்கு முன்னுக்கு பின்னான பல பொய்யான செய்திகளை சாமியார் வெளியிடுகிறார். சமய ஒழுங்கு முறைகளை மீறி நடந்திருக்கின்றார். சாமியார் விடுகின்ற தவறால் அவர் அந்த தகுதியை இழக்கின்றார். தவறு விட்ட சாமியாரை கண்டிக்காத ஏனைய சாமியார்கள் ஒன்றும் சொல்லாமல் இருப்பதும் தாங்களும் அத்தவறை செய்வதாக எம்மால் உணரக் கூடியதாக இருக்க வாய்ப்பு உண்டு. இதுவரை சமயம் சார்ந்த எந்த அமைப்புக்களும் சரியான கண்டனத்தை தெரிவிக்காதது ஏன்? கனடாவில் இருக்கின்ற கோயில்கள் சமய அமைப்புக்கள் சமயப்பெரியார்கள் கண்டனம் தெரிவிக்காதது ஏன்? சாமியார்கள் செய்யும் பிழைகள் சைவசமயத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா? சைவர்கள் என்ன தலையாட்டி பொம்மைகளா? சைவர்கள் அமைதி காப்பது ஏன்? கனடா ஊடகங்கள் அமைதி காப்பது ஏன்?

சைவம் என்றால் என்ன? அன்பே சிவம். ஒருவரை ஒருவர் நேசித்தல். மற்றவரில் அன்பு செலுத்துதல். மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் இனிமையான வாழ்க்கை நெறியை கடைப்பிடித்தல். மன உளைச்சல் அல்லது மனதில் துயர் ஏற்படுகின்ற போது இறைவனை நினைத்து தேவார திருமுறைகளை இசையோடு பாடும் பொழுது மனம் அமைதி பெறும். சைவர்களின் மொழி தமிழாக இருந்ததாக வரலாற்று ஆவணம் பறை சாற்றுகிறது. நாயன்மார்களும் தமிழை வழிபாட்டு மொழியாக இருக்கவேண்டும் என்பதற்காகவே பன்னிரு திருமுறைகளையும் எமக்கு தந்துள்ளார்கள். சைவத்திற்கும் வரைமுறைகள் உண்டு. கட்டுப்பாடு உண்டு. ஒழுக்க முறைகள் உண்டு. சைவர்கள் எப்படி இருக்கவேண்டும். எப்படி வாழவேண்டும் என்பது பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது. நூல்கள் பல ஆயிரம் இருக்கலாம். தேடலை விரும்பும் மனிதன் நல்ல நூலைத் தேடிப் படிப்பான்.

சைவ சமயத்தில் தேவர்களையும் பல வடிவம் கொண்ட இறைவனையும் வடிவமைத்தவன் மனிதன். இவை எல்லாம் கற்பனை உருவமே. ஒரு மொழித்திணிப்பு

> “ மன உளைச்சல் அல்லது மனதில் துயர் ஏற்படுகின்ற போது இறைவனை நினைத்து தேவார திருமுறைகளை இசையோடு பாடும் பொழுது மனம் அமைதி பெறும். ”

தொடர்ச்சி 12ம் பக்கம்

# சைவசமயமும் சாமியார்களும்

விளம்பரத்தில் வந்த 'சைவசமயமும் சாமியார்களும்' என்ற கட்டுரை சம்பந்தமாக பலர் ஆதரவு தெரிவித்திருந்தனர். ஒரு வாசகர் மட்டும் தெரிவித்திருந்த சில எதிர்நோக்குகளுக்கு கட்டுரை ஆசிரியர் தரும் விளக்கம்.

'ஒரு குடம் தண்ணீருக்கு ஒரு துளி நஞ்சு போதும்' என்று அந்த வாசகர் எழுதியிருந்தார். இது முழுவதும் உண்மை. ஒரு துளி நஞ்சு அது கலந்த 'ஒரு குடத்தில்' உள்ள நீர் முழுவதையும் நஞ்சாக்கி விடும். ஆனால் அது அந்தக் குடத்திற்கு அருகிலுள்ள மற்றக்குடங்களின் நீரை பழுதாக்கமாட்டாது. ஒரு பிழைவிட்ட சாமியாரால் சிலவேளை அவரைச் சார்ந்தோர்கள் பழுதாகலாமே ஒழிய அவருடன் தொடர்பில்லாத மற்ற சாமியார்கள் எல்லோரும் கெட்டவர்கள் ஆகமுடியாது. 'சாமியார்கள் எல்லோரும் தவறானவர்கள்' என்று கூறுவது அறியாமை அல்லது அவ்வாறு கூறுபவர்கள் வேறு ஒரு தீய நோக்கம் உடையவர்கள்.

என்று இந்த வாசகர் கூறுவது போல் வைத்தியர் அல்லது ஆசிரியர் ஒருவரின் பிழையால் எல்லா வைத்தியர்களும் அல்லது ஆசிரியர்களும் பிழையானவர்கள் என்று முடிவு எடுத்தால் மக்கள் நோய்க்கு சிகிச்சைபெற எவ்வாறு மற்றைய வைத்தியர்களிடம் செல்லமுடியும்? தங்களது பிள்ளைகளை எவ்வாறு மற்ற ஆசிரியர்களிடம் படிக்க அனுப்ப முடியும்? இவ்வாறு குற்றம் இழைத்த வைத்தியர்களை அல்லது ஆசிரியர்களை பற்றிக் கூறும் ஆங்கில ஊடகங்களும் அவற்றை செய்தியாக மட்டுமே வெளிவிடுகின்றன. தங்களது கருத்தையோ கண்டனத்தையோ தெரிவிப்பது இல்லை. அதை வாசகர்களை தீர்மானிக்க விட்டுவிடுகிறது.

சாமியார்களின் சேவைகளைவிட மக்களுக்கு மிகவும் அத்திய அவசியமான வைத்திய சேவையையோ, எமது சிறார்களுக்கு மிகவும் அத்திய அவசியமான ஆசிரியர் சேவையையோ களங்கப்படுத்து பவர்களை தனிமனித செயல் என ஏற்கும்

> “ வைத்தியர் அல்லது ஆசிரியர் ஒருவரின் பிழையால் எல்லா வைத்தியர்களும் அல்லது ஆசிரியர்களும் பிழையானவர்கள் என்று முடிவு எடுத்தால் மக்கள் நோய்க்கு சிகிச்சைபெற எவ்வாறு மற்றைய வைத்தியர்களிடம் செல்லமுடியும்? ”

ஒரு சாமியார் தவறு செய்தால் மற்ற சாமியார்கள் எல்லோரும் அவரைக்கண்டிக்க வேண்டும் என்பது விதண்டாவாதம். ஊடகங்களின் கடமை செய்திகளை உள்ளது உள்ளபடியே வாசகர்களுக்குத் தெரிவிப்பது மட்டுமே. அவற்றை ஆதரிப்பதோ எதிர்ப்பதோ வாசகர்களின் கையில் தான் உள்ளது. ஊடகம் தனது கருத்தை திணிக்க முயல்வது ஊடக தர்மம் ஆகாது. ஒரு வைத்தியரோ அல்லது ஆசிரியரோ தவறு செய்தால் இந்த வாசகர் நாட்டிலுள்ள எல்லா வைத்தியர்களையும் ஆசிரியர்களையும் குற்றம் சாட்டுவாரா? அல்லது நாட்டிலுள்ள மற்ற வைத்தியர்கள் அல்லது ஆசிரியர்கள் எல்லோரும் குற்றம் செய்தவரைக் கண்டிக்கவேண்டும் என்று கூறுவாரா? எல்லா வைத்தியர்களையும், ஆசிரியர்களையும் ஒருவரின் பிழைக்கு குற்றம் கூற முடியாது, மற்ற எல்லா வைத்தியர்களும் ஆசிரியர்களும் குற்றம் செய்தவரை கண்டிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது அறியாமை.

ஒரு சாமியார் பிழைவிட்டால் "எல்லா சாமியார்களும் அந்த சமயமும் பிழை" இந்த வாசகர் போன்றோர் சாமியார் ஒரு சிலர் பிழைவிட்டால் மற்ற சாமியார்களையும் சமயத்தையும் தாக்க வருவதன் கபட நோக்கத்தை எல்லோரும் அறிய வேண்டும். எவ்வாறு ஒரு தனிப்பட்ட வைத்தியரினது அல்லது ஒரு தனிப்பட்ட ஆசிரியரினது தவறு மக்களால் நோக்கப்படு கிறதோ அவ்வாறே ஒரு தனிப்பட்ட சாமியாரது தவறும் நோக்கப்பட வேண்டும் என்பதே அக்கட்டுரையின் நோக்கமாகும்.

'சைவசமயமும் சாமியார்களும்' என்ற கட்டுரையில் 'சைவசமயத்தின் தத்துவத்தை படித்தவர்கள் அதை தமது அறிவுக்கு ஏற்ற மாதிரி விளங்கிக் கொள்ளலாம், விளங்கப்படுத்திக் கொள்ளலாம். அவர்களது விளக்கத்தை சரி என்றோ அல்லது தவறென்றோ கூற ஒரு சமயக்குருவோ அல்லது ஒரு சமய நிறுவனமோ இல்லை. இது சைவ சமயத்தின் சிறப்பு' என்று எழுதப்பட்டிருந்தது. இதையே இவ்வாசகர் முதலில் 'சைவத்திற்கும் வரைமுறை களுண்டு. கட்டுப்பாடு உண்டு. ஒழுக்க

தொடர்ச்சி 04ம் பக்கம்



## வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Fax: 416.282.4978
3. email: vlambaram@sympatico.ca

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

ஜெனிஷா ரெயிலஸ் & டிசைன்ஸ்
*Jenisha Tailors & Designs*
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை
416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON



# சுதந்திரமான நெகிழ்வுடைய சமயமே இந்துசமயம்

தங்கள் செய்தித்தாளில் பிரசுரமான "சைவசமயமும் சாமியார்களும்" எனுங் கட்டுரை சிந்தனை தெளிவுடன் நுட்பமாக அனுகப்பட்டிருப்பது கண்டு மகிழ்ந்ததோடு பாராட்டவும் செய்கின்றோம்.

ஊடகங்கள் தருவதை வேதவாக்காக நம்பி, தனிப்பட்ட ஒருவரின் செய்தியை அது உண்மையோ பொய்யோ என்பதைக் கூட ஆராயாது அந்த வட்டத்துக்கே சூட்டி விடும் பாங்கு உள்ளத் தெளிவும் சிந்தனைக் கூர்ப்பும் இல்லாதவருக்கே முடியும்.

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமா?" அதற்குள்ளும் சிலவேளை கறுப்புப் பிடித்த சோறும் இருக்குமே. இது மனித உயிர்கள் பற்றியது. உணர்ச்சியும் எழுச்சியும் உள்ள இயற்கையின் படைப்பு. சைவசமயம் ஒரு சனாதனதர்மத் தொடக்கத்தை உடையது. அதற்கான வரையறுக்கப்பட்ட வழிபாட்டு முறையோ அல்லது பைபிள், குர்ரான் போன்று தனிப்பிரமாணிக்க நூல்களோ இல்லாதது. சிவனை வழிபட வேண்டுமானால் சிவத்தொண்டு செய்யலாம், பூசை புனற்காரங்களைச் செய்யலாம், யோக நிலையில் வழிபடலாம், அல்லது தியான நிலையில் ஞானம் பெறலாம். இவற்றுள் ஒன்றைத்தானும் உள்ளன்போடு செய்து வீடுபேறடைந்தவர்களை அறிவோம்.

ஒரு விடயத்தை அறிந்தவுடன் அதனைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். நவீன காலத்தில் எதனையும் செய்யமுடியும். ஒருவரின் செல்வாக்கு, பணம், வள்ளல்தன்மை முதலியவை அவருக்கு புகழைச் சேர்க்கும் போது, பொறாமை போன்ற துர்க்குணங்கள் உடையவர்கள் கதைகளை இட்டுக்கட்டியோ அல்லது ஊசியை உலக்கை ஆக்கியோ கதைகளைப் பரவ விட்டு அநீதி இழைப்பதையும் காண்கின்றோம். அதே நேரத்தில் பிற சமயிகளும் "பாருங்கள் சைவசமயமே பொய்யானது. சைவசமயிகளே சொல்கிறார்களே" என்பார்.

உண்மையோ பொய்யோ என்பதற்கு இருபக்கமும் பல சான்றுகளைக் காட்டலாம். ஒரு பெண்ணைக் கொண்டு பொய் சொல்லுவிக்கலாம். போட்டோ தந்திரங்கள், கொம்பியூட்டர் தந்திரங்கள் செய்யலாம். காசு பறிக்கும் நோக்கமாக இருக்கலாம். ஒளித்தோடியது சான்றாகலாம். அதேபோல பொய்க்கும் சான்றுகள் கிடைக்கும். அதனாலே நாம் உண்மை வெளிவரும் வரை மௌனமாக இருப்போம். உண்மையெனக் கண்டும் என்ன ஆவது?

அறநெறிகளோடு பிணைந்திருக்கும் நாமே உளவியலறிவாலும் உத்தமர்களின் உபதேசங்களைக் கேட்டும் சிலவற்றை சமாளிக்க வேண்டியுள்ளது.

ஆத்மானுபவம் பெற்ற புனிதர்கள் சிலர் கூறும் அறிவுரை ஒன்றை ஏற்க வேண்டியுள்ளது.

விரதங்கள், உபவாசங்கள் இருப்பவர்கள் பசியை அடிக்கடி உணர்ந்துகொண்டு எப்பவோ உணவு வருமெனப் பார்த்திருப்பவனுக்கு புலன் சிவனில் போகாது அடிக்கடி உணவில் போகும். பாறணை செய்யப் போறவன் இன்று என்னென்ன கறி சமைக்கப்படும் யார்யாரை அழைத்துச் சாப்பிடுவோம் என எண்ணிக் கொண்டே இருப்பான். பசி வந்திட பத்தும் பறந்து போகும் என்பதில் தவ முயற்சியும் ஒன்று. ஆகையால் நிம்மதியாக இறைவனுடன் ஒன்றுவதாயின் சிறிது ஆகாரத்தை உட்கொண்டு விட்டு ஈடுபடுங்கள் என்கிறார்கள்.

சடாமுடி தரித்து உருத்திராட்சம் பூண்டு கமண்டலமும் கையுமாக திரிந்த முனிவர்களுக்குத்தான் சகுந்தலை பிறந்து பிரம்மரிஷி பட்டத்தை இழக்க வைத்தாள். படகோட்டியான செம்படவப் பெண்ணை பரிமளகாந்தியாக்கி குழந்தை கொடுத்தாரே அதற்காகச் சைவம் அழிந்து விடவில்லையே. மாறாக அவர்கள் தபோபலத்தினால் அற்புதங்கள் செய்யும் சக்தி வாய்ந்தவர்களாக இருந்தார்கள்.

ரஜனீஸ் சுவாமிகள் ஓசோ ஆனார். பிரேமானந்தாவை சீடர்கள் சிறையிலே சந்தித்துப் பஜனைகள் செய்கிறார்களாம். சில அற்புதங்களும் நடைபெறுகின்றனவாம். (பத்திரிகைச் செய்தி - நம்புவோம்).

விவேகானந்தா, பிரகாஸ்மயனந்தா போன்ற பட்டங்கள் ரிஷி கேசத்தில் ஒரு நிறுவனத்தால் தரப்படுவது. ஆனால் சிலர் தம் சொந்தப் பெயர்களை மறைத்து ஆனந்தாப் பெயர்களை வைத்துக் கொண்டு அவர்களால் அடையப் பெற்ற அமைதி, சாந்தி, அருளுரை ஒன்றும் இன்றி முறையாக வணங்காதவர்கள் எல்லாம் ஏமாற்றுக்காரர்களே எனத் தம்பட்டம் அடித்தும் தூற்றியும் திரிகிறார்களே, அவர்கள் உண்மைச் சைவர்களா?

நம்மை நாமே புரிந்து கொள்ளாமல் அடுத்தவன் வீட்டுக்கு இவையெல்லாம் எப்படிக் கிடைத்தன என்பதை ஆராயவா நாம் பிறந்தோம். கோயில்களிலே பணம் குவிகின்றது. வசூல் நடக்கின்றது. எங்கெங்கே இருந்து வருகின்றது, எப்படி எப்படி செலவு நடக்கின்றது என அடுத்தவன் செயல்களை ஆராய்வதை நாமே செய்யக் கூடாது. ஆனால் சிவனடியார் வேடம் பூண்டவர்கள் செய்யலாமா?

ஒரு கதை ஞாபகம் வருகின்றது. ஜேசுபிரான் கூறியது. ஆனால் அது இப்போ குருவும் சீடனும் கதையாக உலாவுகின்றது.

சீடன் கேட்டானாம்; ஐயா! 'எதிர்வீட்டு நடத்தை கெட்ட பெண்ணிடம் ஒரு நாளுக்கு எத்தனை பேர் போய் வருகிறார்கள். அவளுக்கு அருள் செய்கிறீரே. நான் தங்கள் சீடனாக இருந்தும் எனக்கு உங்கள் அருள் கிடைக்கவில்லையே. அப்போது ஜேசுபிரான் சொன்னாராம் அவள் தன் வாழ்க்கைத் தொழிலாக எவ்வித ஈடுபாடும் காட்டாது என்னைத் தன் இதயத்தில் வைத்து இடையறாது பூசிக்கின்றாள். நீயோ நாள் முழுவதும் செபித்துக்கொண்டே அவள் வீட்டுக்கு எத்தனை பேர் போய் வருகிறார்கள் என்பதைத் தானே கணக்கெடுத்துக் கொண்டிருக்கின்றாய்' என்றாராம்.

**'அடுத்தாத்து சங்கதி எல்லாம் நமக்கேன்டி'**

எங்கள் வீட்டை நாங்கள் திருத்துவோம். திருத்திய பின் அவர்கள் வீட்டைப் பார்ப்போம். கேட்பதற்கெல்லாம் அரண்டு போய் சிந்தையை குழப்பாமல் எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்றிருப்போம்.

உண்மையான சமூகசேவையில் நாட்டமுடையோர், குறிக்கப்பட்டவர்களோடு தொடர்புகொண்டு அன்போடு எடுத்துக்கூறி "இப்படியான அபிப்பிராயம் உலாவுகின்றது நீங்கள் பண்பான முறையில் ஒரு விளக்கத்தைக் கொடுக்கலாம் அல்லது சந்தேக விபரீதமற நடந்து காட்டலாம்" எனக் கூறலாம். அதனால் ஏதும் பாதிப்பு எமக்கு ஏற்பட்டாலும் "தன் நெஞ்சறிவது பொய்யற்க" நேர்மைக்கு எங்கோ பலன் வரும் என இருந்துவிடலாம்.

"பேராண்மை என்ப தறுகண் ஒன்று உற்றக்கால் ஊராண்மை மற்று அதன் எஃகு" - திருக்குறள்

பொருள்: பகைவர் மீது இரக்கங் காட்டாது இருப்பது ஆண்மை, அவர்களுக்கு ஒரு தாழ்வு வரும்போது அவர் மீது இரக்கம் கொண்டு அவர் தாழ்ச்சியைப் போக்க உதவுவது ஆளுமையை மேலும் சிறக்கச் செய்து பேராண்மை ஆக்கும்.

சிவ ஞானநாயகனின் கட்டுரை எவ்வளவு மதி நுட்பத்தோடு எழுதப்படுகின்றது. பாமரர்க்கும் புரியும் வண்ணம் சமகால சமூக நிகழ்வு ஒன்றை எடுத்துக் காட்டி எது பண்பு என விமானப்படை அதிகாரி பற்றிய செய்தியை உலகம் வம்பளக்க இடம் விடாது போய்க்கொண்டே இருப்போமென அறிவுறுத்தியமை ஆழ்ந்து வாசிக்க வேண்டிய சுருங்கச் சொல்லி விளங்க வைத்த கட்டுரை அது.

கனடாவைப் பொறுத்தவரை கடவுள் இல்லை எனக் கூறி பகுத்தறிவு வாதிகளெனப் பிரகடனப் படுத்துபவரைக் காட்டிலும் சிவனுடைய காவலர்கள் தாமே என இறுமாப்புடன் எங்கும் தலையை நுழைத்துத் தவறு காண்பவன் பல மடங்கு பாவம் செய்கிறான்.

"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்" என்றும் அவன்தாள் நினை"



**வள்ளிநாயகி இராமலிங்கம்**


STATE FARM Auto Life Fire INSURANCE

DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE

Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800

Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800

தமிழில் உரையாடுவோம்

1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road

State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# நீங்கள் என்னவாக இல்லையோ அது

உங்கள் அத்தனை துன்பங்களுக்கும் அடிப்படை, உண்மையற்ற தன்மைகளில் உங்களை நிலைநிறுத்திக் கொண்டிருப்பது தான். நீங்கள் என்னவாகவெல்லாம் இல்லையோ அவற்றோடு எல்லாம் உங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் உடல், உங்கள் மனம், உங்களைச் சுற்றியிருக்கிற விஷயங்களோடு உங்களுக்கு இருக்கிற அடையாளங்கள் தான் உங்கள் துன்பங்களுக்கு மூலம். உங்களுக்குத் தெரிந்திருக்கிற அத்தனையுமே உங்கள் ஐம்புலன்களின் அனுபவங்களுக்கு உட்பட்டவைதான். உலகத்தில் இருந்து உங்களுக்குத் தெரிந்திருக்கும் விஷயங்கள் எல்லாம் பார்த்தல், கேட்டல், தொடுதல், நுகர்தல், சுவைத்தல் மூலமாக வந்திருக்கின்றன. இந்த ஐம்புலன்கள் உறங்கப் போகிறபோது இந்த உலகையும் நீங்கள் உணருவதில்ல. உங்களையும் நீங்கள் உணருவதில்லை. ஒப்பீடு அடிப்படையில் வருகிற எந்த உணர்வும் உண்மையான அனுபவம் ஆகாது. அனைத்து யோகப்பயிற்சிகளுமே இந்த ஐம்புலன்கள் கடந்த அனுபவத்தை உங்களுக்கு

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org / www.ishayoga.org

தருவதற்காக உருவானது தான். அது உடல் சார்ந்த உண்மையல்ல. முற்றிலும் வேறு ஒரு பரிமாணத்தில் அது இயங்குகிறது. கடவுள் என்று கருத நினைத்தாலும், ‘நீங்கள்’ என்று உங்களை நீங்களே சொல்ல நினைத்தாலும் அது ஒரு பொருட்டல்ல. கடவுள் என்பது பற்றி உங்கள் எண்ணமே உங்களிடம் இருக்கிற குறுகிய அனுபவத்தின் அடிப்படையில் வருகிறது. உண்மையான அனுபவத்தில் இருந்து வருவதில்லை. உங்கள் உள்தன்மை ஒன்று தான் உங்கள் அனுபவமாக இருக்க முடியும். அதையும் உரிய ஆழத்தில் நீங்கள் இதுவரை காணவில்லை. உங்கள் எல்லைக-ளைக் கடந்து வருகிற ஒரு முழுமையான அனுபவம் உங்களுக்கு வரவேண்டும். அப்படி கடந்து வர விருப்பம் உங்களுக்கு இருந்தால்

> “வெளிச்சூழ்நிலைக்கு தேவையான அளவு மட்டும் ஒரு மனிதன் செயல்படுகிற நிலையை எட்டிவிடுவாரேயானால், அந்த மனிதர் முழுமையான மனிதர்.”

தான் அது நிகழும். இல்லையென்றால் உலகத்திலோ, சொர்க்கத்திலோ எந்த சக்தியும் உங்களை நகர்த்திச் செல்ல இயலாது. இப்போது நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ அந்த அடையாளத்தை அழித்துக் கொள்வதுதான் ஆன்மீகம் என்று பெயர். உங்களுக்குள் நீங்கள் கட்டமைத்து இருக்கிற எண்ணங்களின் அடுக்குகளை அகற்றிக் கொண்டே வரவேண்டும். இது முடிகிறபோது அகற்ற இயலாத ஒன்றை நீங்கள் கண்டடைவீர்கள். அதுதான் தெய்வீகத்தை உணர்ந்ததாக இருக்கும். உலகில் துன்பப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்ற புரிதலும் ஏற்படும். யோகாவின் முழு நோக்கமே, உங்கள் உள்தன்மையை முழுக்க முழுக்க உங்கள் முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது தான். வெளிச்சூழலுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து உள்நிலையின் முழுமையை நோக்கி நகர்கிற ஒரு வாய்ப்பு அது. இதுதான் எல்லையற்ற தன்மை. உங்கள் உள்நிலை எல்லையற்ற தன்மைக்கு போகின்ற போது, வாழ்க்கையும் எல்லையற்ற தன்மையைச் சென்றடைகிறது. நீங்கள் கண்மூடி அமர்ந்திருக்கலாம். ஏதாவது செயல் செய்யலாம். இரண்டு விதமாகவும் உங்கள் வாழ்க்கை முழுமையானதாக இருக்கும். இந்த நிலையை தனக்குள் ஒரு மனிதன் கண்டுணர்கிறபோது, வெளிச்சூழலுக்கு வேண்டிய அளவுக்கு தான் செயல்கள் தேவை என்று அவர் உணர்ந்தால் அவர் முழுமையான மனிதர் ஆகிறார். உங்கள் உள்தன்மை, வெளிச்சூழல் எப்படியிருந்தாலும் முழுமை அடந்திருக்குமேயானால், நீங்கள் எல்லையில்லாத தன்மையை அடைந்து விட்டதாகப் பொருள். அதுதான் உண்மயான மகிழ்ச்சி நிலை.



சத்குரு வாசுதேவ்




என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்

Interest Rate going up soon best time to buy Real Estate

3 bedroom Condo. Markham / Eglinton Low Maintenance

A few Bungalow houses near Universities London, Waterloo, Hamilton, Peterborough Good investment for your children

Gas Stations 4 million litres / year in Peterborough, Oshawa, Hamilton with 6/49, good income

Home Based Business for Senior Care
Over 65 years old with Property
100 Acres Farm with Income North of Markham
5 year plan 3.9% interest Power of Sale
Properties with Tenant's Pay the cost What's your Risk?

வீடும் வியாபாரமும் Business Zoning

Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep.)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.


# சைவசமயமும் சாமியார்களும்

02ஆம் பக்கத்தொடர்ச்சி

முறைகளுண்டு. சைவர்கள் எப்படி இருக்க வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்பது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது’ என்று தமது அறிவிற்கு ஏற்றமாதிரி விளங்கப்படுத்தினார். பின்னர் இன்னொரு இடத்தில் ‘பிள்ளையார் திருமணம் செய்யாமல் இரண்டு பெண்களை வைத்திருக்கிறார். முருகன் இரண்டுமுறை திருமணம் செய்திருக்கிறார். கண்ணன் பல பெண்களுடன் தொடர்பு வைத்திருக்கிறார்’ என்றும் தமது அறிவுக்கு ஏற்றமாதிரியும் விளங்கப்படுத்தியுள்ளார். இந்த வாசகரின் இருவிதமான இந்த கருத்துக்களையும் சரி என்றோ தவறு என்றோ எந்த சைவ சமயத்தவரும் கூறமாட்டார்கள். இவ்வாசகர் சைவசமயத்தை பற்றி படித்து அல்லது கேட்டறிந்து அதற்கு அவர் கொடுக்கும் விளக்கம் இதுவாகும். இவரது இரண்டாவது கருத்துக்கு பல அறிஞர்கள் பலவிதமாக விளக்கமளித்திருந்தார்கள். அவற்றை இங்கு விவரிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல.

இவ் இடத்தில் ஒன்றை முக்கியமாக நோக்க வேண்டும் அதாவது சைவசமயத்திற்கு மட்டுமே உரிய சிறப்பாகக்கூறப்படுவது முருகன் தன்னை தமிழால் வைதாரையும் (திட்டியவர்களையும்) வாழ வைப்பாராம். அதேபோல் சிவனும் தன்னை ‘பித்தன்’ என்று இழித்தவரையும், வில்லால் அடித்தவரையும், செருப்பால் உதைந்த வரையும், கல்லால் எறிந்தவரையும் வாழ வைத்தவராம். இதனால் எவரும் ஒரு தயக்கமும் இல்லாமல் சைவ சமயத்தையும் கடவுளர்களையும் தாராளமாக விமர்சிக்கலாம்.

கட்டுரை ஆசிரியர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ‘சாமியாரை’, ‘போர் வீரனுக்கு’ ஒப்பிடவில்லை. வாசகர் ஒருமுறை ஆறுதலாக இருந்து கட்டுரையை வாசித்தால் விளங்கும். தளபதியின் உரையான ‘தவறு செய்தது ஒரு தனிமனிதனின் செயல். இதற்காக அவரை சார்ந்தோரை பழிப்பது தவறு. அதே சேவையை செய்யும் மற்றவர்கள் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும், அவர்கள் தாங்கள் செய்யும் சேவைக்காக பெருமைப்படவும் வேண்டும்’ என்பது எந்த சேவையிலும் (வைத்தியர், ஆசிரியர், அல்லது சாமியார்) தவறு செய்தவருக்கும் பொருந்தும். இதே தேற்றுதலுரையை தவறு செய்தவர் செய்த சேவையை செய்யும் மற்றவர்களுக்கு கூறலாம் என்பதாலேயே கட்டுரையாளர் இவ்விடயத்தை உதாரணமாக எடுத்திருந்தார்.

கட்டுரையாளர் இந்திய சாமியார் ஒருவர் செய்ததை சரி என்றோ தவறு என்றோ விளக்க முற்படவில்லை. இப்படியாக நடந்த ஒரு சந்தர்ப்பத்தை சாட்டாக வைத்து இவ்வாசகர் தனது கடிதத்தின் இறுதியில் தெரிவித்தது போல் ‘கடவுளையும், சாமியாரையும் நம்பக்கூடாது’ என்று கூறுவது அறிவீனம். இவ்வாறு கூறுபவர்கள் சைவசமயத்திற்கு எதிரான வேறு தீய நோக்கம் உடையவர்கள் என்பதை விளக்குவதே அக்கட்டுரையின் நோக்கமாக இருந்தது. ஒருவர் தான் அவ்வாறுதான் கூறுவேன் என்றால் அவர் அவ்வாறு கூறலாம். ஏனெனில் அதுதான் ஊடக சுதந்திரம். அதைக் கேட்பவர்களும், வாசிப்பவர்களும் தான் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே வள்ளுவரின் “எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்பொருள் காண்பதறிவு” என்ற குறளுடன் அக்கட்டுரை ஆரம்பமானது.



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca

# நாடாளுமன்றத் தேர்தல் - ஒரு பார்வை

## - இலங்கையிலிருந்து மங்களநாதன் அரவிந்தன்

இலங்கையில் இடம்பெற்று வந்த யுத்த மோதல்கள் முடிவுக்கு வந்ததன் பின்னர் நடைபெறுகின்ற இந்தப் பொதுத்தேர்தலானது பல்வேறு பிரச்சினைகளுக்கும், வினாக்களுக்கும் விடையளிக்கப் போகின்றது என்பது அரசியல் வாதிகளினதும், ஆய்வாளர்களினதும் ஏகோபித்த கருத்தாக இருக்கின்றது. அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் புறந்தள்ளப்பட்டு, அவர்களது அரசியல் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவில்லை என்பது தமிழர் தரப்பின் நீண்டகால அரசியல் ஆதங்கமாகும். இந்த ஆதங்கத்தின் உச்ச கட்ட வெளிப்பாடாகவே 30 ஆண்டு காலமாக ஆயுதப் போராட்டம் தொடர்ந்தது. தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில், இது அவர்களின் சுதந்திரத்திற்கான போராட்டமாகும். ஆனால், இலங்கை அரசாங்கமும், ஏனைய பல உலக நாடுகளும் அதனை பயங்கரவாத நடவடிக்கை என சித்தரித்திருந்தன. அந்த வகையில் இலங்கையில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகள், அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதே பொதுவான உலக அபிப்பிராயமாகும். ஆனால், தமது அரசியல் விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் திட்டமிட்ட முறையில் முறியடிக்கப்பட்டுள்ளது என்பதே தமிழ் மக்கள் தரப்பின் கருத்தாகும்.

முப்பது வருடங்களாகத் தொடர்ந்து நிலவிய பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் மூலம், இலங்கை இப்போதுதான் சுதந்திரமடைந்துள்ளது என்பது சிங்கள பேரினவாத அரசியல் போக்காளர்களின் நிலைப்பாடாக இருக்கின்றது. ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரமடைந்துள்ள போதிலும், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் மூலம், நாட்டில் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டிருந்தது. பயங்கரவாதம் தலைவிரித்தாடியதுடன்,



சிங்கள மக்களின் சுதந்திரம் ஆபத்துக்குள்ளாகியிருந்தது என்பதே அவர்களின் கருத்தாகும்.
எனினும் யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு, ஆயுதப் போராட்டம் ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்த இலங்கையின் இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பது குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து எந்த ஒரு சமிக்ஞையும் வெளியாகவில்லை.

ஜனாதிபதி தேர்தலின்போதும் சரி, பொதுத்தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்திலும் சரி, தமிழ் மக்களுக்கு என்ன வழங்கப்படப் போகின்றது என்பதுபற்றி ஆளும் கூட்டணியோ, அல்லது அதன் தலைவராகிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவோ எதனையும் இன்னும் குறிப்பிடவில்லை. அது சம்பந்தமாக கோடி காட்டத்தக்க வகையிலான கருத்துக்களும் வெளிப்படவில்லை.

இதேநிலைமைதான், எதிரணியில் போட்டியிடுகின்ற ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையிலான கூட்டமைப்பிலும் காணப்படுகின்றது. இராணுவத்திலிருந்து ஜனாதிபதி தேர்தலின் மூலம் அரசியல் பிரவேசம் செய்துள்ள ஜெனரல் பொன்சேகா தலைமையிலான கூட்டுக்கட்சிகளிடமிருந்தும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன



செய்யப்போகின்றார்கள் என்பது குறித்து எந்தவிதமான கருத்துக்களும் வெளியிடப்படவில்லை.
ஆனால், அரசாங்கத்தின் சார்பில் இருந்து தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல்வாதிகள் அனைவரும் பொதுத் தேர்தலின் பின்னர் அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குத் தயாராக இருப்பதாகவே பிரசாரம் செய்து வருகின்றன.

பொதுத் தேர்தல் முடிந்தவுடன் தமிழ் மக்களுடைய பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தப் போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்தை மேற்கோள்காட்டி, அந்தப் பேச்சுவார்த்தைகளை அர்த்தமுள்ளதாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், அதற்கு அரசியல் பலமிக்கதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மாறவேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றார்கள். ஆனாலும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் என்ன விடயத்தைப் பற்றிப் பேச்சுக்களை நடத்தப் போகிறார்கள் என்பது பற்றிய தெளிவான நிலைப்பாடு குறித்து, அரசாங்கத்திற்கும் குறிப்பாக அரசாங்கம் மற்றும் தமிழ்த் தேசியம் ஆகிய இரண்டு முரண்பட்ட தரப்பினரிடையேயும் ஓர் இணக்கப்பாடான நிலைப்பாடு காணப்படவில்லை என்பதே உண்மையான நிலைமையாகக் காணப்படுகின்றது. எனினும் தமிழர்களின் தேசியம், உள்ளக சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையிலான ஒன்றிணைந்த ஒரு நிர்வாகத்தின் கீழான சமஸ்டி ஆட்சி முறையை அடைவதற்கான முயற்சிகளில் தாங்கள் ஈடுபட்டிருப்பதாகத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கூறுகின்றது.

இந்த நிலைப்பாட்டை ஜனாதிபதியின் கூற்றுக்கள் முழுமையாக நிராகரிப்பவையாகவே காணப்படுகின்றன. சமஸ்டி ஆட்சி முறையென்ற பேச்சுக்கே இடமில்லை என்பது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களின் உறுதியான நிலைப்பாடாகத் தெரிகின்றது. தமிழர்களுக்குப் பிரச்சினை இருக்கின்றது. அது தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று அரசியல் பேச்சுக்களுக்காகவும். அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுதான் என்பதைக் காட்டும் வகையிலும் ஜனாதிபதி ராஜபக்ச அவ்வப்போது கருத்துக்களைத் தெரிவித்து வணைந்தாலும், அது தமிழர்கள் தரப்பில் வலியுறுத்தப்படுகின்ற பிரச்சினையாக அவரால் வெளிப்படுத்தப்படவில்லை. மாறாக தமிழர்களுக்கென்று பாரிய பிரச்சிகைள் எதுவுமில்லை. அவரகளுக்கு குறிப்பாக போரினால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு இருப்பதெல்லாம், அவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகள் என்றும், வீடுகளை அமைப்பது, தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வது போன்ற பிரச்சினைகளே என்பதே அவரின் உறுதியான கருத்தாக இருக்கின்றது. இதுபற்றி அண்மையில் சிங்கப்பூர் செய்தித்தாள் ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியொன்றில் மகிந்த ராஜபக்ச தெரிவித்திருக்கின்றார்.

அவரின் இந்த நிலைப்பாடு குறித்து பிபிசி தமிழோசை ஆளும் கட்சி தரப்பிலிருக்கின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வினவியபோது, அவரைப் பொறுத்தமட்டில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையின் கீழ், ஒரு நிரந்தர அரசியல் தீர்வை அவர் முன்வைப்பார் என்றும், அதற்கான உறுதிப்பாட்டை அவர் தனக்கு வழங்கியிருப்பதாகவுமே டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கின்றார்.

இத்தகைய ஒரு மோசமான அரசியல் முரண்பாடு நிலவுகின்ற அதேவேளை, இனப்பிரச்சினை தொடர்பில் மிதவாதப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பை வருகின்ற பொதுத் தேர்தலில் எப்படியும் படுதோல்வியடையச் செய்துவிட வேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றுள்ள சிவாஜிலிங்கம், சிறிகாந்தா கோஸ்டி, குமார் பொன்னம்பலம் குழுவினர், அரசாங்கத்தின் தேர்தல் சின்னமாகிய வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்ற தங்கேஸ்வரி, சிவநாதன், கிஷோர், சதாசிவம் கனகரத்தினம் என்பவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். புளொட், வரதர் அணியாகிய ஈபிஆர்எல்எவ் அணியினரும், ஈரோஸ், சிறிடெலோ போன்ற அமைப்புக்களும் இதே பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், வன்னியில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசின் தலைவராகிய அமைச்சர் ரிசாட் பதியுதீன் மற்றும் யாழ் மாவட்டத் தேர்தல் தொகுதியில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்ற முஸ்லிம் தமிழ் வேட்பாளர்களும் முழு மூச்சுடன் அரசாங்க வளங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களைத் தம் பக்கம் இழுப்பதற்கான வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.
வன்னித் தேர்தல் களத்தில் விடிவெள்ளியாக முளைவிட்டிருப்பதாகத் தன்னை வர்ணித்துக் கொள்கின்ற வவுனியா சர்வதேச பாடசாலையின் அதிபராகிய கீதாஞ்சலியும் இதில் முனைப்போடு ஈடுபட்டிருக்கின்றார்.

இடம்பெயர்ந்து மனிக்பாம் முகாம்களில் தஞ்சமடைந்ததன் பின்னர், மீள்குடியேற்றத்திற்காக வன்னிப்பிரதேசத்திற்கு அதாவது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும், யாழ். குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றிருக்கின்ற தமிழ் மக்களுக்கு மறுவாழ்வளிக்கப்போவது தானே என்று அமைச்சர் ரிசாட் பதியுதீன் தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகின்றார்.

இவருக்குப் பக்கபலமாக வன்னி மற்றும் யாழ். மாவட்டங்களைச் சேர்ந்த வேலைவாய்ப்பிற்காகக் காத்திருக்கின்ற தமிழ் பட்டதாரிகளும் முழுவீச்சில் பட்டிதொட்டியெங்கும் தீவிரமான தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

பொதுத் தேர்தல் முடிந்ததும், இந்தப் பட்டதாரிகளுக்கு முகாமைத்துவ உதவியாளர் நியமனம் வழங்கப்படும் என்று அமைச்சர் ரிசாட் தெரிவித்திருக்கின்ற ஒரேயொரு உறுதி மொழிக்காகவே அவர்கள் இத்தகைய கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.
ஆக, தமிழர்களின் அரசியல் பிரச்சினையை இராணுவ பலம் பொருந்திய ஒரு பின்னணியில் முழு வீச்சோடு முன்னெடுத்து வந்த விடுதலைப் புலிகள் இராணுவ மற்றும் அரசியல் அரங்கத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள நிலையில் தமிழர்களின் பிரச்சினையை ஓர் ஐக்கிய

தொடர்ச்சி 12ம் பக்கம்

# விளையாட்டுத் தகவல்கள் 280

## 2009ஆம் ஆண்டின் சிறந்த வீராங்கனை விருது செரீனா வில்லியம்ஸிற்கு

உலகின் நம்பர் 1 டென்னிஸ் வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சர்வதேச மகளிர் கூட்டமைப்பின் 2009ஆம் ஆண்டிற்கான தலைசிறந்த வீராங்கனை விருதைப் பெற்றார். சிறந்த இரட்டையர் இணை விருதையும் இவரும் இவரது சகோதரியுமான வீனஸ் ஜோடி பெற்றனர்.




கடந்த ஆண்டு ஆஸ்ட்ரேலிய ஓபன், விம்பிள்டன் சாம்பியன் பட்டம் வென்ற செரீனா, அமெரிக்க ஓபன் அரையிறுதியிலும், பிரென்ச் ஓபன் காலிறுதியிலும் நுழைந்தார். வீனஸ்-செரீனா இணை ஆஸ்ட்ரேலிய ஓபன் மற்றும் விம்பிள்டன் இரட்டையர் டென்னிஸ் சாம்பியன் பட்டங்களை வென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க இளம் டென்னிஸ் நட்சத்திரமான மெலானி ஊடின் என்பவர் யு.எஸ். ஓபன் காலிறுதியில் நுழைந்து அசத்தியதால், புதிய வீராங்கனைக்கான சிறப்பு விருது அளிக்கப்பட்டது. பெல்ஜியம் வீராங்கனை விக்மேயர் டென்னிஸ் ஆட்டத்தில் தன்னை மேம்படுத்திக் கொண்டதற்கான விருதைப் பெற்றார்.

ரஷ்ய வீராங்கனை எலெனா டெமெண்டீவா ரசிகர்கள் ஆதரவு பெற்ற ஆண்டின் சிறந்த வீரர் விருது பெற்றார். இது இணையதள ரசிகர் வாக்கெடுப்பின் மூலம் தேர்வு செய்யப்பட்டதாகும்.

## பிரேசிலில் கால்பந்தை போல இந்தியா வில் ஐ.பி.எல். போட்டி பிரபலம் அடைந்து உள்ளது : வாசிம் அக்ரம்

தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் யாரும் விளையாடவில்லை. அவர்கள் விளையாடுவதால், பாதுகாப்பு பிரச்சினை ஏற்படும் என்று கூறி மத்திய அரசு அவர்களை தவிர்த்தது. இதனால் ஐ.பி.எல். அணிகள் அந்த அணி வீரர்களை ஏலத்தில் எடுக்கவில்லை. பாகிஸ்தான் முன்னாள் கேப்டன் வாசிம் அக்ரமுக்கு ஐ.பி.எல். போட்டியில் தொடர்பு இருக்கிறது. அவர் ஷாருக்கானின் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்கு பந்துவீச்சு ஆலோசகராக உள்ளார்.

ஐ.பி.எல். போட்டி குறித்து வாசிம் அக்ரம் கூறியதாவது, ஐ.பி.எல். போட்டியை ஏராளமான ரசிகர்கள் டெலிவிஷனில் பார்க்கிறார்கள். பிரேசில் நாட்டில் கால்பந்து எப்படி பிரபலமாக இருக்கிறதோ, அதேபோல இந்தியாவில் ஐ.பி.எல். போட்டி மிகவும் பிரபலம் அடைந்து உள்ளது.

கொல்கத்தா அணி தொடர்ந்து தோற்றாலும் மீண்டும் எழுச்சிபெறும். கேப்டன் கங்குலி, பந்து வீச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்குவது எனது வேலை. எனது அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். கங்குலியுடன் இணைந்து பணிபுரிவதில் சிக்கல் இல்லை என்றார்.

## தொடர் தோல்விகளையும் சர்ச்சைகளை யும் சந்திக்கும் பஞ்சாப் அணி

யுவராஜ் சிங் அடிக்கடி பொலிசுக்கு தெரியாமல் வெளியே சென்று விடுகிறார். ஒரு பொறுப்பான வீரராக அவர் நடந்து கொள்வது இல்லை. எங்களுக்கு இருக்கும் பிரச்சினையை அவர் புரிந்து கொள்ள வேண்டும். பாதுகாப்பு விடயத்தை நாங்கள் சாதாரணமாக எடுத்து கொள்ள முடியாது. யுவராஜ் சிங் செயல் குறித்து ஐபிஎல் அணி நிர்வாகத்திடம் புகார் கொடுத்துள்ளதாக சண்டிகார் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

பலத்த பாதுகாப்புக்களுக்கு மத்தியில் இடம் பெறும் ஐபிஎல் போட்டிகளில் சண்டிகார் ஹொட்டலில் தங்கியிருந்த பஞ்சாப் அணி வீரர் யுவராஜ்சிங் இரவு பாதுகாப்பு விதிகளை மீறி ஹொட்டலை விட்டு வெளியே சென்றதையடுத்தே அவர் மீதான புகார் மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹொட்டலை விட்டு வெளியே செல்வதாக இருந்தால் அணி வீரர்கள் தமக்கென பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும். அத்துடன் பாதுகாப்பு அதிகாரிகளின் துணையோடு தான் வெளியே செல்ல வேண்டும் என்ற கடப்பாடு உள்ளது. இவை எதையும் பின்பற்றாத யுவராஜ் இரவு நேரத்தில் பொலிஸ் அதிகாரிகளுக்கு தெரி யாமல் வெளியே சென்று விட்டு நீண்ட நேரத்துக்கு பின்னர் ஹொட்டலுக்கு திரும்பியுள்ளார்.

கிரிக்கெட் வீரர்களுக்கு தீவிரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதால் அவர்கள் பல்வேறு பாதுகாப்பு விதி முறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று உத்தர விடப்பட்டு உள்ளது. எனினும் இந்திய வீரர்கள் பலர் பாதுகாப்பு விதிமுறைகளை சரியாக கடைப்பிடிப்பது இல்லை என்று ஏற்கனவே பல முறை புகார்கள் வந்துள்ளன. இதற்கிடையே பஞ்சாப் அணி உரிமையாளர் நெஸ் வாடியா பொது இடத்தில் புகை பிடித்ததற்காக சண்டிகார் போலீசார் அவருக்கு ரூ.200 அபராதம் விதித்தனர்.

## ஹெய்டன் அதிரடியால் சென்னை சூப்பர் கிங்ஸ் வெற்றி

டெல்லியில் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் டெல்லி டேர் டெவில்ஸ் அணி எடுத்த 185 ரன்கள் இலக்கை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20-வது ஓவர் முதல் பந்தில் எடுத்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மேத்யூ ஹெய்டன் மங்கூஸ் மட்டையைப் பயன்படுத்தி மைதானம் நெடுக டெல்லி பந்து வீச்சாளர்களின் பந்தை சிக்சரும், பவுண்டரி களுமாக பறக்க விட்டார். 9 பவுண்டரிகளையும் 7 மிகப்பெரிய சிக்சர்களையும் அடித்து தூள் பரத்திய ஹெய்டன் 43 பந்துகளில் 93 ரன்களை விளாசி ஆட்டமிழந்தார்.

அதன் பிறகு மோர்கெல் ரன் எடுக்காமலும், கெம்ப் 4 ரன்களுக்கும் ஆட்டமிழக்க சென்னை அணிக்கு சற்றே தடுமாற்றம் ஏற்பட்டது. ஆனால் ரெய்னா ஒரு முனையில் நிலைத்து ஆடியதோடு, பவுண்டரிகளையும், சிக்சர்களையும் அடித்தார். கடைசி 2 ஓவர்களில் 18 ரன்கள் எடுக்க வேண்டியிருந்த போது முரளி விஜய் ஒரு பவுண்டரியையும் ஒரு சிக்சரையும் அடிக்க நிலைமை எளிதானது.

20-வது ஓவரின் முதல் பந்தை தில்ஷான் வீச அதனை ரெய்னா சிக்சருக்குத் தூக்கி வெற்றி ரன்களை அடித்தார். சுரேஷ் ரெய்னா 34 பந்துகளில் 3 பவுண்டரிகள் 3 சிக்சர்கள் சகிதம் 49 ரன்கள் எடுத்து நாட் அவுட்டாக இருந்தார். முரளி விஜய் 14 ரன்கள் எடுத்தார். சென்னை அணி 190/5 என்று வெற்றி பெற்றது. இந்தத் தோல்வியை அடுத்து டெல்லி அணி புள்ளிகள் வரிசையில் 5-வக்டு இடத்திற்குத் தள்ளப்பட்டது. சென்னை அணி 3-வது இடத்திற்கு உயர்ந்துள்ளது.

## சச்சின் பேட்டில் அசத்திய ஹர்பஜன்

டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு எதிராக நடந்த ஐ.பி.எல். 20 ஓவர் லீக் போட்டியில், சச்சினின் பேட்டைப் பயன்படுத்தி அதிரடியாக ரன் குவித்ததாக ஹர்பஜன் தெரிவித்துள்ளார். மும்பையில் நேற்று நடந்த போட்டிக்கு பின்னர் பேசிய ஹர்பஜன், "இன்றைய போட்டியில் நான் விளையாடப் பயன்படுத்தியது சச்சினின் பேட். அந்த பேட்டை நான் பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளித்ததற்காக சச்சினுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

இப்போட்டியில் முதலில் பேட் செய்த மும்பை இண்டியன்ஸ் அணி, சச்சினின் பொறுப்பான ஆட்டத்தால் துவக்கத்தில் சிறப்பாக ரன் சேகரித்த போதும், அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்ததால், 17வது ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 119 ரன்கள் எடுத்து தடுமாறியது.

அப்போது களமிறங்கிய ஹர்பஜன் 18 பந்துகளில் 49 ரன்கள் விளாசி அணியின் ரன் எண்ணிக்கையை 172 ஆக உயர்த்தினார். அவரது இன்னிங்சில் 8 பவுண்டரிகளும், 2 சிக்ஸரும் அடங்கும்.

## மும்பை இந்தியன்ஸ் 07 விக்கட்டுகளால் இலகு வெற்றி

ஐ.பி.எல் போட்டியின் 17ஆவது நாளான டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும், கங்குலி தலைமையிலான கொல்கத்தா அணியும் மோதின. இதில் மும்பை இந்தியன்ஸ் அணி கொல்கத்தா அணியை 7 விக்கட்டுகளால் இலகு வெற்றிக்கொண்டது. இப்போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணி முதலில் முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 03 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 155 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் 75 ஓட்டங்களையும், கங்குலி மற்றும் சகான் ஆகியோர் தலா 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

156 எனும் வெற்றி இலக்கை அடைய பதில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 18.3 ஓவர்கள் முடிவில் 03 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 156 ஓட்டங்களை பெற்று 07 விக்கட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் டெண்டுல்கர் 48 பந்துகளில் 10 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 71 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் சர்மா 2 விக்கெட்டுகளை கைப்பற்றிருந்தார். போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் டெண்டுல்கர் தெரிவு செய்யப்பட்டார்.

## யுவராஜ் - சங்கக்கார இடையில் பிளவு எதுவும் இல்லை : ஜெயவர்த்தன

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் பிளவுகள் எதுவும் இல்லை. வீரர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் உள்ளனர். ஒருசில விடயங்களில் சில சிறிய கருத்து வேறுபாடு இருந்தாலும் அது சரிசெய்யப்பட்டு விட்டது. பஞ்சாப் அணிக்கு அரை இறுதி வாய்ப்பு முடிந்து விடவில்லை. இன்னும் சில போட்டிகளில் வெற்றி பெற்றால் வாய்ப்புக் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளார் ஜெயவர்த்தன.

அணித்தலைவர் சங்ககாரா- யுவராஜ்சிங் ஆகிய இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடு இருப்பதாகவும், இதன் காரணமாகவே பஞ்சாப் அணி தொடர் தோல்விகளை சந்தித்து வருவதாகவும் வெளியாகிய செய்திகளை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே ஜெயவர்த்தன மேற்படி



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# அடமானக்கடனில் அதிகரிப்பு!!

எதிர்பாராதளவிற்கு வீடு - மனைகளின் விலை அதிகரித்துச் செல்கின்றது. மத்திய அரசு, மாநில அரசு, நகர உள்ளூராட்சி அரசுகள், விலை ஏற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு தம்மாலான பல முயற்சிகளை எடுத்து வருகின்ற போதிலும், அதிகரிப்பின் வேகம் கடுகதியாய் செல்வதனை கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக உள்ளது. புதிதாக நிர்மாணம் செய்து விற்க இருக்கும் வீடு-மனைகளாக இருந்தாலும் (Brand New), வாழ்ந்த வீடுகளை விற்பதனாலும் ஒரே நிலைமை தான். இதற்கு பல உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். புதிதாக வீடு - மனை கட்டும் நிறுவனங்கள், முந்தியடித்துக் கொண்டு புதிய தொகுதிகளை சந்தைக்கு கொண்டு வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அவ்வாறு இருந்தபோதிலும், சந்தைக்கு கொண்டுவரும் வீடுகள் - மனைகள் மிகவும் குறுகிய காலத்தில் விற்கப்பட்டு முடிகின்றது. மார்ச் மாதத்தின் ஆரம்பத்திலிருந்து மாத இறுதிக்கிடையில் McCowan / 16th Avenue, Mississauge இல் Creditview / Eglinton, Young / Bloor, Hwy 427 / Eva Road இவ்வாறு பல உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். எதிர்பாராதளவிற்கு வீடு வியாபாரம் ஓகோ என்றுள்ளது. இதற்கு முக்கிய காரணம் வட்டிவீதம் என்று கூறப்படுகின்றது. அத்துடன் கனடிய பொருளாதாரத்தின் எதிர்பாராத வளர்ச்சி, புதிதாக அறிமுகப்படுத்த இருக்கும் வரிமுறைகள், அடமானக்கடனில் நடைமுறைப்படுத்த இருக்கும் இறுக்கமான நிலைமை பொதுவாகக் கூறப்படுகின்றது. இருந்தபோதிலும், என்னுடைய அனுபவத்தின்படி, வீடு - மனை, பொருட்கள் பொதுவாக நுகர்வோர்களின் மனநிலைக்கு ஏற்ப மாறுவதனைக் காணலாம். கடந்த வருடம் ஜனவரியிலிருந்து மார்ச் 2009 வரையான காலம் வீடு - மனை, மற்றைய பொருட்கள் வாங்குவதற்கு மிகச் சிறந்த காலமாக இருந்தது. அப்பொழுது ஒருவரும் வாங்குவதற்கு ஆயத்தமாக இல்லை. ஏனெனில் அதிகமான மக்களின் மனநிலை ஒரேமாதிரி செயல்பட்டது. இதுவே மனதின் நிலை. பின்னர், இப்பொழுது ஒவ்வொருவரும் அடிபட்டு வாங்கும் நிலை, ஒரு கிழமை இருகிழமை இரவு பகலாக வரிசையில் நின்று வாங்குகின்றார்கள். இந்த நிலைமை எவ்வளவு காலம் தொடரும், இந்த வருடத்தின் ஆரம்பத்தில் முதல் 6 மாதம் தொடரலாம் என்றார்கள். இப்பொழுது 2010 ஆம் ஆண்டு சிறந்த ஆண்டாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலை கனடிய மத்தியவங்கியின் வட்டிவீத அதிகரிப்பை விரைவுபடுத்தும் என்பது மட்டும் உறுதியாக கூறலாம். ஆரம்பத்தில் பொருளாதார இறுக்கத்தை மனதில் கொண்டு கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் திரு. மார்க் கார்னி வட்டிவீத அதிகரிப்பு வருடக்கடைசியில் அல்லது இலையுதிர்காலத்தில் ஏற்படும் என எதிர்வு கூறியிருந்தார்.

இன்றைய நிலையில் அதற்கு முன்னர் அதிகரிப்பு ஏற்படும் என கட்டியம் கூறப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் மத்திய வங்கியின் ஆளுனரும் அவரது சகாக்களும் 8 தடவை கூடி, மத்திய வங்கியின் வட்டிவீதம் சீர் செய்யப்படுவது வழக்கமான முறையாக காணப்படுகின்றது. இந்த வருடத்தில் ஏற்கனவே ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் கூடப்பட்டது. வட்டிவீதத்தில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. 0.25% என்ற சரித்திரத்திலேயே மிகக் குறைந்த மத்திய வங்கியின் வட்டி வீதமாகவே காணப்படுகின்றது. இதனால் முதன்மை வட்டிவீதம் 2.25% ஆகவும், 5 வருடத்திற்குரிய மாறாத (Closed Mortgage) 3.69% ஆகவும், 5 வருடம் மாறுகின்ற வட்டிவீதம் 1.85% (முதன்மை வட்டிவீதம் - 0.40%) ஆகவும் காணப்படுகின்றது. இது கனடிய அடமானக்கடன் கொடுப்பனவில் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இந்த நிலைமை எவ்வளவு காலம் தொடரலாம்! இந்த வருடத்தில் மத்தியவங்கி ஆளுனரும் சகாக்களும் மேலும் 6 தடவைகள் முறையே ஏப்ரல் 20, யூன் 01, யூலை 20, செப்ரெம்பர் 08, ஒக்ரோபர் 19, மற்றும் டிசம்பர் 07ஆம் திகதி கூட இருக்கிறார்கள்.

தொடர்ச்சி 27ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 316**

**HomeLife GTA Realty Inc., Brokerage***

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng. (Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto
Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga
Tel.: 905.712.2666

**Condo. for sale**

- 2 bedroom
- 2 washrooms
- Lamineated Floor
- Asking $159, 900 Flexible closing



**House for Sale**

- Detached 3 Bedroom, Basement finished house for sale.
- 5 Appliances
- New paint
- Updated washroom
- Finch & Dixe (Pickering)
- Asking Only $299,990 (Don't miss this)

**Condo. for Sale**

**MCLEVIN & NEILSON (Mayfair Buildings)**

- 2 Bedroom corner unit
- Laminated, ceramic floor
- Laminated floor, Ceramic floor
- 24 hours security, swimming pool, in a separate building
- Close to doctors, pharmacy, mall, ttc, highway....
- 1265 sqft
- 2 parking, 1 locker included.
- Price $184,900

**Exciting Commercial Plaza for Units for Sale**

- 25,000 sqft.
- Retail , Restaurant, Professional Offices
- Price Starts for $168,888
- Facing on Woodbine Ave.
- 38 Units Available
- Sqft starts fee $280

**Buying or Selling**

**Through Us**

**You have a chance to Win...**

a) 300 series brand new BMW car
b) Cuba trip to 2 for one week (full package)
c) 42" LCD and d) 10 Consolation Prizes

your lucky draw date **Sunday August 29, 2010**

**Commercial unit for sale - Markham**

- Markham Rd. / Major Mackenzie
- 1,233 Sq.Ft.
- Prime location, visible Strip Plaza
- Suitable Uses Restaurant/Retail (Currently running as a bakery business.
- Asking $349/sqft

**Commercial/Retail for Lease**

- GTA Square Mall
- Rent $950 Gross Lease
- Great Opportunity!
- Only few units left on the mainfloor
- Underground And Surface Parking
- Don't miss this chance.

**Nantha Aiyadurai**

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# அதிக அகதிகளை...

வருடம் ஒன்றுக்கு 2,500 ஆல் அதிகரிக்கப்படும், இவ் அதிகரிப்பால் கனடா வருடம் ஒன்றிற்கு 14,500 அகதிகளை அவர்கள் வாழும் பாதுகாப்பற்ற நாட்டிலிருந்து கனடாவில் குடியேறு வதற்காக அனுமதிக்கப்போகின்றது.

கனடாவிற்கு இவ்வாறு கொண்டுவரப்படும் அகதிகள் விரைவில் கனடாவில் வாழும் மற்ற சமூகங்களுடன் இணைவதற்காக வழங்கப்படும் உதவிகளுக்காக செலவிடப் படும் தொகையும் $9 மில்லியன் டொலரால் அதிகரிக்கப்படவுள்ளது. இவ்வாறு அகதிகள் கனடாவின் மற்ற சமூகங்களுடன் இணைவதற்காக வழங்கப்படும் உதவிகளுக்காக செலவிடப்படும் பணம் இந்த அதிகரிப்புடன் வருடம் ஒன்றுக்கு $54 மில்லியன் டொலர் ஆக உயர்கின்றது. இவ் உதவிகளுக்காக வழங்கப்படும் பணம் கடந்த பத்து வருடங்களில் இப்போதே முதல் தடவையாக அதிகரிக்கப்படுகின்றது.

கனடாவின் தற்போதைய அகதிகளுக்கான விசாரணை நடைபெறும் முறை பல சிக்கல்களை கொண்டதும் நீண்ட காலத்தை எடுப்பது ஆகும். இதனால் இம்முறையை பலர் தவறாக பயன்படுத்துகிறார்கள். தற்போதைய அகதிகளை விசாரிக்கும் முறையிலுள்ள தவறுகளால் இம்முறையை தவறாக பயன்படுத்தி அகதிநிலை கேட்ட ஒருவரை கண்டிபிடித்து நாடுகடத்த 4.5 வருடங்களிலிருந்து 10 வருடங்கள் வரை எடுக்கிறது. இவ்வாறு அகதிநிலை கோரும் முறையை தவறாக பயன்படுத்தியவர்களில் 15 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இன்னமும் நாடு கடத்தப்படாமல் இருக்கிறார்கள். 38 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் ஒளித்து வாழ்கிறார்கள். இவர்களை தேடிக்கண்டுபிடித்து நாட்டை விட்டு வெளியேற்ற அரசாங்கத்திற்கு அதிகளவு பணம் செலவாகின்றது.

தற்போது குடிவரவு திணைக்களத்தின் அகதிகளை விசாரிக்கும் சபையில் 60 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களின் அகதிக் கோரிக்கை விசாரணைக்காக காத்திருக் கின்றது. ஒரு அகதிக்கோரிக்கையின் விசாரணை முடிய 19 மாதங்கள் எடுக்கின்றது. அகதி நிலை கோருபவர் களின் எண்ணிக்கை மேற்குலக நாடுகளில் நாட்டின் சனத்தொகையுடன் ஒப்பிடும்போது கனடாவில் தான் அதிகமாக இருக்கிறது. கனடாவில் அகதிநிலை கோருபவர்களில் 58% ஆனோர் உண்மையான அகதிகள் அல்ல.



இவ்வாறான தவறுகள் நிறைந்த கனடாவின் அகதிகளுக்கான விசாரணை நடத்தும் முறையை புதிய சட்டமூலத்தால் அரசு மாற்றி அமைக்கவுள்ளது. இதனால் அகதிகளுக்கான விசாரணைகள் துரித கெதியில் நடந்து உண்மையான அகதிகள் விரைவில் ஏற்றுக்கொள்ளப்படுபவர். போலியாக அகதிநிலை கோரியவர்கள் விரைவில் நாட்டைவிட்டு வெளியேற்றப்படு வர். கனடாவின் அகதிகளுக்கான விசாரணை முடிய நீண்டகாலம் எடுப்பதாலும் போலியான அகதிகளை நாட்டை விட்டு வெளியேற்ற அதிகூடிய காலம் எடுப்பதாலும் பலர் இம்முறையை தவறாக கையாள முயற்சிக்கிறார்கள் என கனடாவின் கணக்காளர் நாயகமும் (Auditor General of Canada) தெரிவித்துள்ளார்.

கனடாவில் அறிமுகப்படவுள்ள புதிய அகதிகளுக்கான விசாரணை முறைமூலம் அகதிநிலை கோருபவர்களின் கோரிக்கையை முதலில் IRB எனப்படும் கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகளுக்கான சபை (Immigration and Refugee Board) உறுப்பினரான ஒரு அரசாங்க உத்தியோகத்தரே விசாரித்து முடிவு எடுப்பார்.

இவ் அரச உத்தியோகத்திரின் முடிவு அகதிநிலை கோரியவருக்கு சாதகமாக அமையவில்லை எனில் அவரின் மேன்முறையீட்டை IRB யிலுள்ள ஆளுநர் ஆல் நியமிக்கப்பட்டவர்கள். (Governor in Council Appointees) விசாரிப்பார்கள். இம்மேன் முறையீட்டிலும் அகதிநிலை கோரியவருக்கு சாதகமான முடிவு கிடைக்கவில்லையாயின் அவர் மத்திய நீதிமன்றத்தில் (Federal Court) வழக்கு தொடரலாம்.

IRB யில் மேன்முறையீடும் உரிமை பாதுகாப்பான நாடுகளில் இருந்து கனடா வந்து அகதிநிலை கோரியவருக்கு வழங்கப்படமாட்டாது. இவ்வாறான பாதுகாப்பான நாடுகளில் இருந்து வந்து அகதிநிலை கோரியவர்கள் முதல் விசாரணையில் பாதகமான முடிவு கிடைத்தால் அவர்கள் மத்திய நீதி மன்றத்தில் வழக்குத் தொடரலாம்.

2009 ஆம் ஆண்டு அகதிநிலை கோரியவர்களில் கனடா 42% மானவர்களை அங்கீகரித்துள்ளது. இதே ஆண்டு அகதிநிலை கோரியவர்களில் அமெரிக்கா 45% மானவர்களையும், ஐக்கிய இராச்சியம் 27% மானவர்களையும், பிரான்ஸ் 30% மானவர்களையும், அவுஸ்ரேலியா 28% மானவர்களையும் அங்கீகரித்துள்ளனர்.

இப்புதிய IRB விசாரணை மூலம் 19 மாதங்கள் வரை காத்திருக்கும் உண்மையான அகதிகள் இனிமேல் 2 மாதங்களுக்குள் அகதிகளாக ஏற்றுகொள்ளப்பட்டு விடுவார்கள் என்று அமைச்சர் கூறினார்.

இதேபோல் இப்புதியமுறை மூலம் கனடாவின் அகதி நிலை கோரும் முறையை தவறாக பயன்படுத்த முயன்ற போலி அகதிகள் IRB விசாரணை முடிவடைந்து ஒரு வருடத்திற்குள் நாட்டைவிட்டு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றார்.

இவ்வாறு அகதிநிலை கோரும் முறையை தவறாக பயன்படுத்த முயன்றவர்களை ஒரு வருடத்தினுள் கனடாவை விட்டு திருப்பி அனுப்பினால், இவ்வாறு திருப்பி அனுப்பப்படும் ஒவ்வொருவருக்கும் செலவாகும் $31 ஆயிரம் டொலர் வரியிறுப்பாளர்களுக்கு மீதமாகின்றது.

*நன்றி - கனேடிய பிரதமர் அலுவலகம்*

# விளையாட்டுத்...

தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்றைய ஆட்டத்தில் சங்கக்காரவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் இன்றைய போட்டியில் அணித்தலைவராக ஜெயவர்த்தன செயற்படுவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஐ.பி.எல். போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 6 போட்டியில் 5 இல் தோற்றது. ஒரு போட்டியில் மட்டும் வெற்றி பெற்றது.

## டெல்லி டெயாடெவில்ஸ் 40 ஓட்டங்களால் இலகு வெற்றி

மூன்றாவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி இந்தியாவில் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகள் ஏனைய அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும். இந்த நிலையில் டெல்லியில் நடைப்பெற்ற ஐ.பி.எல் போட்டியில் கௌதம் கம்பீர் தலைமையிலான டெல்லி டெயாடெவில்ஸ் அணியும், கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின. இதில் டெல்லி டெயாடெவில்ஸ் 40 ஓட்டங்களால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை இலகு வெற்றிக்கொண்டது.

இப்போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி டெயாடெவில்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி டெயாடெவில்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 04 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 177 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் வார்ணர் 69 பந்துகளில் 09 நான்கு ஓட்டங்கள் 05 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 107 ஓட்டங்களையும், கொலிங்வுட் 45 பந்துகளில் 03 நான்கு ஓட்டங்கள் 02 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 53 ஓட்டங்களையும் பெற்றனர்.

## பந்து வீச்சில் லங்வெல்ட் 02 விக்கெட்டுகளை கைப்பற்றிருந்தார்.

178 எனும் வெற்றி இலக்கை அடைய பதில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 09 விக்கெட்டுகளை இழந்து 137 ஓட்டங்களை பெற்று 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. துடுப்பாட்டத்தில் கெயில் 30 ஓட்டங்களையும், ஹசி 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் டொனால்ட் 02 விக்கெட்டுகளை கைப்பற்றிருந்தார். போட்டியின் ஆட்டநாயகனாக டெல்லி டெயாடெவில்ஸ் அணி வீரர் வார்ணர் தெரிவு செய்யப்பட்டார்.

## மான்செஸ்டர் யுனைடட் கழக இளம் வீரர் நன்னியின் ஒப்பந்த காலம் நீடிப்பு

மான்செஸ்டர் யுனைடட் கழகத்தின் இளம் வீரர் நன்னியின் ஒப்பந்த காலம் மேலும் நான்கு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 23 வயதான போர்த்துக்கல் தேசிய அணியின் நன்னி, சிறந்த முறையில் விளையாடி வருவதாக மான்செஸ்டர் யுனைடட் கழகத்தின் முகாமையாளர் சேர் அலெக்ஸ் பெர்கசன் தெரிவித்துள்ளார். நன்னியின் திறமைக்கு ஏற்ற பலன் கிட்டியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நன்னி இதுவரையில் மான்செஸ்டர் யுனைடட் கழகத்தின் சார்பில் 97 போட்டிகளில் பங்கேற்று 12 கோல்களைப் போட்டுள்ளார்.

மான்செஸ்டர் யுனைடட் கழகத்துடன் மீண்டும் ஒப்பந்தம் செய்து கொள்ள கிட்டியமை பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக நன்னி தெரிவித்துள்ளார். மான்செஸ்டர் யுனைடட் கழகத்தில் விளையாடக் கிட்டியமை ஒரு கனவு நனவானதைப் போன்றதென அவர் குறிப்பிட்டுள்ளார். அணியின் பயிற்றுவிப்பாளர் குழாம் பல்வேறு பாடங்களை தமக்கு புகட்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## 20 உலகக்கோப்பை: பாக். அணித் தலைவர் அ.ஃப்ரிடி

மேற்கிந்தியத் தீவில் நடைபெற உள்ள இருபது ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடருக்கான பாகிஸ்தான் அணியின் தலைவராக சகலதுறை ஆட்டக்காரர் ஷாஹித் அ.ஃப்ரிடி அறிவிக்கப்பட்டுள்ளார். அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தின் போது பந்தைப் பல்லால் கடித்து சேதப்படுத்திய குற்றத்திற்காக, அ.ஃப்ரிடிக்கு ரூ.30 லட்சம் அபராதம், மற்றும் 6 மாத காலம் நன்னடத்தையுடன் விளையாட வேண்டும் எனக் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தண்டனை விதித்தது. இந்நிலையில், இன்சமாம் உல்ஹக் போன்ற மூத்த வீரர்கள் அ.ஃப்ரிடியை இருபது ஓவர் உலகக்கோப்பை அணியின் தலைவராக நியமிக்க வேண்டும் என வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கது.

## உமர் குல் அணியில் இடம் பிடிக்க தனது திறமையை நிரூபிக்க வேண்டும் : அ.ஃப்ரீடி

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள 20-20 உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் பாகிஸ்தான் அணியில் நிரந்தர இடம் பிடிக்கவேண்டுமென்றால் வேகப்பந்து வீச்சாளர் என்று பாகிஸ்தான் அணித் தலைவர் ஷாகித் அ.ஃப்ரீடி தெரிவித்துள்ளார். தென் ஆப்பிரிக்காவில் நடைபெற்ற உலகக் கோப்பை போட்டிகளிலும் கடந்த முறை பாகிஸ்தான் சாம்பியன் பட்டம் வென்ற இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கோப்பை போட்டிகளிலும் உமர் குல் சிறப்பாகவே செயல்பட்டார். ஆனால் சமீப காலங்களில் அவரது ஃபார்ம் சிறப்பாக இல்லை என்றும் பாகிஸ்தான் அணி இம்முறை 3 வேகப்பந்து வீச்சாளர்களை அணியில் சேர்க்க இயலாது என்றும் கூறியுள்ளார் அ.ஃப்ரீடி. இந்தக் காரணங்களினால் உமர் குல் அணியில் இடம்பெறுவதே தற்போது சந்தேகமாகியுள்ளது.

# வீட்டுக் கடனை முன்னரே செலுத்துவதற்கான அபராதத் தொகை பெருகி வரும் புகார்கள்

## Pre Payment Panelty

ஐந்து வருட நிலையான வீட்டுவட்டி வீதங்கள் மிகக் குறைந்த அளவில் கிடைக்கின்றன. கடன் கொடுக்கும் மிகப் பெரிய வங்கிகள் குறைந்த வட்டியை பெருமளவில் விளம்பரம் செய்கின்றன. மாறும் வட்டி வீதங்களும் கூட குறைந்த அளவில் கிடைக்கின்றன. ஒருகாலத்தில் பிரைம் என்று சொல்லப்படும் முதல் தர வாடிக்கையாளர் வட்டி வீதத்திலிருந்து நிதி நிறுவனங்கள் 0.95 சதவீதம் வரை குறைத்துக் கொடுத்தன. சற்றே ஓராண்டுக்கு முன் நிலைமை மாறியது. பிரைம் வட்டி வீதத்துடன் ஒரு சதவீதம் வரை கூடுதலாக மாறும் வட்டிவீதங்கள் இருந்தன. நிலைமை இப்போது மீண்டும் மாறுவதாகத் தெரிகின்றது. இப்போதைய காலகட்டத்தில் பிரைம்லிருந்து 30 புள்ளிகளோ அல்லது அதற்கும் அதிகமாகவோ கூட மாறும் வட்டி வீதத்தைப் பெறலாம். சில நிபந்தனைகள் (1) வெவ்வேறு நிதி நிறுவனங்களில் நீங்கள் விசாரிக்கிறீர்கள், (2) உங்கள் வருமானமும், கடன் சரிதமும் நல்ல நிலையில் இருக்கின்றது.

பிரச்சினை எப்போது எழுகின்றது என்றால் அடமானக்கடன் முடிவுத் திகதிக்கு முன் வேறு ஒரு நிதி நிறுவனத்துக்கு நீங்கள் மாற்ற முயன்றாலோ அல்லது வீட்டை விற்றாலோ தான் எழுகின்றது. என்ன பிரிச்சினை? அபாரதத் தொகை (Penalty) கட்ட வேண்டும்? எவ்வளவு? அதுதான் மிகப் பெரிய கேள்வி. சரியான விடை கிடைக்காது. உத்தேசமாகச் சொல்வார்கள். அதுவும் மாறும் என்பார்கள். ஏன்? என்று விபரிப்பது தான் இந்தக் கட்டுரையின் நோக்கம்?

மாறும் வட்டி வீதத்தில் உங்கள் வீட்டுக் கடனை வைத்திருந்தால் பெரும்பாலும் அபாரத வட்டி மூன்று மாத வீட்டுக்கடன் வட்டியாகத்தான் இருக்கும். நிலையான வட்டி வீதத்தில் வீட்டுக் கடனை வைத்திருந்தால், கற்பனைக்கு எட்டாத அபாரத வட்டியை கடந்த ஒருவருட காலத்தில் பலபேர் பல்வேறு வங்கிகளிலும் கேட்டு அதிர்ச்சி அடைந்திருக்கின்றனர். ஆத்திரம் அடைந்திருக்கின்றனர். ஏன்? வங்கியின் மேதாவிகள் கடன் கொடுத்த காலத்தில் இதை விளக்கவில்லை என்று புகார்கள் எழுந்துள்ளன. வங்கியின் மூலம் கடன் பெற்றவர்களின் நிலைப்பாடு இது என்றால், வீட்டுக் கடன் முகவர்கள் (mortgage brokers) மூலம் கடன் பெற்றவர்களின் நிலை மேம்பட்டிருந்ததா? அது இன்னும் மோசம். பலபேருக்கு முகவர்களின் மேல் சொல்ல முடியாத கோபம் எழுந்துள்ளது.

காரணம் வங்கியில் வேலை பார்ப்பவர்களாகட்டும், இல்லை முகவர்களாகட்டும் பலபேருக்கு தெளிவு இருப்பதில்லை. நுட்பமான அறிவும் இருப்பதில்லை. இதுதான் உண்மை.

வங்கியின் உயர் மட்டத்துக்கோ அல்லது வங்கிகளுக்கான ஓம்பட்ஸ்மெனுக்கு (Ombudsman) பல பேர் புகார் செய்து பலன் ஒன்றும் இல்லாமல் விரக்தி அடைந்தது தான் மிச்சம்.

புகார்களுக்குக் கிடைக்கும் நிலையான பதில் ஏறத்தாழ இப்படித்தான் இருக்கும். 'உங்களுக்குக் கடன் கொடுத்த போது தரப்பட்ட ஆவணங்களில் (Documents) அபராத வட்டி எப்படிக் கணக்கிடப்படும் என்று ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது. இந்த அபராதத் தொகை சட்டபூர்வமானது. செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறிக்கிறீர் கள். அதனால் தான் இந்த அபராதம்.

ஒருவங்கியில் சென்ற ஏப்ரலில் ஒருவர் அபராதத் தொகையை விசாரித்தார். வங்கி $15,000 டொலர்கள் என்றது. அதிகம் என்று சும்மா இருந்து விட்டு மீண்டும் ஒரு மாதம் கழித்து இப்போது கடனை முடித்தால் எவ்வளவு அபராதத் தொகை என்று வங்கியில் கேட்டார். $20,000 டொலர்கள் என்றது வங்கி. அவருக்கு மார் அடைப்பு வராத குறைதான்.

இது சாத்தியமா?
சாத்தியமே! வட்டி வீதங்கள் மாறினால் அபராதத் தொகையும் மாறலாம். கணக்கிடப்படும் முறை மாறினால் அபராதத் தொகையும் மாறலாம்.

பிரச்சினை பெரும்பாலும் நிலையான வட்டி வீதத்தில் வீட்டுக்கடனை வைத்திருந்து முடிக்க நினைக்கும் போதே எழுகின்றது.

மூன்றுமாத வட்டி அல்லது வட்டி வீதங்களில் உள்ள வித்தியாசம் மீதமுள்ள காலத்துக்கு இதில் எது அதிகமோ அது அபராதத் தொகையாகக் கணக்கிடப்படும். இது நிச்சயம் ஆவணத்தில் சொல்லப்பட்டிருக்கும். வட்டி வீதங்களில் உள்ள வித்தியாசத்தை நடைமுறையில் கணக்கிடும் போது தான் வித்தியாசங்கள் எழுகின்றன. விபரங்கள் ஒரே மாதிரியாக இருந்தாலும், ஒவ்வொரு வங்கியும் ஒவ்வொரு விதமான அபராதத் தொகையைக் கணக்கிடலாம். ஒன்றின் அபராதத் தொகை மற்றதினின்று பெரிதும் வேறுபடலாம். இதை சில உதாரணங்கள் மூலம் விளக்குவோம்.

### - துறவி -

வீட்டுக்கடன் $100,000
வீட்டுகடன் எடுத்த காலத்தில் வங்கியின் இணையதளத்தில் 5 ஆண்டுகளுக்கு இருந்த வட்டி வீதம் (rate) 6 சதவீதம். இதை Posted Rate என்பார்கள்.

வாடிக்கையாளர் பெற்றது 5 சதவீதம் என்போம். இங்கு தள்ளுபடி அல்லது Discount 1%. (6 - 1) = 5%. வாடிக்கையாளர் வட்டி வீதம் 5 சதவீதம். இப்போதைய 3 ஆண்டுகளுக்கு ஆன இணையதள ரேட் 5 சதவீதம் என்போம். வாடிக்கையாளர்களுக்குத் தரப்படும் சிறப்பு வட்டிவீதம் (இணையதளத்தில் அறிவிக்கப்பட்டது) 3 சதவீதம் என்போம்.

வீட்டுக்கடன் மீதம் உள்ள காலங்கள் 36 மாதங்கள். இந்த விபரங்களின் அடிப்படையில் சட்டபூர்வமான முறையில் எவ்வாறெல்லாம் அபராத வட்டியைக் கணக்கிடலாம் என்று பார்ப்போம்.

உதாரணம் 1. 3 மாத வட்டி - $100,000 அசல் x 0.05 வட்டிவீதம் x 3/12 மாதங்கள். 3 மாதவட்டி $1250.

வட்டிவீத வித்தியாசத்தின் அடிப்படையில் மற்ற உதாரணங்கள் தொடர்கின்றன.

உதாரணம் 2. இப்போதைய வட்டிவீத வித்தியாசம் (ஆரம்ப வாடிக்கையாளர் வட்டிவீதம் - தற்போதைய சிறப்பு வட்டிவீதம்)

இதன் அடிப்படையில் வட்டிவீத வித்தியாசம் (5 - 3) 2 சதவீதம்
அபராத வட்டி : (அசல் $100,000 x 0.02 வட்டி வீத வித்தியாசம் x 3 மீதமுள்ள காலம்) = $6000

உதாரணம் 3. இங்கு 3 வருடத்துக்கு (மீதி உள்ள கடன்காலம்) வட்டிவீத வித்தியாசம் கணக்கிடப்படுகின்றது. இப்போதைய வட்டிவீத வித்தியாசம்.
= ஆரம்ப வாடிக்கையாளர் ரேட் - இன்றைய இணையதள ரேட்.
= 5 - 4 = 1 சதவீதம். அதாவது $3000 அபராத வட்டி.

உதாரணம் 4. இப்போதைய வட்டிவீத வித்தியாசம்
= ஆரம்ப வாடிக்கையாளர் இணையதள ரேட் இன்றைய சிறப்பு இணையதள ரேட்.
= 6 - 3 = 3 சதவீதம். அதாவது $9000 அபராதவட்டி. பொதுவில் சில விதிகளைக் கூறலாம்.

- ரேட் தள்ளுபடி அதிகமாகத் தரப்பட்டிருந்தால் அபராதத் தொகையும் அதிகமாக இருக்க வாய்ப்புக்கள் உண்டு.
- வட்டி வீத வித்தியாசம் அதிகம் என்றால்

தொடர்ச்சி 27ஆம் பக்கம்



# இந்தியா: பெண்கள் இடஒதுக்கீடு மசோதா

# சக்தி கொடு!

இந்தியாவில் பீகார் தலைநகர் பாட்னாவில் நடைபெற்ற கூட்டம். குளிர்பதனப்படுத்தப்பட்ட அறைதான், ஆனால், விவாதம் அனல் பறந்தது. உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய விவாதம் அது. அந்தக் கூட்டத்தில் பேசியவர்களில் சிலருக்கு அதிகாரப் பரவல், லஞ்சத்தையே பரவலாக்கும் என்ற கருத்து இருந்தது. அதனால் அவர்கள் உள்ளாட்சி அதிகாரத்தைப் பெண்கள் கையில் ஒப்படைப்பதை எதிர்த்தார்கள். அவர்களில் ஒருவர் அடுக்கு மொழி, இலக்கிய மேற்கோள்கள், உருதுக் கவிதை வரிகள், நயமான நகைச்சுவை எல்லாம் சரியான விகிதத்தில் சேர்த்து ஆங்கிலத்தில் மிக அழகாகப் பேசினார். அந்தக் கூட்டத்திற்கு உள்ளாட்சி தலைவர்களாக இருந்த பெண்களும் வந்திருந்தார்கள். பத்திரிகைகளில் அவ்வப்போது பிரசுரமாகும் படங்களில் நீங்கள் பார்த்திருக்கக் கூடிய, சிவப்பு, மஞ்சள், மிட்டாய் என ஆழ்ந்த வண்ண ஆடைகளில் ‘குங்கட்’ என்று இந்தியில் சொல்லப்படும் முக்காடு அணிந்த பெண்கள். அவர்களில் முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் எழுந்து பேசினார்.



“ஐயா பேசியது எனக்குப் புரியவில்லை. ஆனால், அவர் எங்களைப் பற்றித்தான் ஏதோ பேசினாருங்கிறதை, நீங்க எல்லாரும் எங்களைப் பார்த்து சிரிச்ச சிரிப்பிலிருந்து புரிந்துகொண்டேன். பொம்பளைங்க கையில அதிகாரம் கொடுத்தா என்ன பெரிசா கிழிச்சிடுவாங்கனு கேட்கிறது எனக்குத் தெரியும். என் அனுபவத்தைச் சொல்லுறேன். எங்க கிராமத்தில அப்ப ஆஸ்பத்திரி கிடையாதுங்க. அதை யாரும் பெரிசா எடுத்துக்கலைங்க. என் சிநேகிதி விமலாதேவிக்கு பிரசவ வலி ஏற்படவரைக்கும் நானும் அதை நினைச்சுப் பார்த்ததிலீங்க. விமலா, என் வயசுக்காரிங்க. அப்ப நானும் உண்டாகியிருந்தேன். அவளுக்கு வலி எடுத்ததும் பக்கத்து டவுன் ஆஸ்பத்திரிக்கு வண்டி கட்டி எடுத்துட்டுப் போனாங்க. போற வழியிலேயே அவளுக்கு ஜன்னி கண்டு இறந்து போயிட்டா. செய்தி கேட்டப்ப எனக்கு இடி விழுந்த மாதிரி ஆயிடுச்சி. நாளைக்கு எனக்கும் இப்படித்தான் நடக்கும்னு தோணிச்சு. ஒண்ணாப் பொறந்தோம், ஒண்ணா திரிஞ்சோம், ஒரே மாதிரிதானே போவோம்? அன்னிக்கு நினைச்சேங்க. நான் போனாலும் பரவாயில்லை, இனி இந்தக் கிராமத்துப் பொம்பளை எவளும் பேறு காலத்தில ஆஸ்பத்ரியில்லைனு சாவக்கூடாது. நமக்குனு ஒரு ஆஸ்பத்ரி வேணும்.

பஞ்சாயத்தில என்னை தலைவியா தேர்ந்தெடுத்ததும், முதல் வேலையா கலெக்டரைப் பார்த்து ஆஸ்பத்ரி வேணும்னு கேட்டேன். செய்ய வேண்டியதுதான். ஆனா அரசாங்கத்தில பணம் இல்லை அப்படின்னாரு. நான் விடவில்லை. என் பிடிவாதத்தைப் பார்த்து, “சரி நீ ஒண்ணு செய்யு. நீ உங்க ஊர்ல நிலத்துக்கு ஏற்பாடு செய். நான் அதற்கப்புறம் அரசாங்கத்தில பேசி பணத்திற்கு ஏற்பாடு செய்யறேன்” என்று சொன்னார். ஊர்ல வந்து கூட்டம் போட்டு பேசினோம். யாரும் நிலம் கொடுக்கத் தயாரில்லை. புறம் போக்கு நிலத்தை வைச்சிருந்த பெரியவரிடம் போய்க் கேட்டேன். “வெட்டிப்புடுவேன் சீவிபுடுவேன்”னு மிரட்டினாரு. என் புருசன், “இதெல்லாம் உனக்குத் தேவையாடி? கையைக் கால முழுசா காப்பாத்திகிட்டு பொழைக்கிற வழியைப் பாரு”னு சொன்னாரு. நான் விடறதா இல்லை. கோயிலுக்கு சொந்தமா ஒரு நிலம் சும்மாக் கிடக்குதுனு சொன்னாங்க. போய் சாமியாரைப் பார்த்தேன். அவரு உடனே சம்மதிக்கலை, ஆனாலும் நான் நடையா நடந்தேன். கடைசியில நிலத்தை ஆஸ்பத்ரிக்குத் தர்றேன்னு ஒத்துக்கிட்டாரு. கலெக்டர்கிட்ட போய் நிலம் கிடைச்சிருச்சு பணம் கொடுங்கனு கேட்டேன். ஆறு மாசம் நடையா நடந்தப்புறம் வேலைக்கு சாங்'ன் ஆச்சு. கட்டிடம் கட்டி முடிய ஒரு வருசம் ஆச்சு. ஆஸ்பத்ரி கட்டிடம் வந்திருச்சு. ஆனால், டாக்டர் வரலை. அதற்கும் நடையா நடந்தோம். டாக்டர் போஸ்ட் சாங்ஷன் செஞ்சாங்க. ஆனா டாக்டர் யாரும் வர மாட்டேன்னுட்டாங்க. இந்தப் பட்டிக்காட்டில வந்து எப்படி குடியிருக்கிறதுனு கேட்டாங்க. வாங்க வந்து இருங்கனு, எல்லா வசதியும் செய்து தாரோம்னு நாலைஞ்சு பேரைக் கால்ல விளாத குறையா கெஞ்சி கடைசில ஒருத்தர் வந்தார்.”

கூட்டத்தில் ஒருவர் கேட்டார்: “நீங்க சொல்றதைப் பார்த்தா அஞ்சு வருஷமும் இந்த ஒரே ஜோலியா அலைஞ்சிருக்கீங்க போலிருக்கே?”

“ஆமங்க. எனக்கு எப்படியாவது என் ஐந்து வருஷ காலத்துல ஆஸ்பத்திரியைக் கொண்டாந்திரணும்னு.”

“ஏன் அப்படி?”

“அஞ்சு வருசம் கழிச்சு ஒரு ஆம்பளை பிரசிடெண்டா வந்தா, இந்த அலைச்சலுக்கு ஆஸ்பத்ரியும் வேணாம் ஒண்ணும் வேணாம்னு இந்த வேலையை அப்படியே நட்டாத்தில விட்டுடுவாங்கனு தோணிபோச்சு. ஆம்பிளைங்களுக்கு பிரசவ வலினா என்னனு தெரியாதுயா? பிரசவத்திற்குப் போற வழிலே ஜன்னி கண்டு செத்த ஆம்பளைய நீங்க எங்காச்சும் பார்த்திருக்கீங்களா?”

கூட்டத்தில் இருந்த அனைவருக்கும் பிடரியில் அடி விழுந்தாற்போல் பொடேரென்றது. எத்தனை உண்மை! ஒரு பெண்ணின் பார்வையில் பிரசவ ஆஸ்பத்ரி தலையாய தேவை. ஆணைப் பொறுத்தவரைக்கும் மற்றவைகளைப் போல அதுவும் ஒன்று. வளர்ச்சித் திட்டம் என்பதில் ஆணின் பார்வை வேறு பெண்ணின் பார்வை வேறு. அவற்றில் ஆணின் முன்னுரிமை வேறு, பெண்ணின் முன்னுரிமை வேறு. இது ஒன்றே பெண்கள் ஆட்சியில் பெருமளவு பங்கு பெற வேண்டியதின் அவசியத்தைச் சொல்லும்.

நூறாவது பெண்கள் தினம் என்ற பெருமிதத்துடன் இந்த வருடம் மார்ச் 8ஆம் தேதியை உலகம் கொண்டாடிய தருணத்தில் அந்த மகத்தான வரலாற்றுத் திருப்பத்தை இந்தியா சாதித்துக் காட்டியது. இந்தியாவில் மத்தியில் ஆட்சி செய்யும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் கனவுச் சட்டமான, பெண்கள் இடஒதுக்கீடு மசோதா, ராஜ்யசபாவில் அமோக ஆதரவுடன் நிறைவேறியது. லோக்சபா மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் இந்த சட்ட மசோதாவுக்கு ஆதரவாக 186 எம்.பி.க்களும், எதிர்ப்பாக ஒரே ஒரு எம்.பி.யும் ஓட்டளித்தனர். மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலான உறுப்பினர் கள் ஆதரவுடன் மசோதா நிறைவேறியது, 14 ஆண்டு கால கனவு நனவாகியது.

இந்த ஆண்டு கொண்டாடப்படுவது 100வது சர்வதேச பெண்கள் தினம் என்பதால், பெண்கள் மசோதாவை, அன்றைய தினமே அறிமுகப்படுத்தி, நிறைவேற்றிவிட வேண்டும் என்பதில் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவி சோனியாகாந்தி உறுதியாக இருந்தார். “பெண்கள் தினத்தன்று தாக்கல் செய்யப்படும் இந்த மசோதா பெண்களுக்கான எங்கள் பரிசு” என்றார் சோனியா. இந்த மசோதா மேல் அவர் இவ்வளவு ஆர்வம் கொள்வதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அது, இந்த மசோதா ராஜிவ் கண்ட கனவு என்பதுதான்.

இந்திய நாடாளுமன்றத்தில் மிக நீண்ட காலம் இழுத்தடிக்கப்பட்ட மசோதா என்றால் அது பெண்கள் மசோதாவாகத்தான் இருக்கும். 1974ஆம் ஆண்டு, இந்திய பெண்களின் நிலை தொடர்பாக ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட கமிட்டி, மத்திய கல்வி மற்றும் சமூக நலத்துறை அமைச்சகத்திடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தது. அதில்தான் முதன்முதலாக பார்லிமென்டில் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. பெண்கள் மசோதாவுக்கான ஆரம்பப்புள்ளி அதுதான். 1993ஆம் ஆண்டு, பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சி அமைப்புகளில், பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடங்களை ஒதுக்க வகை செய்யும் 73 மற்றும் 74வது அரசியல் சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது. அதனையொட்டி லோக்சபா மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. 1996 செப்டம்பர் 12 அன்று, தேவகவுடா தலைமையிலான அரசு பதவியில் இருந்த போது, 81வது அரசியல் சட்டத் திருத்தமாக பெண்கள் இடஒதுக்கீடு மசோதா, பார்லிமென்டில் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால், இந்த மசோதாவில், இதர பிற்பட்ட மற்றும் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கும் உள்ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என, முலாயம்சிங்கின் சமாஜ்வாடி கட்சி, லாலு பிரசாத்தின் ராஷ்டிரிய ஜனதா தளம், மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி, ஐக்கிய ஜனதா தளம் போன்ற கட்சிகள் வலியுறுத்தின. அதன்பின், கவுடா அரசு சிறுபான்மை அரசாகி விட்டதால், 11வது லோக்சபா கலைக்கப்பட்டது. அடுத்து, 1998 ஜுன் 26 அன்று, 12வது லோக்சபாவில், 84வது அரசி யல் சட்டத் திருத்த மசோதாவாக தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, இந்த மசோதாவை தாக்கல்



**- கிருஷ்ணன் -**
**இந்தியாவிலிருந்து**

செய்தது. இந்த முறையும், வாஜ்பாய் அரசு சிறுபான்மை அரசாகி, லோக்சபா கலைக்கப்பட்டதால், மசோதா நிறைவேறாமல் போனது. பிறகு, 1999 நவம்பர் 22 அன்று, 13வது லோக்சபாவில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசால், இந்த மசோதா மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால், ஒருமித்த கருத்தை எட்ட முடியவில்லை என்பதால், மசோதா நிறைவேற்றப்படவில்லை. 2002 மற்றும் 2003இல் மீண்டும் மசோதா தாக்கல் செய்யப்பட்டாலும், நிறைவேற்ற முடியவில்லை. அதன்பிறகு, 2008 மே 6 அன்று, ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால், ராஜ்யசபாவில் இம்மசோதா தாக்கல் செய்யப்பட்டு, சட்டம் மற்றும் நீதித்துறை தொடர்பான பார்லிமென்ட் நிலைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. 2009 டிசம்பர் 17 அன்று, பார்லிமென்டின் இரு சபைகளிலும் மசோதாவை தாக்கல் செய்யலாம் என தெரிவித்து, நிலைக்குழு தன் அறிக்கையை சமர்ப்பித்தது. 2010 பிப்ரவரி 22 அன்று, பார்லிமென்டின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீல், பெண்கள் இடஒதுக்கீடு மசோதா நிச்சயம் நிறைவேற்றப்படும் என்றார். 2010 பிப்ரவரி 25 அன்று, பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. அன்றிலிருந்தே, மீண்டும் அனல் பறக்கும் விவாதப் பொருளானது பெண்கள் மசோதா. அதன் உச்சம், 2010 மார்ச் 8 அன்று, ராஜ்யசபாவில் மீண்டும் மசோதா தாக்கல் செய்யப்பட்ட போது, இந்திய நாடாளுமன்றம் தன் வரலாற்றில் காணாத அளவிலான ரகளையாக அரங்கேறியது.

பெண்களுக்கான ஒதுக்கீட்டில் இதர பிற்பட்ட வகுப்பினருக்கும்,

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...



**Elaguppillai (Mike) Srinathan B.Sc**
Sales Representative
**Dir: 416-276-1225**
Bus: 905-470-9800
Email: esrinathan@yahoo.com
7800 Woodbine Ave, Penthouse, Markham, On

RE/MAX
Realtron realty Inc., Brokerage.
Independently Owned and Operated

To Buy or Sell your Home, Business, Investment Property for the Right Price please call me...

**Eglinton/Kennedy**


2+1 Bedrooms, 2 Washrooms
Penhouse Unit, Bright & Spacious,
Upgraded 2 Bedrmms

**Eglinton & Brimley**


3+1 Bedrooms, 2 Washrooms
Detached Bungalow
Next To Ttc/School

**9th Line/16th Ave**


3 Bedrooms, 3 Washrooms
Beautiful Well Maintained
Freehold Townhome

**Brimley/Highglen**


3+1 Bedrooms, 3 Washrooms
High Demand Area.
Close To Shop, School, Park.

**Neilson/Finch**


3 Bedrooms, 3 Washrooms
Absolutely Immaculate Acorn
Built Freehold Townhome

**Morningside / Finch**


3 Bedrooms, 3 Washrooms
Prime Location, Detached
House On A Premium Lot

**Markham / Steeles**


3 Bedrooms, 3 Washrooms
Absolutely Gorgeous.
Double Door Entrey

**Mccowan/Highglen**


3 Bedrooms, 2 Washrooms
All Brick! Remington Built! Most
Desired Location In Markham!

**Markham/Ecson**


4 Bedrooms, 3 Washrooms
Location! Location! Location!
Very Well Maintained, All Brick

**Hwy 7 & 9th Line**


3 Bedrooms, 3 Washrooms
Charming Well Maint Det Home
1808 Sf & 9 Ft Ceiling

**Markham/Steeles**


4 Bedrooms, 3 Washrooms
All Brick 4 Bedroom Home,
Hardwood On Main Floor

**Nightstar/Mantis**


4 Bedrooms, 3 Washrooms
Bright, Beautiful Detached
2 Storey Home With Four Bedroom

**16th Ave/ 9th Line**


3 Bedrooms, 3 Washrooms
Spacious Modern Detached Home
Finished Basement

**Markham/Dennison**


4 Bedrooms, 3 Washrooms
Great Family Home Located
At Markham & Dennison.

**Brimley/Denison**


4+2 Bedrooms, 5 Washrooms
Excellent Opportunity To Own
Absolutely Gorgeous

Whit/Stouff
**9th Line/ Hooverpark**


3 Bedrooms, 3 Washrooms
Fabulous Detached Home In Most
Desirable Area Of Stoufville.

Stouffville
**Hoover Park/ Ninth Line**


4 Bedrooms, 3 Washrooms
Quality Detached Four Bdrm
Mattamy Home!

Whit/Stouff
**9th Line/Reeves Way Blvd**


4 Bedrooms, 3 Washrooms
Corner Lot Only Few Months Old,
Starlane Home,Long Front Porch

Ajax
**Salem/Taunton**


4 Bedrooms, 3 Washrooms
Beautiful Great Gulf Home In A
Sought After Neighbourhood

Commercial
**Gas Stations**


Have An Open Mind And Want
To Make Money. More Efforts
Can Give You More Revenues

**I Can also assist you with: Mortgage, Home Inspection, Real Estate Lawyer**

# தமிழ் தேசியக் கூட்டமைப்பை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

சயில் இடம்பெ பற்றிருக்கிறது. இதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்தச் சூழ்நிலையில் தான் தற்பொழுது பொதுத்தேர்தல் நடைபெறுகிறது.

தற்பொழுது நம் மத்தியில் ஆயுத இயக்கமுமில்லை. ஆயுத போராட்டமு மில்லை. முதன்முறையாக நீண்ட காலத்தின் பின் ஒரு பொதுத்தேர்தல் புதிய சூழலில் நடைபெறுகின்றது. இன்று சர்வதேச சமூகம் இந்த தேர்தல் முடிவுகளை மிக உன்னிப்பாக பார்த்துக்கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களை எவ்வித முடிவை எடுக்கப் போகின்றார்கள் என அது காத்துக் கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்கள் அடிபணிந்து நாட்டின் இரண்டாம்தரப் பிரஜைகளாக வாழச் சம்மதம் தெரிவிக்கப்போகின்றார்களா? அல்லது தமிழ் மக்கள் இலங்கை தமிழரசு கட்சி – தமிழ் தேசிய கூட்டமைப்பினால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வகுக்கப்பட்ட கொள்கை யின் அடிப்படையில் வாக்களித்து தாம் ஒரு பெரும் தேசிய இனம், சரித்திர ரீதியாக வடக்கு கிழக்கில் வாழ்ந்து அது எமது தாயகம் எமக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என முடிவெடுக்கப்போகின்றார்களா? என்பதை சர்வதேச சமூகம் உன்னிப்பாக பார்த்துக்கொண்டிருக்கின்றது. இதுவே தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள சவாலாகும் என அவர் தெரிவித்தார்

அடுத்த நாடாளுமன்றம் மிகவும் ஆபத்தான-தாக அமையப் போகிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். கண்டியில் இடம்பெற்ற, கண்டி மாவட்ட இளைஞர் பேரவையின் மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "ஈழவாதிகள் அல்லாத நாடாளுமன்றம் ஒன்றை ஜனாதிபதி கேட்கின்றார். இப்போது நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு பூரண அமைதி ஏற்பட்டுள்ளது. எனவே அவரது மொழியில் கூறும் ஈழவாதிகள் இந்நாட்டு சிறுபான்மை இனங்களே.

ஜனாதிபதி வேண்டி நிற்பது தனிப் பெரும்பான்மை இனத்தை மட்டும் பிரதி நிதித்துவப்படுத்தும் நாடாளுமன்றம் ஒன்றையேயாகும். இதற்கான திட்டத்தை வகுத்து சிறுபான்மையினரை முட்டி மோத விட்டுப் பிரித்தாளும் ஓர் ஆட்சியே இன்று நடைபெறுகிறது. இதற்காக வேண்டியே புதுப்புது அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டு 116 அமைச்சர்களை வைத்து ஆட்சி நடத்தப்பட இருக்கிறது.

இதன் அடுத்த கட்ட அரங்கேற்றமே சிறுபான்மை இனங்களில் பிரதிநிதித்துவத்தை கூறுபோட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கையில் வைத்துக் கொண்டு தொகுதி வாரிமுறை என்ற போர்வையில் வட கிழக்குக்கு வெளியேயுள்ள சிறுபான்மை பிரதி நிதித்துவத்தை ஒழிப்பதாகும். இதுபோன்று பல விசித்திரங்கள் நிகழ்த்தத் திட்டமிடப் பட்டு வருகிறது. எனவே ஆபத்தான நாடாளுமன்றத்தில் அவதானமாக நடந்து கொள்ளக் கூடியவர்களையே நீங்கள் தெரிவு செய்ய வேண்டும்" என்றார்.

# ஒரு குடம் தண்ணீருக்கு...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

பணவருவாய்க்காகவே இக்கற்பனை உருவங்கள் உருவாக்கப்பட்டது. பௌதீக வியல் படி புதிய பொருளை உருவாக்க முடியாது. இருப்பதை உரு மாற்றமுடியும். எல்லா மதங்களை விட சைவ சமயத்தில் மட்டும் பல்லாயிரம் கற்பனைக் கதைகளும் புராணக் கதைகளும் உண்டு. உலகத்தில் இலகுவாக ஏமாறக்கூடியவன் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களே. உலகத்தில் சமயத்திற்காக தம்முடைய பொருளாதா ரத்தை அள்ளி இறைப்பவர்களும் சைவர்கள். ஏன்? எதற்கு? என்ற விடை தேடத் தெரியா தவர்கள். பகுத்து அறிகின்ற மனிதன் மட்டும் நல் வாழ்வு வாழ்கிறான். தனக்கு தனக்கு என்று வரும் பொழுது தான் அவன் படக்கு படக்கு என்று பகுத்து அறிந்த அறிவாளியாகிறான்.

எல்லாத்துறைகளுக்கும் பல ஆண்டு பட்டறிவு பெற்றவர்களுக்கு முனைவர் பட்டம் கொடுத்து மதிப்பளித்துள்ள உலகம். ஆன்மீகத் துறையில் பல ஆண்டு பட்டறிவு பெற்றவர்களுக்கு முனைவர் பட்டம் வழங்காதது ஏன்? அல்லது மதத் துறையில் முனைவர் பட்டம் பெறாத சாமியார்கள் பல ஆயிரம். சமயப்பெரியார்களுக்கு முனைவர் பட்டம் வழங்கியதாக வரலாறு இல்லை.

கோயிலில் பூசை செய்கின்ற குருக்கள் கூட குருக்கள் பட்டம் பெற்றுத் தான் பூசை செய்கின்றார். குருக்களுக்கு என்ன தகுதி வேண்டுமோ அந்த தகுதி உடையவர் தான் குருக்கள் ஆகலாம். அதேபோலத் தான் மருத்துவத்தில் மருத்துவ பட்டம் பெற்றால் தான் மருத்துவர். சாமியார்களே சாமியாருக்கு பட்டத்தைக் கொடுத்து சாமியார் ஆகிவிடுகிறார்கள். நல்லவர்கள் நல்ல நோக்கமுடைய சாமியாராக இருந்தால் இன்று சைவம் சைவமாக இருக்கும். ஆனால் இன்று வழி தவறிய மதமாக வழிகாட்டிகளே சைவத்தின் அடிப்படை தெரியாமலும் சைவத்தின் அடையாளம் இழந்து நிற்கின்றனர். எந்தத் துறையில் யார் இருந்தாலும் ஒழுக்க நடைமுறையில் இருந்து தவறினால் அத்துறைக்கு அவர் தகுதியற்றவராகவே கணிக்கப்படுகிறார். சமயப்பெரியாராக இருக்கலாம், மருத்துவராக இருக்கலாம். வழக்குரைஞராக இருக்கலாம். ஒழுக்க நெறி ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் உயர்வானதொன்று.

பலமுறை திருமணம் செய்வது பகுத்தறிவா-ளர்கள் என்றால் பிள்ளையார் திருமணம் செய்யாமல் இரண்டு பெண்களை வைத்திருக்கிறார். முருகன் இரண்டு முறை திருமணம் செய்திருக்கின்றார். கண்ணன் பல பெண்களுடன் தொடர்பு வைத்திருக்கிறார். இவையெல்லாம் எந்தக் கணக்கில் சேர்ப்பது. பகுத்தறிவாளர்கள் பகுத்தறிவுச் சிந்தனை-களை ஏற்றுக் கொண்டவர்களை மட்டுமே திருமணம் செய்ய முடியும். சைவக் கடவுளோ அல்லது சாமியாரோ யாரோடு தொடர்பு வைப்பது என்பதற்கு வரையறை இல்லை. இப்படிப்பட்ட சாமியார்களை மக்கள் எப்படி இனம் காண்பது. பகுத்தறிவு உள்ளவனால் மட்டுமே இனம் காண முடியும். எம்மைப் பொறுத்தவரை இப்படிப்பட்டவர் களின் வாடை கூட என் வீட்டில் வீசுவதற்கு இடமில்லை. காரணம் எனது 7 அகவையுடைய பிள்ளையே பகுத்தறிந்து தான் எம்மோடு வாழ்கிறது. எம்மை சமயம் சார்ந்த மொழி சார்ந்த கேள்விகளைக் கேட்பார்கள். இவர்களுடைய கேள்விகளுக்கு எந்தச் சமயப்பெரியார்களினால் கூட பதில் அளிக்க முடியாமல் திண்டாடிய நிகழ்வு மனதில் மறையாமல் உறைந்திருக்கிறது. பகுத்தறிவாதிகள் என்ன சொல்லுகிறார்கள். விளங்கக் கூடிய மொழியிலே வழிபாடுகளை நடத்துங்கள். கோயில்களில் கூட்டு வழிபாட்டு முறையை நடைமுறைப்படுத்துங்கள். திருமுறைகளை கோயில் வழிபாட்டின் பொழுது இசையுங்கள் என்கிறார்களே தவிர. பொய்களையும் போலிகளையும் மூட நம்பிக்கைகளையும் உடைத்தெறியச் சொல்லி சொல்லுகிறார்கள். பெண்களுக்கு சம உரிமையுடையவராக தமிழர்கள் கொள்ள வேண்டும் என்கிறார்கள். தமிழன் பிறந்தால் துடக்கு, இறந்தால் துடக்கு. ஆண்டுத்துவசம், அந்தியேட்டி, பெண்கள் பெரியபிள்ளை யானால் துடக்கு கழிப்பது இவையெல்லாம் ஆகம விதிமுறையில் எழுதப்பட்டிருக்கிறதா?

மு.க.தமிழேந்தி
தொடர்பு எண்: 647 297 7120

போர்வீரனோடு சாமியாரை ஒப்பிட்டு பேசுவது என்பது துயரமானதாகும். போர்வீரன் என்பவன் சண்டைக்கான பயிற்சியைப் பெற்றுத் தான் போர் வீரனாகிறான். போர்வீரனுடைய தொழில் நாட்டைக் காப்பது. ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு விளைவை உருவாக்குபவனை சுடுகலனால் சுடுவதற்கு சட்டத்தில் இடம் இருக்கின்றது. போர்வீரன் போர்களத்தில் சட்டத்திற்கு பிறம்பான பல அழிவுகளை செய்வான். அதற்கு அந்த நாடு கூட உடந்தையாக இருக்கும். போர்வீரனிடத்தில் பல கெட்ட எண்ணங்கள் இருப்பது அத்துறையின் வடிவம். ஆனால் சாமியாரின் துறை மற்றவரின் மனம் புண்படும் படியாகக் கூட பேசக்கூடாது. மற்றவரின் பொருளில் ஆசை வைக்கக் கூடாது. எறும்பைக் கூட கொலை செய்ய மனம் இடம் கொடுக்காது. அமைதியான வாழ்க்கை முறைக்கு வழிகாட்டுபவர் சாமியார். உள்ளங்கியையும் மேலங்கியையும் தவிர இந்த உலகத்தில் அவருக்கென்று ஒன்றும் இல்லை. சமயத்துறையில் இருப்பவரின் மனம் பூப் போல இருக்க வேண்டுமே தவிர சமய ஒழுங்கு முறையை மீறினால் சாமியாரும் சமயத்துறைக்கு தகுதியற்றவராகிறார். சாமி யார் துறைக்குரிய உண்மையான தகுதி எமக்கு இருந்தால் நாமும் சாமியார் ஆகலாம் அல்லவா. நாம் அதற்குரிய தகுதியைப் பெறாத படியால் உண்மையில் மனிதனாக வாழ்கிறோம்.

தந்தை பெரியார் பல ஆண்டுக்கு முன் தமிழருக்கு சொன்ன உண்மைகள் இன்று மக்களிடத்தில் நடைபெறுகின்ற அழிவுகள் மூலமும் தனக்கு தனக்கு என்று வருகின்றபோது சமயத்தையும் சாமியாரையும் தூக்கியெறிகின்ற காலமாக திருவள்ளுவர் காலம் திகழ்கிறது. இப்படி நடப்பதால் நாம் எப்படி கடவுளை நம்புவது சாமியாரை நம்புவது. கடவுளையும் சாமியாரையும் நம்பக்கூடாது.

சைவ சமய கொள்கையின் அடிப்படையிலும் சைவ சமய மக்களின் நம்பிக்கையை மனதில் கொண்டு தவறை சைவ மக்கள் மத்தியில் தெளிவாக்கி அத்துறையில் இருந்து விலகி தமக்கு விரும்பியரை திருமணம் செய்து இல்லற வாழ்க்கையில் மகிழ்வைக் காண்பதே சாமி யாரின் நல்ல மனதின் முடிவாக அமையுமென சைவர்கள் நம்புகின்றனர்.

# நாடாளுமன்றத் தேர்தல்....

05ஆம் பக்கத்தொடர்ச்சி

இலங்கைக்குள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையின் கீழ் இந்தத் தேரதல் நிலைநிறுத்துமா என்ற கேள்வி இப்பொழுது தொக்கி நிற்கின்றது.

மறுபக்கத்தில் மிதவாதக் கட்சியாகக் கருதப்பட்டு வந்த போதிலும், விடுதலைப்புலிகளின் நிழல் அமைப்பாகச் செயற்பட்டு வந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் புறந்தள்ளி, டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களினால் முன்வைக்கப்படுகின்ற அரசாங்கத்தோடு எந்த வேளையிலும் இணைந்து போகின்ற இணக்கப்பாடான அரசியலுக்கு தமிழ் மக்கள் அங்கீகாரம் வழங்கப் போகின்றார்களா என்ற கேள்விக்கும் இந்தத் தேர்தலின் மூலம் பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய அரசியல் நிலையில், மகிந்த ராஜபக்சவே ஜனாதிபதி தேர்தலில் அடைந்த அமோக வெற்றியைப் போன்றதொரு வெற்றியை இந்தத் தேர்தலிலும் அடையப் போகின்றார் என்பதே ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது.

ஏனெனில், பிரதான எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசிய கட்சி, ஜனாதிபதி தேர்தலில் அமைத்த கூட்டணி பிளவுபட்டு நிற்கின்றது. அத்துடன், அரசாங்கத் தரப்பில்



அள்ளி வீசப்படுகின்ற வாக்குறுதிகள், உறுதிப்பாடுகளின் அளவிற்கு பொதுமக்களையும் வாக்காளர்களையும் கவரத்தக்க வகையில் வலிமையான நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டு இந்தத் தேர்தலை எதிர்கொள்ளவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# உண்மையான நண்பன்

நண்பன் யார் என்பதற்கு நாம் கொடுக்கும் விளக்கங்கள் பல. சிறந்த நண்பன், ஒழுக்கமான நண்பன், குடிகார நண்பன், நேர்மையான நண்பன், உதவி செய்யும் நண்பன், கலகலப்பான நண்பன், கண்டிப்பான நண்பன் எனப் பலவாறான விளக்கங்களைக் கொடுக்கின்றோம். இவ்வாறு நாம் கொடுப்பதற்குக் காரணம் நமது வாழ்வில் இணைக்கப்படும் இன்னொருவரது குணாதிசயங்களில் எது எம்மைக் கூடுதலாக கவர்ந்துள்ளதோ அதை மையப்படுத்தி அந்த நட்பின் தன்மையை வெளிப்படுத்துகின்றோம். உதாரணமாக ஒரு நண்பன் நேர்மையானவனாகவும் அதே நேரத்தில் குடிகாரனாகவும் இருப்பின் இங்கே எமது தெளிவானது எது என்பது முற்றுமுழுதாக எம்மில் மட்டுமே தங்கியுள்ளது. தேவையையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்து ஒன்றில் நேர்மையான நண்பன் அல்லது குடிகார நண்பன் என்று குறிப்பிடுவோமேயன்றி நேர்மையான குடிகார நண்பன் எனக் குறிப்பிடுவதில்லை.

நட்பு என்பது இணைப்பை வெளிப்படுத்துவது வெளிப்படை. இந்த இணையானது முற்று முழுதாக உளவியல் சார்ந்ததாக மட்டுமே அமைகின்றது. அதாவது இரண்டு உள்ளங்களுக்கு இடையிலான இணக்கத்துக்குரிய வெளிப்பாடே நட்பு என்பதாகும். இந்த நட்பின் தன்மையானது எமது எதிர்பார்ப்புக்கேற்ப அமையும் வரையில் அந்த நட்பின் தன்மையை நாம் உள்வாங்கிக் கொள்கிறோம். அதுமட்டுமன்றித் தொடர்ச்சியாக அதைப் பேணவும் முயற்சிக்கின்றோம். எப்பொழுது எமது எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறு இந்த இணக்கமானது செயற்படத் தவறுகின்றதோ அப்போது இந்த நட்பு புறக்கணிக்கப்பட்டு விடுகிறது. உதாரணமாக நாம் மதுபானம் அருந்திய காலத்தில் எம்முடன் சேர்ந்து குடிகார நண்பனாக இருந்த ஒருவர் இப்போது நாம் குடிப்பழக்கத்தைக் கைவிட்ட பின்னர் அவரும் அதைப்போல் மாறவேண்டும் என்று எதிர்பார்க்கும் போது அதை அவர் மறுப்பாராக அல்லது அதிலிருந்து விடுபட முடியாமல் இருப்பாராயின் நமது நட்பின் அளவு மாற்றமடைந்து விடுகின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்த நட்பைத் தொடருவதற்கு விரும்புவதில்லை.

நமது வாழ்வியல் நகர்வின்போது எம்மில் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப நட்பும் மாற வேண்டும் என எதிர்பார்ப்பது இயல்பானதே அதாவது நண்பர்களும் மாற வேண்டும் என்பது இயல்பானதே இந்த மாற்றம் இரண்டு வகையில் ஏற்படுகின்றது. ஏற்கனவே நண்பர்களாக இருப்பவர்களது மனோபாவங்கள் மாற்றப்படவேண்டும் என்பது ஒன்று. அல்லது நண்பர்கள் மாற்றப்பட வேண்டும் என்பது மற்றையது. அதாவது Change Your Friend or Change Your Friend என்பதாகும். இவ்வாறு நமது வாழ்வியல் மாற்றத்துக்கேற்ப நண்பர்களும் மாற வேண்டும் என்பதற்கான அடிப்படை என்ன? இது முற்றுமுழுதான சுயநலமா? அல்லது சந்தர்ப்பவாதமா? அல்லது அடிப்படைத்தேவையா? தொடர்ந்து செல்லுங்கள்.

நாம் திருமணமாகுமுன்னர் நண்பர்களாக இருந்தவர்களுடன் சேர்ந்து பல செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்போம். மது அருந்துதல், களியாட்டங்களில் பங்கேற்றல், வீதியோரத்தில் கூட்டமாக நின்று மற்றவர்களைக் கேலி செய்தல் எனப் பல விடயங்களை வேடிக்கைக்காகவும், பொழுது போக்கிற்காகவும் செய்திருப்போம். நாம் திருமணமாகியதும் நமது வாழ்வியல் நோக்கம் புதிய நிலைக்கு முன்னெடுக்கப்பட

இதற்குச் சில வினாக்கள் அடிப்படையாக அமையும் போது அதற்கான விடைகள் நண்பர்கள் யார் என்பதை இலகுவாக இனங்காண உதவுகின்றது. நம் ஒவ்வொருவருக்கும் ஒரு அம்மா, ஒரு அப்பா, ஒரு சில உடன் பிறப்புக்கள் என வரையறைக்குட்பட்டிருக்கும் போது நண்பர்கள் மட்டும் வரையறுக்கப்படாத அளவுக்கு இருப்பதென்ன? உறவுகள் நமது தெரிவுகளல்ல. ஆனால் நண்பர்கள் நமது தெரிவுகளாக அமைவது ஏன்? உறவுகளில் இருந்து எம்மைப் பிரிக்க முடியாது. ஆனால் நண்பர்களிடம் இருந்து எம்மைப் பிரிக்க முடிக்கின்றதே எப்படி? இவைதான் நண்பர்கள் யார் என்பதற்கு விளக்கம் தரக் கூடியவைகளாக அமைகின்றன.

## ஓடும் நீர் உறைவதில்லை 98



“நட்பு என்பது இணக்கத்துடன் கூடிய இணைப்பாகும். நண்பர்கள் என்பவர்கள் ஒருவருக்கொருவர் இணைந்தும் இருப்பார்கள். அதே நேரத்தில் ஒருவருக்கொருவர் இணங்கியும் இருப்பார்கள். இந்த இரண்டும் சேர்ந்திருப்பது மனிதர்களிடையில் மட்டும் தான். அதனால் நட்புக்கான ஒரே மூலம் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் மட்டுமே.”

வேண்டியிருப்பதால் நமது முன்னைய செயற்பாடுகளில் உடனடியான மாற்றம் அவசியமாகின்றது. கணவன் - மனைவி என்ற புதிய நட்புக்கு வித்திட்டவுடன் அந்த நட்புக்கு ஒவ்வாத எந்த நடவடிக்கைகளை திருமணத்திற்கு முன்னர் புரிந்திருந்தோமோ அவை அனைத்தும் முற்று முழுதாக அகற்றப்பட வேண்டும். ஏனெனில் இது வாழ்வியலின் அடிப்படைத் தேவையாகும். இந்த முயற்சியில் நாம் உடனடியாக வெற்றி காண்பதற்கு ஒத்துழைப்பவர்கள் மட்டுமே தொடர்ச்சியாக நண்பர்களாக இருக்க முடியும். மற்றையவர்களுக்கு எம்மால் செய்யக்கூடியது நண்பர்களை மாற்றுவோம் அல்லது நண்பர்களை மாற்றுவோம். உண்மையில் நண்பர்கள் யார் என்பதைப் புரிந்து கொள்வது மிகவும் சுலபமானதே.

நட்பு என்பது இணக்கத்துடன் கூடிய இணைப்பாகும். நண்பர்கள் என்பவர்கள் ஒருவருக்கொருவர் இணைந்தும் இருப்பார்கள். அதே நேரத்தில் ஒருவருக் கொருவர் இணங்கியும் இருப்பார்கள். இந்த இரண்டும் சேர்ந்திருப்பது மனிதர்களிடையில் மட்டும் தான். அதனால் நட்புக்கான ஒரே மூலம் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் மட்டுமே.

வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் மட்டுமே நண்பர்களாக முடியும் என்பதற்கான காரணம் என்ன? உண்மையில் நண்பர்கள் என்பவர்கள் மனித உருவில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமது குணாதிசயங்களின் (Characters) பிரதிபலிப்புக்களே. இதை வலியுறுத்துவதற்காகப் பல உதாரணங்கள் இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளன. நண்பர்களை நாம் தெரிவு செய்வதற்கு நமது குணாதிசயங்களே அடிப்படைகாகின்றன. நமது குணங்கள் எல்லையற்றிருப்பதால் அதற்கேற்ப நண்பர்களையும் தெரிவு செய்வதற்கான வாய்ப்புக்களும் வரையறுக்கப் படாமல் அமைந்துள்ளன.

இப்போது நண்பர்கள் என்பவர்கள் இணைப்பு மட்டுமல்ல இணக்கமும் உடையவர்களாக இருப்பார்கள் என்பதற்கான விளக்கத்தைப் பார்ப்போம். எமது குணங்களுக்கு இசைவாக உள்ளவர்களையே நாம் நண்பர்களாகக் கொள்கிறோம். இந்த இணக்கமே நண்பர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பையும் கொடுக்கின்றது. எமது குணங்களுக்கு ஆரம்பகாலங்களில் இசைவாக இருந்து விட்டுப் பின்னர் மாறுபவர்களாக இருப்பவர்களையும் நாம் விலக்குகிறோம் அல்லது விலகி விடுகிறோம். ஏன்? எமது குணங்களின் பிரதிபலிப்பாக அவர்கள் இல்லை என்பதால் தான்.

நமது குணங்களின் தெரிவுகளுக்கு உறவுக்குள் வாய்ப்புக்கள் மிகவும் வரையறுக்கப்பட்டுள்ளன. ஏனெனில் உறவுகளின் எண்ணிக்கை வரையறுக்கப் பட்டிருப்பதாகும். நமது ஒவ்வொரு குணத்துக்கும் ஒவ்வொரு பிரதிபலிப்புத் தேவைப்படுகின்றது. இந்தத் தேவையை உறவுகள் பூர்த்திசெய்ய முடிவதில்லை. ஆனால் நண்பர்களுக்கான எல்லை பரந்து கிடப்பதால் எமது ஒவ்வொரு குணத்துக்கும் ஒவ்வொருவரையும் நாம் நண்பர்களாக இணைத்துக் கொள்கிறோம். எனவே நண்பன் என்பவன் எமது ஒரு குணத்தின் மனித உருவிலான பிரதிபலிப்பு மட்டுமே. அதாவது எமது ஒவ்வொரு நண்பனும் எமது ஒவ்வொரு குணமாகும். இதனால் தான் எனக்கு நூறு நண்பர்கள் இருக்கிறார்கள் என்பதை விட என்னிடம் நூறு குணங்கள் இருக்கின்றன எனக் கூறப்படுவது முற்றிலும் உண்மையானதாகின்றது.

KG Master-kgmaster@rogers.com

### ஆம் வாசகர்களே!

இந்த உண்மை நமக்குத் தெளிவானால் மட்டுமே நாம் உண்மையான நண்பனாக முடியும். உண்மைக்கு இரட்டைத் தன்மை கிடையாது. நான் பலருக்கு நண்பனாக இருக்கின்றேன் என்பது அவர்கள் ஒவ்வொருவரதும் ஒவ்வொரு குணத்திற்கு இணக்கமாக இருக்கிறேன் என்பது தான் உண்மை. எனக்குப் பல நண்பர்கள் இருக்கிறார்கள் என்பது எனது ஒவ்வொரு குணத்திற்கும் தனித்தனியாக இணங்கும் ஒவ்வொரு மனிதன் இருகின்றான் என்பது தான் உண்மை. எனவே உண்மையான நண்பர் என்பவர் தன்னை நண்பராக ஏற்றுக்கொண்ட ஒருவரது வாழ்வியல் மாற்றங்களையும் அதனால் ஏற்படும் குணாதிசயங்களின் மாற்றங்களையும் புரிந்து அதற்கு இணங்கி அவரது முன்னேற்றத்திற்கான முழுமையான ஒத்துழைப்பைக் கொடுக்கும் மனப்பக்குவம் பெற்றிருப்பவர் மட்டுமேயாவார்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றியுடன் KG Master

அமைதியின் குரல் - Words of Peace - MAHARAJI -

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

மஹாராஜியின் உரைகள்

On DVD: இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221

On TV: Saturdays at 11:00 am, Rogers Cable Channel - 20, Bell Express vu Channel - 219



# இந்தியா: பெண்கள்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

மற்றவர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும் என லாலு பிரசாத் யாதவ், முலாயம் சிங் யாதவ் போன்ற தலைவர்கள் போர்க்கொடி உயர்த்தினர். அப்படி உள்ஒதுக்கீடு வழங்காமல் சட்ட மசோதாவை நிறைவேற்ற அனுமதிக்க மாட்டோம் என்றார்கள். "சாதிகளாலும் பொருளாதார படிநிலையாலும் பிரிந்து கிடக்கிற இந்திய சமூகத்தில் வாழ்கிற பெண்கள் எல்லோரும் ஒரே நிலையில் வாழ்கிறார்களா என்ற கேள்விக்கு



இல்லைவே, இல்லை என்பதுதான் பதிலாக இருக்கும். ஆண் என்பது தவிரவும் சாதி, பணம், மதம், சடங்கு உள்ளிட்ட கருத்தியல்களின் கீழ் பெண்கள் மண்டியிட்டு கிடக்கிறார்கள். எனவே, எல்லா பெண்களையும் ஒரே அளவுகோலில் வைத்து பார்ப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படி பார்க்கும் பார்வை சரியானதாக இருக்க முடியாது. ஆதிக்கசாதிகளின் தெருவில்கூட தலித் நடக்க அனுமதி மறுக்கப்பட்டிருக்கிற ஊர்களும், அன்றாடங்காய்ச்சி கூலி தலித்துகள் சாதிகளின் நெருக்குதல்களில் சிக்குண்டு மூச்சுதிணற முழிபிதுங்கி கிடக்கிற ஊர்களும் இந்தியாவில் ஏராளமாக காணப்படுகின்றன. உயர்குடியில் பிறந்த பெண்களுக்கு, இந்த சமூகத்தில் விரவிக்கிடக்கிற வாய்ப்பும் வசதிகளும் கிராமப்புறத்தில் வாழ்கிற பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு கிடைத்ததில்லை. அந்த கிராமப்புற பிற்படுத்தப்பட்ட பெண்களை காட்டிலும், சாதியால் காலம்காலமாக வஞ்சிக்கப்பட்ட தலித் பெண்களின் இருப்பு ஒவ்வொரு நாளும் அச்சத்திலும் வேதனையிலும் உறைந்து கிடக்கிறது. ஒரு தலித் பெண்ணையும், ஒரு பிற்படுத்தப்பட்ட பெண்ணையும், ஒரு மேட்டுக்குடி பெண்ணையும் ஒரு தளத்தில் வைத்து பார்ப்பது எவ்வளவு முட்டாள்தனமோ, அதைவிட பெரிய முட்டாள்தனத்தை பணம் படைத்தவர்களும் மேட்டுக்குடிகளும் நிரம்பிக்கிடக்கிற நாடாளு மன்றத்தில் மகளிர் மசோதாவை நிறைவேற்ற விருக்கிறார்கள். மகளிருக்கு இடங்களை ஒதுக்குவதற்காக மசோதாவைக் கொண்டு வருகிறபோது, அந்த இடங்களை யாரெல்லாம் கைப்பற்றுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அரசியல்வாதிகளின் வாரிசுகளுக்கும் உதட்டுசாயம் பூசிக் கொண்டு கிளப்புகளில் வலம் வருகிற மேட்டுக்குடி பெண்களுக்கும் வசதியான குடும்ப பெண்களுக்கும்தான் இந்த 33 சதவிகித இட ஒதுக்கீடு பயன்பட போகிறது. இவர்களை கடந்து, கிராமப்புறத்தில் வாழ்கிற பிற்படுத்தப்பட்ட பெண்களோ, அதனினும் கீழாக வாழ்கிற தலித் பெண்களோ ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்கேற்கவே முடியாது என்பதுதான் உண்மை. இந்த நிலை ஏற்பட்டுவிட கூடாது என்பதற்காகத் தான் தலித் பெண்களுக்கும், பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கும், சிறுபான்மையின பெண்களுக்கும், கிராமப்புற பெண்களுக்கும் தனித் தனி உள் இட ஒதுக்கீட்டை உருவாக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்" என்பது எதிர்ப்பவர்கள் வாதம். மேலும், நாடாளுமன்றத்தில் முஸ்லீம்கள், தலித்துக்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியோரின் எண்ணிக்கையை குறைப்பதற்கான சதி இந்த மசோதாக்களில் இருப்பதாகவும் லாலு பிரசாத், முலாயம், மாயாவதி, சரத் யாதவ் ஆகியோர் கூறினர். 543 உறுப்பினர்களில் இருந்து 181 பெண்களுக்குப் போக, மீதி 362 இடங்களுக் குள்ளே என தலித்கள், முஸ்லீம்கள், பிற்படுத்தப் பட்டோர் ஆகியோருக்கான வாய்ப்பு குறுக்கப்பட்டு விடும் என்பது அவர்களது குற்றச்சாட்டு.



ஜாதி, மத, மொழி பாகுபாடுகள் குறித்து பேசப்படுகிற அளவு, அவைகளுக்கு அழுத்தம் கொடுக்கிற அளவு இந்திய சமூகத்தில் பாலின பாகுபாடுகளுக்கு நாம் முன்னுரிமை கொடுக்கிறோமா? 1952இல் நடந்த பொதுத் தேர்தலில் மொத்தம் 19 பெண்களே எம்பிக்களாக இருந்தனர், 57 ஆண்டுகள் கழித்து 2009ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மொத்தம் 59 பெண்கள் எம்.பிக்களாக இருக்கின்றனர். அதாவது 10.82 சதவீதம்! இந்த எளிய உண்மையே போதும், பெண்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள. எந்த ஜாதியிலிருந்தாலும், எந்த மதத்திலிருந்தாலும், எந்த மொழி பேசுபவராக இருந்தாலும் பெண்கள் தொடர்ந்து புறக்கணிக்கப் பட்டு, இருட்டடிப்பு செய்யப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். எனவே, உள் ஒதுக்கீடு பற்றி பேசி காலம் கடத்துவதைவிட, முதலில் மசோதாவை நிறைவேற்றிவிட்டு, அதன்பிறகு உள் ஒதுக்கீடு போன்றவற்றைக் கவனித்து, அதைக் கொஞ்சம் கொஞ்சமாக மேம்படுத்தலாம் என்பது ஆதரிப்பவர்கள் வாதம். "மசோதாவில் உள் ஒதுக்கீடாக இல்லாமலே மிகத் தெளிவாக தலித் மற்றும் பழங்குடியினருக்கு தேவையான ஒதுக்கீடு வழங்கப்பட்டு உள்ளது" என்றார் ஜெயந்தி நடராஜன்.

மசோதாவை மிக ஆக்ரோஷமாக எதிர்த்த லாலுபிரசாத்தின் மாநிலமான பிகாரில்தான், இந்தியாவிலேயே முதன்முதலில் உள்ளாட்சிக-ளில் பெண்களுக்கு 50சதவீத இட் ஒதுக்கீடு அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பெண்கள் மசோதா நிறைவேற்றம் குறித்து மத்திய அமைச்சரவை கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டபோது கூட்டணிக் கட்சிகளான திரிணாமுல் காங்கிரஸும் தி.மு.க.வும் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. ஆனால், அதன்பிறகு திருணாமூல் காங்கிரஸ் தலைவி மம்தா பானர்ஜி, மசோதாவை புறக்கணிப்போம் என்று அறிவித்தார். வேறு சில கட்சிகளும் முரண்டு பிடித்ததால், மசோதா தற்போதைய நிலையில் நிறைவேறாது, மீண்டும், இழுத்தடிக்கப்படும் என்றுதான் அனைவரும் எதிர்பார்த்தனர். ஏனெனில், இந்த மசோதா, அரசி யல் சட்டத் திருத்த மசோதா என்பதால், மொத்தமுள்ள எம்.பி.க்களில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பி.க்களின் ஆதரவு தேவை. லோக்சபாவில் மொத்த எம்.பி.க்களின் எண்ணிக்கை 545. இதில், மசோதாவை ஆதரித்த காங்கிரஸ்., பா.ஜ.க, இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்களின் எண்ணிக்கை 348. ஆனால், 363 எம்.பி.க்களின் ஆதரவு இருந்தால்தான் மசோதாவை நிறைவேற்ற முடியும் என்னும் நிலை.

அதற்கு முன்னதாக ராஜ்யசபாவில் இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டும். அதுதான் பிரச்சனையே. ஆனால், எதிர்ப்புகள் இருந்தும் 24 மணிநேர போராட்டமும் அமளியும் கண்ணை மறைத்து வழி மறித்து நின்ற போதும், 14 வருஷங்களாக தடைபட்டு வரும் அந்த மசோதா மீண்டும் கை நழுவிப் போகுமோ என்று எல்லோரும் சோர்ந்திருந்த போது, மசோதா நிறைவேற்றப்பட்டது ஆச்சரியம். மசோதா ராஜ்யசபாவில் தாக்கல் செய்யப்பட்ட போது, மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து மீண்டும் சமாஜ் வாடி, ராஷ்டிரிய ஜனதா தளம் உட்பட சில கட்சிகளின் எம்.பி.,க்கள் ரகளையில் ஈடுபட்டனர். நடந்த அமளியால் மீண்டும் மீண்டுமாக ஆறு முறை ஒத்திவைக்கப்பட்ட மேல்சபை மீண்டும் மறுநாள் கூடியபோது கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்டு செய்யப்பட்டிருந்த எம்பிகள் எதிர்ப்புகள் தொடர்ந்தது. அன்றும் மசோதா நிறைவேறாது என்று பலர் நினைத்த நிலையில் அதுவரை மேல் சபை கண்டிராத ஒரு காட்சி அரங்கேறியது. கிட்டத்தட்ட 100 சபை காவலர் வரவழைக்கப்பட்டார்கள். மனித சங்கிலி அமைத்து முரண்டு பிடித்தவர்களை சூழ்ந்து வலுக்கட்டாயமாக குண்டுக்கட்டாய் சுமந்து வெளியேற்றினார்கள். சபை கலைக்கப்பட்டு பிற்பகல் மூன்று மணிக்கு மீண்டும் கூடியது. அதைத் தொடர்ந்து இட ஒதுக்கீடு சட்ட திருத்த மசோதா மீது குரல் ஓட்டெடுப்பு நடைபெறும் என்று சபைத்தலைவர் அறிவித்தார். பிறகு நிகழ்ந்தது வரலாற்று சிறப்பு மிகுந்த அந்த சரித்திர நிகழ்வு. மசோதாவின் மீது விவாதம் நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் அருண் ஜெட்லி உட்பட பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் பேசினர். இறுதியாக, மசோதா ஓட்டெடுப்பிற்கு விடப்பட்டது. ராஜ்யசபாவில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 245. இவர்களில் 233 பேர் அன்று சபைக்கு வந்திருந்தனர். இவர்களில் 155 பேரின் ஆதரவு தேவை. ஆனால், 186 எம்.பி.,க்கள் மசோதாவுக்கு ஆதரவாக ஓட்டளித்தனர். ஒரே ஒரு எம்.பி., மட்டும் மசோதாவுக்கு எதிராக ஓட்டளித்தார். இதன்மூலம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உறுப்பினர்களின் அமோக ஆதரவுடன், பெண்கள் மசோதா நிறைவேறியது.

காங்கிரஸின் தீவிர எதிர்ப்பாளர்களான பாஜகவும் இடதுசாரிகட்சிகளும் மனமுவந்து மசோதாவை ஆதரித்தன. ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவர் சரத் யாதவ் எதிர்ப்பு தெரிவித்தாலும், அந்தக் கட்சியைச் சேர்ந்த பீகார் முதல்வர் நிதிஷ்குமார் ஆதரவு தெரிவித்ததால், அந்தக் கட்சியைச் சேர்ந்த எம்.பி.,க்கள் ஏழு பேரும் மசோதாவுக்கு ஆதரவாக ஓட்டளித்தனர். அதேபோல், எதிர்கட்சிகளான அ.தி.மு.க., தெலுங்கு தேசம் போன்ற கட்சிகளும் மசோதாவுக்கு ஆதரவு அளித்தன.

"இம்மசோதா வெற்றி, பெண்கள் சமூகத்திற்கு கிடைத்த வெற்றி. நியாயப்படி லாலு இந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்திருக்க வேண்டும். அவருக்கு ஏழு பெண்கள் உள்ளனர். அவர் வீட்டிலேயே அவர் மகள் ஏழு பேரும் இம்மசோதாவுக்கு நிச்சயம் ஆதரவு தருவார்கள்" என்றார் சோனியா.

இந்த மசோதா சட்டமாக மாறுவதற்கு மக்கள் சபையிலும் நிறைவேற்றப்பட வேண்டும். "பல அரசியல் நிர்பந்தங்களின் காரணமாக அது உடனடியாகக் கீழ் சபையில் எடுக்கப்படாமல் போனாலும் மேல் சபையில் நிறைவேற்றப்பட்டதால் முதல் தடை விலகிற்று. அரசின் நிதி போன்ற மிக முக்கியமான மசோதாக்களுக்கு ஒப்புதல் கிடைத்தபின், அதிக எதிர்ப்பு ஏற்படாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மகளிர் மசோதா விவாதத்துக்கு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படும்" என்று சோனியா உறுதி அளித்துள்ளார். மசோதா நிறைவேற்றப்பட்டதும் அதற்கு மிகத்தீவிரமான முயற்சி எடுத்த காங்கிரஸ் கட்சித்தலைவர் சோனியா காந்தியை எதிர்கட்சி உறுப்பினர்கள், அதுவும் சில ஆண்கள் வாழ்த்தினார்கள். "வெளிநாட்டைச் சேர்ந்தவள், இந்திய பிரஜை இல்லை, பிரதமராகத் தகுதியற்றவள், அவள் பிரதமரானால் நான் மொட்டை அடித்துக் கொள்வேன்" என்றெல்லாம் ஏகவசனத்தில் திட்டி, ஒரு காலத்தில் வெறுப்பை உமிழ்ந்த பாஜக தலைவி ஸுஷ்மா ஸ்வராஜ், மசோதா நிறைவேறியவுடன் சோனியா காந்தியால்தான் அது சாத்தியமாயிற்று என்று



மனதாரப் பாராட்டினார். அரசியல் ரீதியாக காங்கிரஸுக்கும் சோனியாவுக்கும் இது மைல் கல்தான்.

இந்திய அரசியல் சாஸனப்படி ஆணும் பெண்ணும் சமம் என்றாலும் நடைமுறை வாழ்வில் பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதியும், பிற்படுத்தப்படலும் தொடர்ந்து வரும் விஷயம் வெறும் கட்டுக்கதையில்லை. இந்திய துணைகண்டத்தில் திறமை இருந்தும் வாய்ப்புகளும் அதிர்ஷ்டமும் இல்லாத கோடானுகோடி பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காகக் குரல் கொடுக்கவும், அவர்கள் நலனுக்காகவும் அவர்களை முன்னேற்றவும் நாடாளுமன்றத்தில் பெண் பிரதிநிதிகள் தேவை. அவர்கள் குரல் எழுப்பும்போது நிச்சயமாக மாற்றம் ஏற்படும். பஞ்சாயத்துத்துத் தேர்தல்களில் அமலாக்கப்பட்ட பெண்கள் ஒதுக்கீட்டில் ஆரம்பத்தில் கணவன்மார்கள் கை ஓங்கியிருந்தது உண்மைதான். ஆனால், அதிகாரம் கைக்கு வந்து பணியின் நெளிவு சுளிவு தெரிந்து போனதும், அப்பெண்களின் ஆளுமையே மாறிப் போனது. பெண்கள் தலைமை தாங்கும் பஞ்சாயத்து நிர்வாகங்கள் ஆண்கள் செய்யாத பல சாகசங்களைச் செய்து காட்டி வருகிறது, ஆரம்பத்தில் நாம் பார்த்த பீகார் உள்ளாட்சி தலைவி போல்.

இந்த மசோதா பெண்களுக்கு அளிப்பது சலுகை இல்லை, சுதந்திரம். அவர்களின் அரசியல் உரிமைக்கான அங்கீகாரம்தான் இது. சுதந்திர இந்தியாவில் அரசுகள் மேற்கொண்ட பல சட்டத் திருத்தங்கள் - சகலருக்கும் ஓட்டுரிமை, ஜமீந்தாரி முறை ஒழிப்பு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு இட ஒதுக்கீடு ஆகியவை இந்திய சமூகத்தின் அரசியல் சமன்பாட்டை மிக அடிப்படை தளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. சமச்சீரான சமூகம் உருவாகும் பாதையை வகுத்தன. அத்தகைய ஒரு சமூக மாற்றம் ஏற்பட பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா நிச்சயம் பாதை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

பெண்கள் அரசியல் சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம், உலகின் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் புதிய அரசியல் சகாப்தம் துவங்கியுள்ளது.

# கருந்துளைகள் -13

ஏப்ரல் 01, முட்டாள்கள் தினம். பாடசாலை நாட்களை நினைத்துப் பாருங்கள். எத்தனை ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏமாற்றல்கள், வலியே தெரியாத ஏமாற்றங்கள். நினைத்துப் பார்க்கிறேன்! ஏன் நெஞ்சம் சிலிர்க்கின்றது' என்கின்றீர்களா? அந்தநாள் நினைவுகளை கொஞ்சமாக அசைபோட்டுப் பாருங்கள். அடிமனதில் காணப்படும் வேதனைகளுக்கு ஒத்தடமாக இராதுவிடினும், ஒரு கண வலிக் குறைப்பினைத் தரலாம். நம்நாட்டின் இன்பக் காலங்களில் அவையும், ...ஆனால் இங்கு இத்தினம் அவ்வளவாகக் களைகட்டுவ தில்லை. ஆனாலும் சிற்சில தெறிப்புகள் இருக்கத்தான் செய்கின்றன, அல்லவா!

சென்ற தடவையில் இரண்டு கலக்சிகள் மோதிக் கொண்டு ஒன்றிணைவது பற்றிக் கூறினேன். அது முற்றாகவே நிகழ்ந்து முடிவதற்கு 2.5 பில்லியன் வருடங்கள் எடுக்கும் என்பதனையும் விஞ்ஞானிகள் கூறுவதைத் தெரிவித்திருந்தேன். இந்தக் கலக்சிகளின் மையத்தில் காணப்படும் பெரிய கருந்துளைகள் ஒன்றிணையப் போகின்றன என்பதும் இப்போது நாம் அறிந்த விடயமாக-விட்டது. ஆக, எங்களது கணிப்பின்படி, இரண்டு பெரிய கலக்சிகள் ஒன்றிணைவதற்கு இன்னமும் ஐந்து பில்லியன் ஆண்டு காலம் எடுக்கும். இது ஒரு நீண்ட காலமென்பது நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரியும். இதன் அடிப்படையில் கலக்சிகளின் மத்தியில் உள்ள பெரிய கருந்துளைகள் எவ்விதம் தோன்றின என்பதற்கான ஊகமொன்றினை தற்கால விஞ்ஞானிகள் சிலர் தருகின்றார்கள்.

## பேரண்டம் - 61

இவ்வளவு பெரிய கருந்துளைகள், பெரிய விண்மீன்களின் இறப்பில் தோன்றிய பல கருந்துளைகள் ஒன்றிணைவதினால் உண்டாகியிருக்க முடியாது. ஏனெனில் சில பெரிய கலக்சிகளின் மத்தியில் உள்ள கருந்துளைகளின் திணிவு எமது கதிரவனின் திணிவினைப்போல் பல பில்லியன் மடங்குகளில் உள்ளன. மில்கிவே கலக்சியின் மையத்தில் உள்ள கருந்துளையின் திணிவு எமது கதிரவனின் திணிவின் 4 மில்லியன் மடங்களவில் இருக்கும் எனக் கணித்திருக்கின்றார்கள். இவ்வளவு பெரும் திணிவில் கருந்துளைகள் ஒன்றிணைவதற்கான காலம், பேரண்டத்தின் வயதினையும் விட அதிக காலமாக இருக்கும். அதனால் இக் கருந்துளைகள் வேறுவிதமாகத் தோன்றியிருக்க வேண்டும் என்பது அவர்களது கருத்து. ஏற்கனவே பெரிய விண்மீன்களில் இருந்து கருந்துளைகள் எவ்விதம் தோன்றுகின்றன எனப் பார்த்தோம். அவ்வகைக் கருந்துளைகள் முதலாவது வகைக் கருந்துளைகள். அவற்றினை stellar black holes என்பார்கள். கலக்சிகளின் மையத்தில் இருக்கக் கூடிய பிரமாண்டமான கருந்துளைகள் இரண்டாம் வகைக் கருந்துளைகள். இவை தோன்றுவது எப்படியாக இருக்கும் எனப் பார்க்கப் போகின்றோம். அதற்கான விளக்கம் பேரண்டத்தின் இன்னொரு இரகசியத்தினை யும் அம்பலப்படுத்துவது அல்லது தெளிவுபடுத்துவது போலவும் இருப்பதனால் இக்கருத்தானது சில விஞ்ஞானிகளால் சில-ாகிக்கப்படுகின்றது.

கலக்சிகளின் மையத்தில் உள்ள கருந்துளைகளின் எவ்விதம் தோன்றின என்பதனைத் தெளிவுபடுத்துவதில் பேரண்டத்தின் ஆரம்பகக் காலத்திற்குப் போகவேண்டியுள்ளது. கிட்டத்தட்ட 15 பில்லியன் ஆண்டு முன்பதாக எமது பேரண்டம் தோன்றியதில் இருந்து நடந்ததான நிகழ்வுகள் பற்றிப் பார்க்க வேண்டியுள்ளது. நெடுங்காலத்தின் முன்னராக நடந்தவைகள் அல்லவா! உறுதியுடன் கூறுவதற்கு முடியாது. அதனால் பல எடுகோள்களைக் கொண்டே அவை விளங்கப்படுத்தப்படுகின்றன என்பதனை நினைவுபடுத்திக் கொள்வோம்.



பேரண்டம், பிக் பாங்குடன் தோன்றி 500 மில்லியன் ஆண்டில் முதலாவது தலைமுறை வின்மீண்கள் தோன்றின என்கின்றார்கள் விஞ்ஞானிகள். ஈர்ப்பினால் திரண்ட ஐதரசன் அணுக்கள் இந்த முதல் லிண்மீன்களைத் தோற்றுவித்தன. இந்த முதல் லிண்மீன்களின் திணிவானது சராசரியாக எமது கதிரவனின் திணிவினைப் போல் 150 மடங்காக இருக்கலாம். அதிக அளவினது எனில் ஒருவேளை கதிரவனின் திணிவினைப் போல் 1000 மடங்கில். இருக்கலாம். இந்த விண்மீன்களும் ஐதரசன் உருகலினாலேயே சக்தியை வழங்கின. (இவை பற்றிய விளக்கங்களை எனது பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள் என்னும் நூலில் பார்க்கலாம்.)

### இருண்ட சடங்கள்.

உங்கள் கணினி (Computer) யில் ஏற்படும் குறைபாடுகளை நேரில் வந்து நிவர்த்தி செய்யவும் மற்றும் கணினி (computer) திருத்த வேலைகளுக்கும் அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள் நிமல் - 416.301.1999

**Commercial Business Space for Rent.**
**Midland & Silverstar**
Unit இன் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு.
416.669.3094 / 416.332.2126

## WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition.
Raj - ***647.269.6552***

## Car for sale

94 Honda Accord EXR, 290 km
விற்பனைக்கு உள்ளது. விலை $2000.
தொடர்புகளுக்கு: 647.700.6732

## CARS FOR SALE

2002 BMW X5 Blue colour $13,900,
2002 Toyota Corolla - 80K, $4,700,
2007 BMW X3 - $34,900,
2002 BMW X5 - $13,500, 200 km,
2005 Toyota Corolla - $9,800,
2005 Honda Accord - 2 door - $ 9,500,
தொடர்புகளுக்கு: ***416.575.5055***

## SPACE FOR RENT

**FINCH & MIDDLEFIELD**
Finch & Middlefield சந்திப்பில் அமைந்துள்ள GTA square mall இல் கடை வாடகைக்கு உண்டு. 2ஆவது மாடியில் #230. எல்லா விதமான வியாபாரங்களும் செய்ய விதமான இடம்.
416.889.3191/416.497.7660

## TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil.
(JK – Gr. 3) Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

மேலும் பக்கங்கம் 24, 26

# JOB JOB JOB

*MCCOWAN & SHEPPARD* பகுதியில் அமைந்திருக்கும் *Wood Factory* ஒன்றில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
- *Experienced Stairs Installer & Stairs Maker,*
- *Experienced Hardwood Flooring Installer,*
- *Experienced Receptionist & Sales Marketing, Customer Service*

ஆகிய வேலைகள் உண்டு. ஆங்கில மொழி கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். *Must have an experience.*



தொடர்புகளுக்கு: ***Tel.: 416.830.3932 / Fax: 416.292.6414***



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490/647.831.0070

**Tutorial 257** **Answers to Tutorial 257**

(1) Sam's age is 125% of Mary's age or 5/4 of Mary's age thus Mary's age is 4/5 or 80% of Sam's age.

(2) When 16 litre are added the gas tank is filled 2/3 - 1/2 = 1/6 of its capacity.
∴ its capacity in 6x16 = 96 litre.

(3) a = 3x +2y _________ (1)
b = 5x - 4y _________ (2)
solving the two equations for x and y (1) x2 + (2)
11x = 2/a + b x = 2/11a + 1/11b
substitute into (1) y = 5/22a - 3/22b

(4) Let the resultant velocity be V




Now $|v|^2 = 450^2 + 100^2$
$|v| = 460.9772$
Distance travelled = 3 x 461=1383km
Distance of plane is Ø is tan Ø = 100/450 = 2/9 Ø =12.53

(5) = g(x) = { x+3, x ≠ 3
{ 2+ √k, x ≠ 3
g(x) is continuous Therefore 2+ √k = 6
k = 4 √k = 16

**Tutorial 258** **Questions**

(1) John has 9 coins in his pocket. Each coin is worth less than $100. The coins represent four different denominations and include exactly one fifty - cent piece and three nickels. Find the largest amount he could have? (For Grade 7 & 8)

(2) In hockey standings, a win counts 2 points, a tie counts 1point, and a loss counts 0 points. After 10 games, the montreal canadians had won 5, tied 4, and lost 1. Of they continued to win, lose, and tie in this ratio determine their point total after 80 games. (For Grade 8 & 9)

(3) A conical paper cup of radius 5cm and heigh 15cm is leaking water at the rate of $20cm^3$/min. At what rate is the level of water decreasing when the water is 3cm deep? (For Grade 12)

(4) A rectangle lies in the 1st quadrant with one vertex at the origin and two of the sides along the coordinate axes. If the fourth vertex lies on the line defined by x + 2y - 10=0, then find the maximum area of the rectangle. (For Grade 12)

(5) The base of a rectangle lies along the x - axis, and the upper two vertices are on the curve defined by $y = k^2 - x^2$. Find the maximum area of the rectangle? (For Grade 12)

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Under taken for all arades from grade 4 to university 1st year. Special classes in advanced functions, vector calculation & data management for grades 11 & 12

Indiouvale and group classes available by an experience teacher Mr. S.F. Xavier. Classes available at 1. Scarborough 2. Stauffville and Richmond Hill

**CONTACT: 647.340.9490 / 647.831.0070**

**Tutoring**

*(Markham & Lawrence, Scarborough)*

**Grade 1-12, College & University**
*English, French, Math, Science*

***High School:*** *English, French, Physics, Chemistry, Biology, Math (Data Management, Calculus, & Advanced Functions included)*

***College (all Years):*** *English, French, Math, Physics, Chemistry, & Engineering Subjects*
***University (1st Year):*** *English, French, Math, Physics, Chemistry, & Engineering Subjects*

**Call Liz/Beena at: 416 859 4492**

தமிழ் இலக்கியத் தோட்டம்
TAMIL LITERARY GARDEN

## SCHOLARSHIP FOR C$1000

The Tamil Literary Garden will offer an annual scholarship to an undergraduate full-time student enrolled in a Tamil language or Tamil Studies course offered by a university in Canada. The conditions of the scholarship are as follows:

All full-time undergraduates currently (2009-2010) enrolled in a Tamil language or Tamil studies course offered by a university in Canada are eligible. All students wanting to participate should submit an essay on the topic given below by 30 April 2010.

**Topic:** "Canadian Multiculturalism - A Tamil Perspective." The essay should not exceed 3000 words. It should be double spaced, and a hard copy should be sent to Scholarship Essay, c/o Chelva Kanaganayakam, Trinity College, 6 Hoskin Avenue, University of Toronto, Toronto, Ontario, M5S 1H8 together with an electronic version to appatlg@gmail.com. The essay should be an original contribution, written for the purpose of competing for this scholarship and should not have been published elsewhere.

**Scholarship:** The award of C$1000 will be given to the student who wrote the best essay. The award ceremony of Tamil Literary Garden will be held in July 2010 and the essay published in Kalam magazine.

# ஜியோர்ஜியா...

**18ஆம் பக்கத்தொடர்ச்சி**

அமைத்திருந்தார்கள். உணவுச் சாலையில் எந் நேரமும் வேண்டிய உணவு வகைகளைப் பெறக்கூடியதாய் இருந்தது. அங்கு ஒரு காணிவேல் போன்று மின்விளக்குகள், பல வண்ணங்களிலும் அமைக்கப்பட்டிருந்தன. மக்கள் வெள்ளத்தால் அவ்விடம் ஒரு திருவிழாப் போன்றே காட்சியளித்தது. மிகவும் ஆறுதலாக யாவற்றையும் பார்ப்பதற்கு ஒரு நாள் போதாது என நினைக்கின்றேன். இத்துடன் பல நினைவுப் பொருட்கள் வாங்குவதற்கு ஒரு பகுதியில் ஒரு கடை இருந்தது. இதில் சிறுவர்களுக்கும் முதியோருக்குமான பல உடைகள் குறிப்பாக ரீசேட் முதலியனவும் விளையாட்டுப் பொருட்களும் இருந்தன. யாவையும் பார்த்த பின் வெளியேறும் வாசலுக்கண்மையில் இது அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் காட்சிச்சாலை முழுவதும் நன்கு வடிவமைக்கப்பட்டு, நன்கு திட்டமிடப்பட்டு, நன்கு பராமரிக்கப்பட்டு வருவது பெரிய ஆச்சரியமே.



$100 $250 $100

$250 நீங்கள் Welfare, ODSP பணத்தில் வாழ்பவர்களாக இருந்தால் எமது நிறுவனத்துடன் இணைந்து தொண்டு செய்யும் பொழுது மேலதிகமாக $250.00 டொலர்களையும் அத்துடன் $100.00 டொலர்களையும் தொடர்ந்து 6 மாதத்தில் இருந்து ஒரு வருடம் வரை பெற்றுக் கொள்ளலாம். $250

$100 $100

Ontario Vegetarian Food Bank

தொண்டர் சேவை

$250 2370 Midland Ave, Scarborough, $250

2400 Finch Ave., North

www.Vegefoodbank.ca

416.744 (Help).4357

$250 $100 $250 $100 $250

BUSINESS FOR SALE

PORTUNION & ISLAND ROAD

Scarborough

Roma Pizza Wings. Monthly rent $679.25

Contact: 416.284.2525 / 416.320.8979

7 Days - 11.00Am to 11.00Pm

Guitar Lesson Classes

கிட்டார் வகுப்புக்கள்



பாடசாலைக்கு போய் வந்த பின்பும் விடுமுறை நாட்களிலும் உங்கள் பிள்ளைகள் தங்கள் பொழுதை பயனுள்ளதாக செலவிட அழையுங்கள். திறமை வாய்ந்த ஆசிரியர் வினோத்: **416.444.3402**

*After school & On weekends let your children enjoy their time effectively & wisely call for guitar classes. vinoth: 416.444.3402*

# அடமானக்கடனில்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

பொருளாதார ஆய்வாளர்களின் எதிர்வு



கூறலின்படி ஏப்ரல் மற்றும் யூன் மாதங்களில் எதுவித வட்டி மாற்றமும் ஏற்படாது என, யூலையில் 0.5% தொடக்கம் 0.75% வரையான அதிகரிப்பும், செப்ரெம்பரில் 0.25% அதிகரிப்பும் மற்றும் டிசெம்பரில் மேலதிக 0.25% அதிகரிப்பும் ஏற்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. 2010ஆம் வருடக் கடைசியில் வட்டிவீதம் 1.5% தொடக்கம் 1.75% வரை ஏறலாம் என எதிர்பார்க்கலாம்?

அத்துடன் அடுத்தவருடம் 2011 இன் மத்தியபகுதியில் மேலும் அதிகரித்து வரும் வட்டிவீதம் 2.5% வரை ஏறலாம் எனவும் கூறப்படுகின்றது.

உதாரணமாக $300,000 வரை அடமானக்கடனிற்கு பெற்றக்கடனின் மாதாந்த கட்டுப்பணம் யூன் 2011 மட்டில் $450 இலிருந்து $1000 வரை மேலதிகமாக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே அடமானக்கடன் வைத்திருப்பவர்களில் அடமானம் முற்றுப்பெறும் காலம் (Maturity Date) மேலும் 2011 ஆம் அல்லது 2012 ஆண்டளவில் வருமாயின், அந்த காலத்தில் வட்டிவீதம் இப்பொழுதுடன் ஒப்பிடும்போது உச்சநிலைக்கு வரக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. எனவே, ஏற்கனவே இருக்கும் கடனை மீளாய்வு செய்து புதிதான கடனாக மாற்றுவது சிலவேளை நல்ல பலனைக் கொடுக்கலாம். தகுந்த அடமானக்கடன் முகவருடன் தொடர்பு கொண்டு, இதனைப்பற்றி ஆராய்வு செய்வது சிறந்ததாகும்.

அனுபவமிக்க அடமானக்கடன் முகவர் சரியான/தகுந்த/உங்கள் நிலைக்கேற்ப அறிவுறுத்தல்கள் தரலாம்.

COOK

RED SEAL

CERTIFICATE COURSE

**Red Seal** சான்றிதழ் பெற உதவும் வகுப்புக்கள்

ஒன்ராறியோ அரசாங்கத்தினால் வழங்கப்படும் REAL SEAL சான்றிதழ் பெற விரும்புகிறீர்களா?

இதுவரை காலமும் அரசாங்கத்திடம் இருந்து சான்றிதழ் பெற முடியாதவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்.

தவறவிடாதீர்கள்

உடன் தொடர்பு கொள்ளவும் : கிறிஸ் - **647.444.6092**

ஜோர்ச் பிறவுண் கல்லூரியில் சமையற்கலையிலும் உணவைக் கையாளும் கலையிலும் டிப்புளோமா சான்றிதழ் பெற்ற அனுபவமிக்க தற்போது Toronto வில் பிரபலமானவரும் Station Chef (Chef De Partie) யாக கடமை புரிபவரால் தமிழில் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

பலர் இவரிடம் கலைபயின்று அரசாங்கத்திடமிருந்து சான்றிதழ் பெற்றுள்ளனர். மேலதிக தொடர்புகளுக்கு

**KRISH: 647.444.6092**

# வீட்டுக் கடனை...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

அபராதத் தொகையும் அதிகமாக இருக்க வாய்ப்பு உண்டு.

- மீதமுள்ள காலம் அதிகம் என்றால் அபராதத் தொகையும் அதிகமாக இருக்க வாய்ப்பு உண்டு.

சில வங்கிகள் ஆரம்ப நாளில் கொடுக்கப்பட்ட ரேட் தள்ளுபடியையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும். மேலும் Cash Back என்று சொல்லப்படும் சில பணச் சலுகைகளை வங்கியில் இருந்து பெற்றிருந்தால் அதையும் அபராதத் தொகையில் சேர்த்துக் கணக்கிடுவார்கள். எல்லா நிதிநிறுவனங்களும் ஒரே மாதிரி கணக்கிடாதது வேதனைக்குரிய விடயம். இந்த நிதி நிலை அறிக்கையில் பெடரல் அரசாங்கம், இந்த வட்டி வீத வித்தியாசமும், வட்டி அபராதமும் எப்படிக் கணக்கிடப்படுகின்றது என்பதை நிதி நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்குப் புரியும் வகையில் ஆரம்பத்திலேயே சொல்ல வேண்டும் என்று சொல்லியிருப்பது வரவேற்கத் தக்க விடயம்.

இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியது.

- முன்னதாகவே அபராதத் தொகை எவ்வளவு என்று உங்கள் சம்பந்தப்பட்ட வங்கியிலிருந்து நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
- முடிவு எடுக்கு முன் அவர்களுடன் பேரம் பேசிப்பாருங்கள். சிலசமயங்களில் சிறு சிறு சலுகைகள் கிடைக்க வாய்ப்பு இருக்கும்.
- உங்கள் வாய்ப்புக்களையும், மாற்று வாய்ப்புக்களையும் நன்றாக ஆராயுங்கள்.
- பிறகு உங்களுக்கு ஏற்ற முடிவை எடுங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆரம்பத்திலிருந்து நேர்மையான நுட்பமான விபரம் அறிந்த நபருடன் உங்கள் நிதி சம்பந்தமான தொடர்புகளை வைத்துக் கொள்ளுங்கள். நல்ல ஆலோசனை பின்னாளில் வரவிருக்கும் பெருநட்டங்களைத் தவிர்க்கலாம். இன்றைக்கு ரேட் என்ன என்பது மட்டுமே முடிவு எடுக்கக் காரணமாக இருக்கக்கூடாது. வாழ்க்கையைத் தொலைநோக்குப் பார்வையுடனும் பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

**நீதி : செயல்படு முன் யோசி**

# பாரிசவாதமும் உணவும்

# Stroke & Food

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

இதனை பக்கவாதம் அல்லது பக்கவாயு எனவும் கூறுவர். நமது இருதயத்தின் ஒழுங்கான இயக்கத்தில் ஏற்படும் பாதிப்பை பாரிசவாதம் (Stroke) என அழைப்பர். இதற்கு மூளையில் உள்ள இரத்தக்குழாய்களும், நரம்புத்தொடர்புகளும் இன்றியமையாதன. அதிகமாக வயதானவர்களைப் பாதிக்கும். இவ்வியாதியை மருத்துவர்கள் "ஹெமிப்லிஜியா" என அழைப்பதுண்டு. 50 - 66 வயதை உடையோரைத் தாக்கினாலும் 30 - 45 வயதினரையும் பாதிக்கும் தன்மை உடையது.

மூளையின் இயக்கம் நன்கு சரியாக செயலாற்றுவதற்குப் பிராணவாயும் (Oxygen) குளுக்கோசும் தொடர்ச்சியாக இருதயத்தில் இருந்து செல்லும். மூளைக்குப் பிராணவாயு (Oxygen) செல்லாது குறைந்து விட்டால் சுயநிலையை இழக்க நேரிடும். பொதுவாக மூன்று நிமிடத்திற்குள் பிராணவாயு உரிய இடத்திற்கு போகவில்லை என்றால் சிகிச்சை பயனற்று மயக்கநிலை (தெளிவற்றநிலை) ஏற்பட்டு விடும் என அறியக்கிடக்கின்றது. எனவே மூளையின் வேலை சிறப்புடன் அமைய பிராணவாயும் குழுக்கோசும் சேர்ந்த இரத்தோட்டம் தடையின்றி மூளைக்குச் செல்ல வேண்டும். இக்காரணங்களினால் தடைப்பட்டு ஏற்படும் பாதிப்பே பாரிசவாதம் (Stroke) ஆகும்.

நமது உடம்பின் ஒருபக்கம் கைகால் விளங்க அல்லது செய்கை செய்யமுடியாத செயலற்ற நிலைதான் பக்கவாதமாகும். மூளையின் இடது பக்கத்தில் அமைந்துள்ள பேச்சுக்குரிய மையம் பாதிக்கப்பட்டால் வலது பக்க கை, கால் அல்லது வலது பக்க முழுப்பகுதியும் பாதிக்கப்படும். நமது மூளைப் பகுதிக்கு நாலு முக்கிய இரத்தக்குழாய் இரத்தத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றன. இதில் ஏதாவது ஒன்று செயல் இழந்து போனால் மற்ற இரத்தக்குழாய் மூலம் இரத்தம் சென்று கொண்டிருக்கும். ஆனால் இந்நிலை நிரந்தரமாக அமையாது. எப்பொழுது குழாய்களில் அடைப்பு ஏற்பட்டுச் செயல்தன்மை இழக்கின்றதோ அப்பொழுது தான் இந்த Stroke என்ற பக்கவாதம் ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது. அதாவது மூளைப்பகுதிக்கு இரத்தோட்டம் தடைப்பட்டு நரம்பு, இரத்த திசுக்கள் சேதமடைய தொடங்கிவிடும். செயல் அற்றுப்போகும். இந்நிலையில் மூளைப்பகுதியில் ஒருவித வீக்கநிலை காணப்படும் எனவும் அறியக்கிடக்கின்றது.

எனவே மூளையின் வேலை சிறப்புடன் அமைந்து செயலாற்ற பிராணவாயும், குழுக்கோசும் கூடிய இரத்தோட்டம் தடையின்றி மூளைப்பகுதிக்குச் செல்ல வேண்டும். எதுவிதகாரணங்களினாலும் தடை ஏற்பட்டு பாதிப்பினால் Stroke என்கின்ற பாரிசவாதம் சிலருக்கு திடீரென அல்லது படிப்படியாக ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது. மூளைக்குச் செல்லுகின்ற இரத்தோட்டம் பெரும்பாலும் நின்றுவிட்டால் உடனே பாரிசவாதம் உண்டாகும். இதனை ஆங்கிலத்தில் Acute Stroke என அழைக்கப்படுகின்றது. சிலருக்குப் படிப்படியாக இரத்தோட்டம் தடைப்பட்டு வரும். பாரிசவாதத்தை Stroke evolution என அழைக்கப்படுகின்றன. இந்நிலை பெரும்பாலும் 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு ஏற்பட வழியுண்டு.

இவ்வியாதி பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் காணப்படுவதாக அறியமுடிகின்றது. மரணநிலையை பார்க்கும் போது மாரடைப்பு, புற்றுநோய், பாரிசவாதம் (Stroke) போன்றவை எமக்கு கவலையை ஏற்படுத்தக்கூடியதாகும்.

மேலும் பாரிசவாதம் என்ற நோயைப் பார்க்கும்போது மூளைக்கு இரத்தம் செல்லும் போது இரத்தக்குழாய்களில் (Intracerebral Vessel) கொழுப்பு பொருள் படிந்து அடைப்பு ஏற்பட்டு வரலாம் அல்லது இருதயத்தில் இருந்து மூளைக்குச் செல்லும் இரத்தக்குழாய்களிலோ அல்லது மகாதமனி (Aorta) போன்ற முக்கிய குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு இரத்தக்குழாய் சிதைந்து போய் வருகின்ற பாரிசவாதத்தை Embolus எனவும், இரத்தத்தில் உறைவு ஏற்பட்டு அடைப்பு நிகழ்ந்த பாரிசவாதத்தை Stroke எனவும் அழைக்கப்படுகின்றன. இவ்வேளையில் இருதய துடிப்பும் மாறுபட்டநிலையில் காணப்படும்.




மேலும் மூளையின் இரத்தக்குழாய்கள் தளர்வடைவதால் அல்லது இரத்த அழுத்தம் அதிகரித்தால், மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டு பாரிசவாதம் வரும். இதனை Intracerebral Hemorrhage எனக் கூறப்படும். இந்நிலை பெரும்பாலும் இரத்தக்கொதிப்பு கூடியவர்களுக்கு வர இடம் உண்டு. அல்லது விபத்தில் சிக்கி தலைப்பகுதியில் பலமான தாக்கம் ஏற்பட்டு இரத்தக்கசிவு காணப்படின் பாரிசவாதம் ஏற்படலாம். இதனை Sub Arachnoid Hemorrhage என அழைக்கப்படும்.

இந்த வியாதியானது எந்த வயதிலும் வரலாம் எனக் கூறினோம். அதாவது சிறுவயதுடையோர் சிலருக்கு மூளையில் இரத்தக்குழாய் பாதிப்பு இருந்தாலும் அல்லது அடைப்பு இருந்தாலும் நீண்டகாலம் வாழமுடியாமல் மரணம் நிகழ்வதுமுண்டு. இரத்தக்குழாய்களில் சிலவகைக் கிருமிகளினால் தாக்கம் ஏற்பட்டு இந்நிலை ஏற்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

எனவே இந்நிலை ஏற்படும்போது உரியவரின் உடல்நிலை பற்றிப் பார்ப்போம். உடலில் கை, கால் மட்டும் தான் பாதிப்பு அடைவதில்லை. உடம்பு பூராகவும் பாதிப்படையலாம். அதாவது நாம் பேசும் சக்தி தொடக்கம் உறுப்புக்கள் பலவும் பாதிப்படையும். மேலும் மூளையில் ஒவ்வொரு உறுப்புக்களின் செயலைக் கட்டுப்படுத்தும் நரம்புகள் பல அமைந்துள்ளன. அந்த நரம்புகளில் எப்பகுதி தாக்கப்படுகின்றதோ அதற்கு ஏற்ப உறுப்புக்கள் பாதிக்கப்படலாம் எனவும் அறியமுடிகின்றது.

வலது புற உடம்பின் உறுப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நரம்புகள் நமது மூளையின் இடது பக்கத்தில் இருக்கின்றன. இதேபோன்று இடது பக்கம் உறுப்புக்களைக் கட்டுப்படுத்தும் நரம்புகள் வலது மூளைப் பகுதியில் இருக்கின்றன. பேச்சுக்குரிய நரம்புகளும் மூளைப்பகுதியிலே தான் இருக்கின்றது. எனவே இவற்றில் தாக்கம் ஏற்பட்டாலும் செயல் இழக்க நேரிடும் எனவும் கூறப்படுகின்றது.

மூளையின் இடதுபக்க இரத்தக்குழாய், நரம்பு தாக்கப்பட்டால் இரத்தோட்டம் தடை ஏற்பட்டு நரம்புகள் செயல் இழந்து உடம்பின் வலது கை, கால் உணர்வு இழந்து முகத்தின் வலது பாகமும் இழுபட்டு பேசமுடியாத நிலைதென்படும். இதேபோன்று வலது பக்க மூளையில் மாற்றம் ஏற்பட்டால் இடப்பக்க உறுப்புக்கள் இயங்க முடியாதநிலை ஏற்பட்டு விடும். ஆனால் சாதாரணமாக ஓரளவு பேசிக்கொள்ள முடியும்.

சிறு இரத்தக்குழாய்கள் தாக்கப்பட்டால் சிலருக்கு கை பாதிப்படையும். அல்லது பேச்சுப்பேச முடியாமல் இருக்கும். குரல் ஒலி தென்படும். ஆனால் பேசுவது விளங்காமல் இருக்கும். மறதி நிலையுடன் பார்வையும் மங்கிவிடும் நிலையும் ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது.

சிலரைப் பார்க்கும் போது இந்நிலையில் மனக்குழப்பத்துடன் காணப்படுவார்கள். உடல் யாவும் விறைப்பாக இருப்பது போன்ற உணர்வு தென்படும். எனவே ஒரே பக்கத்திற்கு உரியவர்களை படுக்கையில் விடக் கூடாது. சிலவேளையில் படுக்கை புண் ஏற்பட்டு விடும்.

இவ்வியாதி ஏற்பட்டவர்களைக் குணப்படுத்துவது இலகுவான காரியம் அல்ல. எந்த இடத்தில் உள்ள இரத்தக்குழாயில் அடைப்பு அல்லது தடை, சேதம் ஏற்பட்டதோ அதைப் பொறுத்தே மாறும் நிலையைக் கூறமுடியும். எதற்கும் வைத்தியர்களின் தொடர்பும் சிகிச்சையும் முக்கியமாகும். இந்நோயைக் குணப்படுத்துவதற்கு முதல் முக்கியம் யாதெனில் நோயை நன்கு நிதானித்துக் கொள்ள வேண்டும். இதற்குரிய சிகிச்சைகளையும் சிறந்த ஆலோசனைகளையும், தங்கள் வைத்தியர்களிடம் சென்று பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வியாதிக்கு சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் நம் நாட்டில் கடுமையான பத்திய பாவனைகளை கடைப்பிடித்து இவ்வியாதியை குணப்படுத்தியவர்களையும் நாம் நன்கு அறிவோம். இதன் மூலம் அறிவது யாதெனில் உணவே வியாதியை ஏற்படுத்தும் என்பதாகும். ஆகையினால் நாம் நாளாந்தம் சமசீர் உணவைக் கையாளும்போது வயது, உடல்நிலை, நாம் செய்யும் தொழில் என்பவற்றைக் கவனித்து ஏற்ற உணவை அளவுடன் கையாளவேண்டும். உணவில் கட்டுப்பாடு முக்கியம். மேலும் இவ்வியாதியில்

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



தொடர்ச்சி 33ஆம் பக்கம்



# ஒல்லியான உடல் பெற யோகாசனங்கள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

ஒல்லியான உடல் தோற்றத்தைப் பெறுவது என்பதனை விட உடல் பருமனைக் குறைப்பது எப்படி? என்பது தான் முக்கியம். பருத்த உடலை ஒல்லியாகவும் ஆரோக்கியமாகவும் மாற்றிட முறையான யோகாசனப் பயிற்சியே அதிக பலனைத் தருகிறது. உடலிலுள்ள ஒவ்வொரு பகுதியையும் குறைப்பதற்குத் தனித்தனி ஆசனங்கள் இருக்கின்றன. நமது உடலில் எப்பகுதி பருமனாக இருக்கின்றது. முக்கியமாக வயிற்றுப் பகுதிதான் அது. அடுத்ததாக இடுப்புப்பகுதியில் அதிக சதைப்பற்று காணப்படுகிறது. அதற்கு அடுத்ததாக கால், தொடைப்பகுதி இந்த தொடைப்பகுதியில்தான் அதிக சதைகள் திரண்டு தேக்க நிலையை அடைகின்றது.

சதைப்பற்றுக்கள் எவ்வாறு நமது உடம்பில் உருவாகின்றது என்றால் நாம் உண்ணும் உணவில் புரட்டீன் (Protein) அதாவது மாவுச்சத்துப் பொருட்கள் தான் காரணம். நாம் உண்ணும் உணவுப் பொருட்களில் மாவுச்சத்து தவிர்க்க வேண்டிய ஒன்று.

### மலச்சிக்கலும் செரியாமையும்

உடல் பருமனாவதற்கு முக்கிய காரணம் மலச்சிக்கல். இந்த நிலையால் உருவாகும் அபான வாயு கீழே போகாது உடலில் மேல் பகுதியை நோக்கி எழும்போது பலவித வாயுத்தொல்லைகள் (Gastric Problem) ஏற்படுகிறது. வயிறு தொடைப்பகுதிகளில் வீக்கம் உருவாகி நாளடைவில் உடல் உறுப்புக்களைத் தடிக்கச் செய்கின்றது. அதேபோல் நாம் உண்ணும் உணவு ஒரு குறிப்பிட்ட மணிநேரத்தினுள் சமிபாடடையாது விடின் அதிலிருந்து சில அமிலங்கள் மேலெழுவதால் ஏப்பம் அதிகம் வரலாம். அதன்பின் பித்தம் வாதம் வாயு என்பன சமநிலையை இழந்து விடுவதால் வயிற்றுப்பகுதி பருமனாகி ஊளைச்சதைகள் உருவாகின்றன. இவ்வாறு நாளடைவில் உடல் குண்டாகி விடுகிறது.

### ஒல்லியாக மாற யோகாசனங்கள்

உடல் பருமனைக் குறைக்கவும் ஒல்லியான தோற்றத்தைப் பெறவும் யோகா என்ற வகையில் மிகவும் முக்கியமான ஆசனங்கள் - தனுராசனம், பவனமுத்தாசனம், திரிகோணாசனம், கோணாசனம், அர்த்த மச்சேந்திராசனம், வக்ராசனம், பத்மாசனம், மகாமுத்ரா, யோகமுத்ரா போன்றவற்றை பழகி வந்தால் போதுமானதாகும்.

### தனுராசனம்

செய்முறை - குப்புறப்படுத்துக்கொண்டு பின்புறம் இரண்டு கால்களையும் பிடித்துக்கொண்டு வயிற்றுப்பகுதி மட்டும் தரையில் படும்படி தலையையும் கால்களையும் மேலே உயர்த்தி முன்னும் பின்னும் ஆடவேண்டும். பின் அதேபோல் வலது இடது பக்கமாகவும் ஆடவேண்டும். இவ்வாறு 20 முறை 3 தடவை செய்யவேண்டும். முடிவில் 1 நிமிடம் சவாசனம் செய்ய வேண்டும்.

**பலன்கள்**

இவ்வாசனம் செய்யும்போது வயிற்றுத் தசைகள் நன்கு இறுக்கம் அடைந்து நன்றாகச் சுருங்கி வயிற்றுப்பகுதி குறைக்கப்படுகின்றன. அத்துடன் அடிவயிற்றில் தேங்கியிருக்கும் கழிவுப்பொருட்கள் வெளியேற்றப்படுகின்றன. இதனை தினமும் காலை, மாலை செய்யவேண்டும்.

### திரிகோணாசனம்



கால்களை இரண்டு அடிக்கு அகலமாக வைத்து நின்று கொண்டு இரண்டு கைகளையும் நீட்டி வலதுபுறம் சாயவேண்டும். அப்படி சாயும்போது வலதுகை வலது காலை தொடவேண்டும். இதேபோல் இடதுபுறமும் செய்ய வேண்டும். 20 முதல் 30 எண்ணிக்கை வரை செய்ய வேண்டும்.

**பலன்கள்**

இவ்வாசனம் செய்யும்போது வயிற்றுப் பகுதி பின் பக்கவாட்டிலுள்ள சதைப்பற்றுகள் குறையும். தொடைப்பகுதிமுதல் வயிற்றுப் பகுதிவரையிலுள்ள சதைகள் குறைக்கப்படுகின்றன. இவ்வாசனத்தைப் போன்று கோணாசனத்தையும் செய்யும் போது கைகளை மட்டும் மேல்தூக்கி கோர்த்தவாறு இருக்க வேண்டும்.

### பவனமுத்தாசனம்

தரையில் மல்லாந்து படுத்துக்கொண்டு இரண்டு கால்களையும் மடக்கி வயிற்றுப் பகுதியில் அழுத்தியவாறு கைகளால் இறுக்கிப் பிடித்துக்கொண்டு வலது, இடது புறமாகவும் மேலும் கீழுமாகவும் ஆடவேண்டும் 20 தடவை செய்ய வேண்டும். இவ்வாசனத்தால் வயிறு இடுப்பு தொடைகள் மார்பு போன்றவற்றிலுள்ள ஊளைச் சதைகள் குறைக்கப்படுகின்றன.

### அர்த்த மச்சேந்திராசனம்

**செய்முறை**

இரண்டு கால்களையும் நேராக நீட்டிக்கொண்டு வலது காலை மடக்கி வைக்கவும். இடது கால் பாதம் வலதுகால் தொடைப்பக்கத்தில் தரையில் அழுத்தியவாறு வைத்துக்கொண்டு கைகளைத் திருகியவாறு உடலை திருக வேண்டும். இதேபோல் மறுபக்கமும் மாறி மாறி செய்ய வேண்டும். மூன்று முறை 20முதல் 30 எண்ணிக்கை வரை இருக்க வேண்டும்.

**பலன்கள்**

இவ்வாசனம் செய்யும்போது வயிற்றுத் தசைகள் முறுக்கப்படுகிறது. புரதம், கொழுப்பு அனைத்தும் கரைக்கப்படுகிறது. உடல் ஒல்லியாக மாறுகின்றது. இவ்வாறு மற்றைய ஆசனங்களையும் ஒரு யோகாசன ஆசிரியரின் துணையுடன் பழக வேண்டும்.



அர்த்த மத்சயேந்திராசனம்
ARDHA MASTYENDRASANAM



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm


**YOGA - MEDITATION CLASSLESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




முட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது**

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

**Computer Repair Services**

சகல விதமான கணனி சார்ந்த பழுதுபார்த்தல் மற்றும் Virus Removal உட்பட அனைத்து வேலைகளையும் செய்து கொள்ளலாம். Troubleshooting இலவசம். ஏற்படக்கூடிய செலவு பற்றிய விபரங்ளை முற்கூட்டியே அறிந்து கொள்ள முடியும்.

PC Repair, Upgrade, Anti-Virus & Fire-Wall Installation; Virus, Spyware, Malware Removal.

Data Recovery from infected or corrupted, & mistakenly formatted Computers.

Setup your Router & wireless security. Buy used and new computers. (Scanning, Browsing, Printing, Toner Cartridges & Refill etc..

**PRO-WIN COMPUTER SERVICES**

919 Ellesmere Road, Unit – 302 , Scarborough, ON, M1P 2W7.
*(KENNEDY & ELLESMERE- South East Corner )*
*(Besides Active Green + Ross & In front of Honda )*





**Tel: 647 340 5568/416 879 7489 (தமிழ் -English)**
**( Contact : *Niruthan Nadarajah* )**
**Mon-Sat 10 am – 8 pm / Sun 10 am – 6 pm**

# புதிய தலைமுறைக்கு ஓர் அறிமுகம்

## ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர்

சென்ற இதழ் தொடர்ச்சி...

எம்.கே.தியாகராஜபாகவதர், தன் சங்கீத ஞானத்தாலும் மேடை நாடக நடிப்புத் திறனாலும் பிரசித்திப்பெற்றார் என்றாலும், அவர் வாழ்வில் புகழின் ஆகப்பெரிய உயரத்தை தொட்டது அவரது திரைப்பட வாழ்வில்தான். பாகவதரின் முதல் படமே (பவளக்கொடி, 1934) அபார வெற்றியடைந்தது, மட்டுமில்லாமல் பாகவதருக்கு சினிமா உலகில் ஒரு பெரிய மதிப்பையும் பெற்றுத் தந்தது. நாடக உலகில் எப்படி கிட்டப்பா - சுந்தராம்பாள் ஜோடி பாகவதருக்கும் சுப்புலட்சுமிக்கும் பெரிய சவாலாக இருந்தார்களோ, அதே மாதிரி பாகவதர் சினிமா உலகில் காலடி வைத்த காலத்திலும், அன்று சங்கீத மேடையில் மிகப் பிரபலமாக இருந்த பலவித்வான்களை அவருக்கு எதிர்க்கொள்ள வேண்டியிருந்தது. ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர், வித்வான் ஸ்ரீனிவாச ஐயர், மன்னர்குடி நரசிம்ம ஐயங்கர், மங்கலம் நடேசஐயர், மஹாராஜபுரம் விஸ்வநாதஐயர், முசிறி சுப்ரமணிஐயர், ஜி.என்.பாலசுப்ரமணியன், துறையூர் ராஜகோபாலசர்மா, வி.வி.சடகோபான், எம்.எம்.தண்டபாணி தேசிகர் என ஒரு மிகப்பெரிய பட்டாளமே இருந்தது. இந்த பெரிய சவாலை எதிர்கொண்டும் பாகவதர் பிரமிக்கதக்க வெற்றிகண்டார். அதற்கு முக்கிய காரணம், அவர் பாடிய பாட்டுக்கள் அனைத்தும் சுத்தமான கர்நாடக இசையில் இருந்தாலும், கேட்பவர்களும் சாஹியத்தின் பொருள் அறிந்து அனுபவிக்கும்படி பாட்டின் பொருள் அறிந்து பாடியதுதான். பாகவதர் பக்திச் சுவையை மட்டும் பாடவில்லை, பலதரப்பட்ட ரசிகர்கள் - வாலிபர்கள், பக்திமான்கள், வயோதிகர்கள் - என அனைவரும் கேட்டு மகிழும் படியான பலசுவையுடன் கூடிய பாடல்களை எளிய நடையில் எல்லோருக்கும் புரியும் படி பாடினார். இதனால், சங்கீதம் அறிந்தவர்கள் மட்டும் இன்றி சங்கீதம் அறியாதவர்களும் கர்நாடக இசையை ரசித்துக் கேட்டனர். பாகவதர் பாடல்கள் சாதாரண அக்கால ஏழை மக்களுக்கும் துன்பப்படுவோருக்கும் அருமருந்தாக இருந்தது.

பாகவதர் பாடல்களைக் கேட்கும் போது அவர் சுத்தமான கர்நாடக இசையில் சிறந்த ஞானம் உடையவர் என்பது புலப்படும். 'பவளக் கொடி'யில் பாகவதர் பாடிய, 'சோமசேகரா' (கரகரபிரிய), 'கண்ணாகரிய முகில் வண்ணா' (பைரவி), 'வனிதைக்குள் உயர்வான' மற்றும் 'முன்னம் ஒரு சன்யாசி' போன்ற விருத்தங்களும் மக்களிடையே பெருத்த வரவேற்பையடைந்தது. 1936இல் வெளிவந்த 'நவீன சாரங்கதார' படத்தில் பாகவதரின் 'சிவபெருமான் கிருபை' (சுரடி) பாடல்கள் பெருத்த வெற்றியைப் பெற்றன. துரதிருடிடவசமாக இவ்விரு படங்களும், பாகவதர் நடித்த 'சத்யசீலன்', 'ராஜமுக்தி' ஆகிய படங்களும் இன்று திரையிட்டுப் பார்ப்பதற்கு கிடைக்காமல் இருப்பது மிக வருந்தத்தக்க விஷயம்.

பாகவதரின் இரண்டாவது படமான 'சிந்தாமணி'யும் (1937) பெருத்த வெற்றியைப் பெற்றது. பாகவதரின் தயாரிப்பான 'சத்யசீலன்' படத்தில், 'உத்யோகப் பட்டமெல்லாம்' (ராகமாலிகா), 'ராஜயோக ஞானகுருவே' (கரகரபிரி), 'இங்கீலி' நோட் மற்றும் தாமதமேன்ஸ்வாமி (தோடி) போன்ற பாடல்கள் சக்கை போடு போட்டன. 'தாமதமேன் ஸ்வாமி' பாடலை பாகவதர் இசைத்தட்டாகத் கொடுக்கவில்லை என்றாலும் இதை மேடைகளில் ஜி.என்.பி.அவர்கள் மிகப் பிரபலப்படுத்தினார்.

'அம்பிகாபதி' வரையிலான படங்களில் பாகவதரின் பாடல்களில் நாடகபாணி உத்திகள் இருந்தாலும் இதைக் தொடர்ந்து வந்த, 'திருநீலகண்டர்'



முதன்முதலில் தொடர்ந்து ஒரே தியேட்டரில் ஒரு வருடத்திற்கு மேல் ஓடி சாதனை படைத்த தமிழ்ப்படம் இதுதான். இந்தப்படம் பாகவதருக்கு முதல் சூப்பர் ஸ்டார் அந்தஸ்தையும் கொடுத்தது. இதில் இவர் பாடிய, 'பேசும் தரமோ காதல்', 'மாயப்பிரபஞ்சத்தில் பஜனை செய்வோம்', 'கண்ணன் நாமம்', 'ராதே உனக்கு', 'சந்திரசூரியர்', 'பதிபதம் பணிவது' போன்ற பாடல்கள் மக்களை பல முறை கேட்கவும் பாடவும் வைத்தது. அடுத்தடுத்து பாகவதருக்கு தொடர்ந்து வெற்றிதான். 'அம்பிகாபதி' திரைப்படம் வெளிவந்ததும் பாகவதரின் படம் அலங்கரிக்கப்படாத வீடுகளே தென்னாட்டில் இல்லை என்னும் நிலை உருவானது. கடவுளின் மறு அவதாரமாகவே பாகவதர் போற்றப்பட்டார்.

படத்திலிருந்து பாகவதரின் சங்கீத ஞானம் மிகச் சிறப்பாக வெளிப்பட ஆரம்பித்தது. இந்தப் படத்தில் பாகவதர் பாடிய 'உன்னழகை காண இரு பவளமால் வரை' (ராகமாலிகா), 'சிதம்பர நாதா' (ஹேமவதி), 'ஒருநாள் ஒரு பொழுதாகிலும்' (கமாஸ்), 'தீன கருணாகரனே மறைவாய் புதைந்த' (தர்பார்), 'சராசரங்கள்' போன்ற பாடல்கள் சாகாவரம் பெற்றன. இந்த படம் வெளிவந்த தருணத்தில்தான் இரண்டாம் உலகப்போர் மூண்டது. அப்போது, செஞ்சிலுவை சங்க நிதிக்காக பாகவதர் பல கச்சேரிகளும் நாடகங்களும் நடத்தி பெரும் பொருள் திரட்டித் தந்தார். இதைக் கண்டு வெகுண்ட பழுத்த காங்கிரஸ்வாதிகள் பாகவதர் மேல் வெறுப்படைந்தார்கள். இன்னொரு பக்கம், பெரும் பொருள் திரண்டதைக் கண்டு மகிழ்ந்த பிரிட்டிஷ் அரசாங்கம் பாகவதருக்கு ஒரு கிராமம் எழுதிக் தருவதாகவும் சொன்னதுடன், அதற்கான ஏற்பாடுகளையும் செய்தது. ஆனால், அதை பாகவதர் நிராகரித்து விட்டார். அதன்பிறகுதான் பாகவதரின் தன்னலம் கருதா இந்த சேவையை காங்கிரஸார் உணர்ந்தனர். அதன்பிறகு நடைபெற்ற பாகவதரின் 'திருநீலகண்டர்' தங்க விழாவிற்கு சத்யமூர்த்தியே தலைமை தாங்கிப் பேசினார். பாகவதரின் உயர்ந்த சங்கீதத்தைப் புகழ்ந்தார்.

'திருநீலகண்ட'ருக்குப் பிறகு வந்த 'அசோக்குமாரி'ல் 'மானில வாழ்வு' (கல்யாணி), 'உனைக்கண்டு' (பைரவி), 'தியானமே எனது' (காபி), 'ஸத்துவ குணபோதன்' (ஜோன்புரி), 'பூமியில் மானிட மனமே நீ ஈசன்' (குந்தலவராளி) போன்ற பாடல்கள் சரித்திரம் படைத்தன. அடுத்து வந்த 'சிவகவி'யில், 'வதனமே சந்திர பிம்பமோ' (சிந்து பைரவி), 'வஸந்தருது' (ராகமாலிக), 'அம்பா மனம் கனிந்து' (பந்துவராளி), 'வள்ளலைப் பாடும்' (செஞ்சுருட்டி), 'கவலையை தீர்ப்பது' (நாடக்குறிஞ்சி), 'சொப்பனவாழ்வில்' (விஜயநாகரிபுவன காந்தாரி) மற்றும் 'எல்லாம் சிவன் செயல்' (தோடி) போன்ற பாடல்கள் பாகவதர் சாஸ்திரிய சங்கீதத்திலும் சமர்த்தர் என்பதை உறுதி செய்தது.

பாகவதர் வாழ்க்கை வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ் சினிமா வரலாற்றிலேயே மிக நீண்ட நாள்கள் ஓடியது 'ஹரிதாஸ்' திரைப்படம்தான். 1944ஆம் ஆண்டு வெளிவந்த 'ஹரிதாஸ்' படம் தொடர்ந்து மூன்று தீபாவளிகள் கண்டு சரித்திரம் படைத்தது. இதுவரை இந்தப் படம் ஏற்படுத்திய சாதனையை வேறு எந்தப் படமும் முறியடிக்கவில்லை. இந்த படம் மூலம் ஒரு படத்திற்கு லட்ச ரூபாய் சன்மானம் வாங்கிய முதல் நட்சத்திரம் என்ற பெருமையையும் பாகவதர் அடைந்தார். இந்தப்படத்தில் இவர் பாடிய, 'மன்மதலீலையை' (சாருகேசி) பாடல் பல வித்வான்களை லயிக்க வைத்தது. பாகவதர் இந்த ராகத்தை வெகு நேர்த்தியாக கையாண்டிருந்தார் என்று பலரும் அன்று பாகவதருக்கு புகழாரம் சூட்டினர். 'என்னுடல்தனில் அன்னையும் தந்தையும்தானே', 'கிருஷ்ண முகுந்தா', 'இது நிஜமா' போன்ற பாடல்கள் அனைத்துத் தரப்பு ரசிகர்களையும் கவர்ந்தது. 'என்னுடல் தனில்' என்ற பாட்டு எம்.ஜி.ஆருக்கு மிகவும் விருப்பப்பட்ட பாடலாக கடைசிவரையில் இருந்தது குறிப்பிடத்தக்கது. 'ஹரிதாஸ்'-க்குப் பிறகு பாகவதர் தன்னிகரில்லாத நடிகராக, பாடகராக புகழேணியின் உச்சிக்கே போய்விட்டார். ஒரே நேரத்தில் 'ராஜயோகி', 'ஸ்ரீமுருகன் ஸ்ரீவள்ளி வால்மிகி', 'உதயணன்', 'பக்த சேதா', 'ஜீவகன்', 'காளிதாஸ்', 'நம்பியாண்டார் நம்பி', 'விதி' போன்ற படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டு முன்பணம் வாங்கினார். இப்படி அந்த தருணத்தில் பலபடங்களில் நடிக்கும் வாய்ப்பு, அதன்பிறகும்கூட வேறு எவருக்கும் வந்ததில்லை. ஆனால், அதுதான் பாகவதரின் உச்ச காலகட்டம், அதன்பிறகு தொடர்ந்து பாகவதருக்கு இறங்கு முகம்தான்.

**- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -**

கண் திருஷ்டியோ, பாகவதரின் போதாத காலமோ வெண்ணை திரண்டு வரும் போது தாழி உடைந்தார் போல சூழ்ச்சிச் சூறாவளியில் சிக்கினார் பாகவதர். புகழ்பெற்ற லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் மாட்டிக்கொண்டார். திரையுலகில் பாகவதர் அடைந்திருந்த உன்னதமான புகழையும் பெருமையையும் கண்டு பொறாமையடைந்த சிலர், அவரைப் பற்றி அடிப்படையற்ற அவதூறுகளைக் கிளப்பியவாறு இருந்தனர். அவர்களுக்கு லட்சுமிகாந்தன் கொலை ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. இலட்சுமிகாந்தன் என்பவர் ஒரு மோசடிப் பேர்வழி. பல்வேறு குற்றங்களுக்காக ஏழு ஆண்டுகள் தண்டனை பெற்று ராஜமுந்திரி சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர். அப்பொழுது வழியில் போலீஸாரிடமிருந்து தப்பியோடி மீண்டும் சென்னையில் பிடிபட்டு, அந்தமான் சிறைக்கு அவர் அனுப்பப்பட்டார். 1942 மார்ச் மாதத்தில் ஜப்பானியப் படை அந்தமானைக் கைப்பற்றி அங்குள்ள சிறைவாசிகளை வெளியேற்றியதும் சென்னைக்குத் திரும்பிய லட்சுமிகாந்தன், 'சினிமா தூது' என்ற பத்திரிகையைத் தொடங்கினார். அப்பத்திரிகை மூலம் பொதுவாழ்விலும் தொழில்துறையிலும் கலையுலகிலும் இருந்த பிரமுகர்கள் பலர் மீது பலவிதமான வீண்பழிகளைச் சுமத்தி, அவர்களை மிரட்டி பணம் பறித்து வந்தார். அக்காலத்தில் திரையுலக நடிகர்கள், தயாரிப்பாளர்கள் பற்றி 'சினிமா தூது' இதழில் எழுதப்பட்ட அவதூறுகளைக் கண்டித்து பாகவதர், என்.எஸ்.கிருஷ்ணன், சீராமுலு நாயுடு உள்ளிட்ட பலர் ஆளுநர் ஆர்தர் ஹோப்பிடம் மனு கொடுத்தனர். போலீஸார் விசாரணை செய்து

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

A1 கொழும்பு
டிஜிற்றல் போட்டோ ஸ்ருடியோ & வீடியோ
2 பாஸ்போட் OR 2 லான்டட் காட் 5 நிமிடத்தில் $10.00
2 சிற்ரிசன் or அனைத்து ஐ. டி. 5 நிமிடத்தில் $10.00
3 - 5X7 ஸ்ருடியோ போட்டோ $30.00
From: அல்பத்துடன் முதல் தரமான போட்டோ PACKAGES
25 - 5X7 பிறந்த நாள் or முதன் நன்மை $125.00
50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $250.00
75 - 5x7 திருமணவிழா or அரங்கேற்றம் $375.00
25 - 5x7 போட்டோக்கள் வீட்டிற்கு வந்து எடுப்பதற்கு $125.00
2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD
UNIT 3 LOWER LEVEL, SCARBOROUGH 416-752-4444
E-Mail: WWW.TYP@GMAIL.COM 416-613-2818
Web: www.tamilsyellowpages.com

# இன்னொரு...

சென்ற தடவையில் : நீலகண்டர் பிரபல்யமான குறிப்புச் சொல்லும் கணிகர். அவரிடம் தனது தமக்கையாரின் ஒட்டிப்பிறந்த இரட்டையர்களின் பிறந்த நாள் விபரத்துடன் இராமலிங்கம் குறிப்பெழுத வருகிறான். முதலில் தன்னைப் பகிடி செய்வதற்கே இராமலிங்கம் அப்படிக் குறிப்புகளைக் கொண்டு வந்தான் என்று கோபப்பட்ட நீலகண்டர், பின்னர் ஒட்டிப் பிறந்த பிள்ளைகள் என்பதாலேயே தாயாரினதும் தகப்பனாரினதும் பெயர்களும், பிறந்தநாள், திகதி, நேரம் என்பன ஒன்றாகவும், பெயர்கள் மட்டும் வித்தியாசமாகவும் இருப்பதைத் தெரிந்து கொண்டு சமாதானமாகின்றார். தொடர்ந்து வாசியுங்கள்.

**தொடர்கதை - இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே**

**2** "என்னுடைய அக்கா திலகம். அவருடைய குழந்தைகள்தான் இந்தக் குறிப்புக்குரிய பிள்ளைகள். இரண்டு வருடங்களுக்கு முன் பிறந்தார்கள். பிறந்தார்கள் என்படைவிட வெட்டி எடுத்தார்கள் என்பதுதான் மிகப் பொருத்தம். ஒன்றாகவே எடுத்ததாலை எவன் மூத்தவன் எவன் இளையவன் என்று தெரியாது. நாங்களாகவே ஒரு அடையாளத்திற்காக வலது பக்கமாக இருப்பவனுக்கு இன்பன் என்றும் இடது பக்கமாக இருப்பவனுக்கு இனியன் என்றும் பெயர் வைச்சிருக்கிறோம்.. இப்ப பிரச்சனை என்னென்டால், டொக்டர்மார் இரண்டு குழந்தைகளையும் ஒரு ஒப்பரேசன் செய்து பிரிக்கப் போகினமாம், பிரிக்க வேணுமாம். குழந்தைகள் ஒப்பரேசன்ரை தாக்கத்தை தாங்கக் கூடியதாக இருக்கட்டும் எண்டுதான் இரண்டு வயது வரை பாத்துக் கொண்டு இருந்தவை. அடுத்த மாசம் ஒப்பரேசன். எல்லாத்துக்கும் ஆயத்தப்படுத்துகினம். பிள்ளையளை இப்ப ஆசுப்பத்திரியிலை வைச்சிருந்து அவதான-ிச்சுக் கொண்டு இருக்கினம். அத்தார், அதுதான் அக்காவின்ரை கணவர் எல்லாத்திற்கும் ஓம் எண்டு சொல்லிப்போட்டார். அக்காவும் அத்தான் என்ன சொன்னாலும் ஓம்தான். அக்காக்கு வேறை பிள்ளைகள் இல்லை. ஒப்பரேசன் செய்து எடுத்த ஒட்டிப் பிறந்த பிள்ளைகள் எண்டதாலை அக்காவிற்கு இனிக் குழந்தைகளே பிறக்காதாம்.. டொக்டர்மார் சொல்லிப் போட்டினம். அதுதான் எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. அதுதான்,/// உங்களைக் கொண்டு ஒருக்கா பிள்ளையளின்ரை பலனுகளை.. பாக்கலாமெண்டுதான்." இராமலிங்கம் கூறினான்.

நீலகண்டர் எதுவுமே கூறாமல் இராமலிங்கத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

"அக்காக்கும் அத்தானுக்கும் இது தெரியாது. தெரிஞ்சால்….." என்றவன் அந்த வசனத்தை முடிக்காமல் நீலகண்டரை நிமிர்ந்து பார்த்தான்.

இராமலிங்கத்தின் கண்கள் பனித்தருப்பதைக் கண்டார் நீலகண்டர்.

'இவ்வளவு பாசமுள்ளவன் மேலா வீணாகக் கோபப்பட்டேன்' என மனவருத்தப்பட்ட நீலகண்டர் ஆதரவாக இராமலிங்கத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டார். துண்டுகளை மீண்டும் வாங்கிக் கொண்டார்.

துண்டுகள் இரண்டினையும் பக்கம் பக்கமாக வைத்துக் கொண்டு விபரங்களைப் பார்த்தார். அருகில் இருந்த மஞ்சள் நிறப் புத்தகத்தினைத் திறந்து ஏதோ தேடினார். பஞ்சாங்கப் புத்தகங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்.

இராமலிங்கம் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான். "நல்லதாய் ஏதாவது சொல்லுங்கோ" என அவனது வாய் முணுமுணுத்தது மெதுவாகக் கேட்டது.

**◇ சி.வி. நாதன் ◇**

"நான் என்னத்தைச் சொல்லுறது, நட்சத்திரங்கள், கிரகங்கள் இருக்கின்ற இடங்களைப் பார்த்து, அதன்படி, அவை காட்டுகிறதைத்தானே என்னாலை சொல்ல முடியும்" என்ற நீலகண்டர் ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்தைச் செலவு செய்துவிட்டார்.

"தம்பி, பொதுவாகச் சொல்லுறதெண்டால் எல்லாம் நல்ல பலன்தான். ஆயுள்களுக்குப் பிழையில்லை. பிற்காலத்திலை நல்ல செல்வாக்கோடை இருக்க வேண்டிய பலன்தான் இருக்கிறது. கடல் கடந்து போய் நல்ல வசதி வாய்ப்புக்களுடன் சீவிக்கக் கூடிய பலனையும் காட்டுது குறிப்புகள். பெரிய வருத்தம் கிருத்தம் எண்டு எதுவும் வராது. நல்லாய்தான் பிற்காலத்திலை இருக்கவேண்டும். தாய்மாமன்மாருக்கும் நல்ல பலன்களைத்தான் குறிப்புகள் காட்டுது." என்ற நீலகண்டர் கொஞ்சம் யோசனையுடன் தனது நாடியைத் தடவினார்.

"தம்பி இவங்கள் இருவரும் ஒட்டிப் பிறந்தது வேணுமானால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். அதுக்கான காரணங்களை டொக்டர்மார் உங்களுக்குச் சொல்லி இருப்பார்கள்.. குறிப்புகளைப் பொறுத்தவரையிலும் கூட இது ஒரு வித்தியாசமானதுதான். இவங்கள் இருவரும் ஒரு விசேசமான நட்சத்திரநிலையில் பிறந்திருக்கினம். நான் இதுவரையிலை இப்படி ஒரு குறிப்பைப் பாத்ததில்லை." என்றவர், இராமலிங்கத்தைப் பார்த்து விட்டு, "குறிப்புகளை என்னட்டைத் தந்திட்டுப் போம். இல்லை அதுவும் வேண்டாம், எல்லாமுமே எனக்கு மனப் பாடமாகிவிட்டது. ஒரு கிழமையாலை வாரும். எல்லாத்தையும் வடிவாய் பாத்துச் சொல்லுறேன்." என்றார்.

'ஆயுளுக்குப் பிரச்சனை ஏதும் இல்லை' என்றதே இராமலிங்கத்திற்கு பெரும் ஆறுதலாக இருந்தது.

"அப்ப நான் அடுத்த சனிக்கிழமை, இதே நேரம் வாறேன். துண்டுகளை வைச்சிட்டுப் போறேன்." என்ற இராமலிங்கம், "மறந்திடாதையுங்கோ! காசு எவ்வளவெண்டாலும் பரவாயில்லை. வடிவாய்ப் பாத்துச் சொல்லுங்கோ" என்றவாறு எழுந்தான்.

நீலகண்டர் சிரித்துக் கொண்டே "தம்பி கவலைப்படாதையும். காசு எனக்குப் பெரிசில்லை. இது ஒரு வித்தியாசமான வேலை. ஒட்டிப்பிறந்த இருவருக்கு குறிப்புப் பார்ப்பது. இது எனக்குச் சவாலான விசயம். ஒரு சதமும் வாங்காமல் குறிப்புப் பாத்துத் தாறேன். நீர் ஒன்டுக்கும் கவலைப்படாதையும் தம்பி. சனிக்கிழமை வாரும்" என்று கூறியவர், வாசலைப் பார்க்க, வாசலில் அவரது அக்கா அகிலாண்டம்மாள் இன்னமும் அங்கே நிற்பதைக் கண்டார். தனது குறிப்புப் பார்க்கும் விடயங்களில் அவ்வளவாய் அக்கறை காட்டாத தனது தமக்கையார் இந்தக் குறிப்பில் மட்டும் அக்கறையுடன் இருப்பதைக் கண்டு….நீலகண்டரின் கண்கள் விரிவடைந்தன.

அடுத்த கிழமை முழுவதும் நீலகண்ட கணியர் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார். எல்லாப் பஞ்சாங்கப் புத்தகங்களில்

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

Served Over 15 Years In Toronto
Now in Richmond Hill



NTE AUTO INC.
New Trade Engineering
MS7 Quality Used Car Sales
346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575
416-399-6640
சகல விதமான வாகனங்கள் திருத்தும் நிலையம்
தற்போதைய விசேட கழிவு சேவைகள் சில....

எங்களுடன் தொடர்பு கொண்டு Towing செய்து வருபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

Front Brake Service From . . . . . . . . $109. 95
Rear Brake Service From . . . . . . . . $109.95
Transmission Service From . . . . . . . $ 99.95
Lube & Oil Service From . . . . . . . . $ 29.95
Tire Change & Balancing From . . . . $ 14.95
Engine Tune up from . . . . . . . . . . $159.95
Air Conditioning Service From . . . . $ 49.95
Computer Scanning from . . . . . . . . $ 39.95

We do BMW Service & Maintenance




Many more special, please contact for more information.

# தேசம் மணக்கட்டும் தேசியம் கசியட்டும்




**என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள்**

**நலம் பெற பிரார்த்திக்கிறேன்.**

நமது நெஞ்சின் அலைகளின் வீச்சு, காற்றுத்திசைக்குச் சுழலும் சக்கரம் போன்று எண்ணக் குமிழ்களின் தோற்றத்திற்கி சைவாகவே உருக்கொண்டு வீசுவதை நாம் தடுக்க முடியாது. அதன் போக்கில் விட்டு அதனோடு ஒத்தோடியே தடுத்து மறுபக்கம் திருப்ப வேண்டியுள்ளது. இரவில் நித்திரைக்குப் போகும் போதும், காலையில் விழித்து எழும் போதும் இதய எண்ணங்களின் குமிழ்கள் பொங்கி வண்ணங்கள் காட்டி உடைந்து கரைவது இயல்பாகவே நடைபெறுகிறது.

நாம், நமது சுற்றம், சூழல், இனம், ஊர், நாடு, வாழ்வு என்ற அடுக்கடுக்கான அலைகள் நமக்குள் எழுவதை எந்த மந்திரத்தாலும் கட்டுப்படுத்த முடியாது. மண் பற்றே ஒருமந்திரம் இதனாலேயே கடவுளை 'தேசனே! தேனார் அமுதே! சிவபுரனே! என்றார்கள். புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் நிலம் பெயரா நமது நெஞ்சம் வாழ்ந்த பூமியை, இடத்தை, இருப்பை எண்ணி ஏங்குவதும் பெருமூச்சு விடுவதும் இரண்டறக் கலந்த இதய வாழ்வின் வெளிப்பாடே.

நாட்டை நினைப்பாரோ?
எந்த நாள் இனிப்போய் அதைக்காண்பதென்றே
அன்னை வீட்டை நினைப்பாரோ
அவர் விம்மி, விம்மி, விம்மி, அழும் குரல் கேட்டிருப்பாய் காற்றே!
என்று எட்டையர் புரத்துக் கவிஞன் பாரதி, பஞ்சம் பிழைக்க நாடுவிட்டு நாடு கடந்து கரும்புத் தோட்டத்திலே துன்பக் கேணியில் வீழ்ந்து அமிழ்ந்த மக்கள் குறித்துப் பாடினான்.

நாம் துன்பக் கேணியுள் விழவில்லை. காட்டிலோ, தோட்டங்களிலோ கிடந்து வேதனைப்படவும் இல்லை. கடவுள் நாடான கனடாவில் இயல்பான இடுக்கண்களோடும் அழுத்தங்களோடும் இந்த வாழ்வில் நாம் துடித்த துடிப்பும் பட்ட வேதனைகளும் ஏக்கமும், எதிர்பார்ப்பும் ஏமாற்றங்களும் கொஞ்சமில்லைத்தான். இவை அனைத்தும் இந்த நாட்டால் - கனடாவால் நமக்கு வந்தவையல்ல.

நமது நாட்டால் தாயகம் என்ற நமது பூமி கண்ட சுமந்த கடூரமான கொடூரத் துன்பங்களால் நாமும் துடித்து நெஞ்சைப் பிசைந்து கசக்கி கண்ணீர் விட்டோம், விடுகின்றோம். பிறந்த பொன்னாட்டை நினையாதவர், பெற்ற தாய்க்கு துரோகம் செய்தவராவார். பிறந்து வளர்ந்து வாழ்ந்த நாட்டு வாழ்க்கையும், பொழுதுகளும் ஏன்? அந்தக் கணங்களும் நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்து அவ்வப்போது தலைநீட்டி இரைமீட்க வைக்கிறது. இரைமீட்டல் மிருகங்களுக்குத் தான் என்று நினைக்கிறீரா? உண்மைதான்? உண்மைதான். மனிதர்களின் இரைமீட்டல் என்பது நெஞ்சின் நினைவு மீட்டலே. பலபொருள் குறித்த ஒரு சொல்லும், ஒரு பொருள் குறித்த பல சொல்லும் நமது தமிழ் மொழியில் உண்டல்லவா?

நண்பா! இந்த இரை மீட்டலில் நான் பிறந்த மண்ணைப் பற்றி எழுந்த நினைவலைகளை வசன கவிதை வடிவமாக்கினேன். இதைப்படிக்கும்போது உங்கள் பிறந்த பூமியின் புனித நினைவுகளும், நிகழ்வுகளும் மனத்திரையில் படமாக வந்து தாயகத்தாகத்தை மீட்டு அசைபோட வைக்கும். நெஞ்சின் அலைகளும் சாந்தி கொடுக்கும் என்று எண்ணுகிறேன்.

**மரகத மண்ணே! மரகத மண்ணே! எண்ணத்தில்**
**மணக்கிறாய் மரகத மண்ணே!**
**என்பது தலைப்பு. இதோ கவிதை.**

**'ஆயும் கொவ்வையாய் குறிஞ்சாயாய்**
**தூதுவளையாய் மாங்கனியாய் பலாச்சுளையாய்**
**வாழையிலையாய் பூவரசம் பழுத்தலாய்**
**ஆவரையாய் நொச்சியாய் ஆலம்பழமாய்**
**தாய்வயிற்றிலிருந்து உன்தரை வயிற்றில் விழுந்தவன்**
**சொல்கின்றேன் கொஞ்சம் கேளம்மா!**

பாய்விரித்து என்னைப் பக்குவம் பார்த்தவர்கள்
சேயோன் என்றுரைத்து செல்லம் கொஞ்சியவர்கள்
வேப்பமரமேறி எனக்காய் கொழுந்தெடுத்த விதானையப்பா
மஞ்சவண்ணாப்பட்டை மரம் பறித்த மரகதமக்கா,
கொஞ்சி முத்தம் கொடுத்தபடி சீனி கிள்ளித் தா என்று
குஞ்சி இழுக்க வைத்த குமரேசுப்பாட்டி
கமக்காறி செல்லமா சிவராமன்போல் இவன் சிவப்பில்லை,
அவன் அப்பன் மகன்!
இவன் ஆத்தை மகன் என்றுரைத்த
நயினை நாகமுத்தியக்கா சிவபூசைக்காரன் மகன்
இவன் சிவம் பரப்பும் சீர்பெறுவான்! இருந்து பாருங்கள்
இது நடக்கும் என்றா பொன்னியக்கா,
கிள்ளிக் கிளுகிளுப்பூட்டிய கிழக்கு வீட்டுக் கிளாக்கராச்சி
அள்ளி எடுத்து அரையில் சுமந்தபடி
சொரி குரும்பைச் சோறு தந்த செவிலித் தாயன்ன சரவணையம்மா!
பரிகாரம் படிக்க இவனுக்குப் பலன் இல்லை பாடங்கள் படிக்கட்டும்
சரியாக வரும் ஐந்தொகையில்!
சஞ்சிதம் பிராப்தம் ஆகட்டும் என்றுரைத்தே
என்னை அண்ணனோடு அனுப்பி வைத்த அப்புச்சி சொல்லு
தமிழுக்கு சுருதிக்கு வெல்லும் கலைகளுக்கு கைகாட்டி அல்லும் பகலும் அனவரதமும் அடிப்பொடியாய் துடிப்புடனே கடனாற்று என்றுரைத்த சிவராமலிங்கப் பெரியோன்! வேலிக்காளானில் கூழ் காச்சி மடத்துவெளி நெல்லுச் சோறாக்கி கிழங்கு பருப்போடும் சட்டிக்கரணையோடும் சாப்பிடத்தந்த அன்னம்மாச்சின்னம்மா.

**தாச்சி விளையாட்டில் தட்டி அடித்து**
**அடிவாங்கி ஓடிய தங்கவேலன்**
**வாய்ச் சவடால் வீசிய பெயர் தெரியாவாத்தியார்**
**வீட்டுக்கு வீடு விளப்பம் வரைந்து**
**வாங்கிய சோற்றுக்கு வாழ்த்துக் கூறி**
**நீதவான்களை நினைவுபடுத்திய நீதவான்**
**இளையப்பர்! ஏரம்பர்! அரிச்சந்திரா!**
**வில்வர்! துரையப்பர்! சோமர்! தம்பிமுத்தர்!**
**சிங்கர்! கீச்சிட்டார்! கொதியர்! குணத்தார்**
**வித்துவான்! பண்டிதர்! வித்தகர்! என்றிட்ட**
**விடயம் விளங்கி விளம்பியவர் எல்லோரும்**
**கொண்டோடி கதை முடித்து நாரதராய் நின்றோரும்**
**வீண்வம்பு பேசாது விவகாரம் வளர்த்திட்ட**
**சாது சற்புத்திரரும் சான்றோ அவையத்தினரும்**
**சண்டியன் கட்டோடு வெண்டிக்காய் பிடுங்கி**
**சாம்பாறு வைத்துத்தோரும்**
**கண்ட கதைகளைக் கடையின்றி வழி வியாபாரம் செய்தோரும்**
**கொண்டும் கொடுத்தும் கண்ணியம் காத்தோரும்**
**தீவின் நன்மைக்காய் தியானம் பார்த்தோரும்**
**தித்திக்கத் தித்திக்க தேனாறு போன்று தீந்தமிழ் வழங்கியோரும்.**

**பனை ஓலை வெட்டி இரவிரவாய் கிழித்து**
**பசுவுக்கும் எருதுக்கும் போட்டு மகிழ்ந்ததும்**
**ஓலைக்கிழிக்கையிலே ஓராயிரம் கதை கேட்டு**
**நொடி சொல்லிப் பழமொழிகள் பல கூறி**
**இரவைப் பகலாக்கி இயங்கி வாழ்ந்ததுவும்**
**பனையின் பயன்கள் எத்தனை என்றே**
**பக்கத்து வீட்டு தையலக்கா கேள்வியை நீட்ட**
**பத்தென்றும் ஐந்தென்றும் பத்தொன்பதென்றும்**
**ஆளுக்கு ஆளாய் வாய்க்கு வந்த பதில் சொன்னதுவும்**
**வாணரப்பா எழுபத்தியிரண்டென்று ஏவுகணை போல்**
**எல்லோரையும் திகைக்க வைக்க**
**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**எழுபத்தியிரண்டிலே ஏற்றப்பட்டதுவும்**
**ஓலையில் ஒன்பது ஈக்கில் பதினாறு**
**வார்கடையில் பத்து! மட்டையில் நான்கு**
**நுங்கில் மூன்று! பனம் பழத்தில் பத்து!**
**கொட்டையில் ஆறு! வெட்டிய பனையில் ஐந்து,**
**கருக்கில் நான்கு, கண்ட துண்டுகளில் ஐந்து என்று**
**அப்பா அவிழ்த்துவிட ஆவென்ற வாயெல்லாம்**
**அவர் கோவணத்தைக் காட்டிச் சிரித்ததும்**
**ஓலை திண்ட மாடு காலையிலே குசு விட்டால்**
**பாலைக் குடிப்பதுவும் பசுக் குசுவை குடிப்பதுவும்**
**பரம சந்தோஷம்! பரம சந்தோஷம் என்றப்பா பாடியதும்**
**பார்வதிமாமி மகள் சே! சே! சீ! என்றபடி**
**பாவாடை தூக்கி ஓடியதும்**
**அடிமனத்து வடியல்களாய் அவ்வப்போது துடிக்கிறது.**

**கிளாக்கர் மகனோடு கிட்டியடிக்கப் போனதுவும்**
**பிள்ளையம்மா வீட்டு பிஞ்சு மாங்காய்க்காய்**
**கெஞ்சி நின்றதுவும்! களவெடுத்தோடியதும்**
**கோயில் குளத்தில் நீந்தி விளையாடியதுவும்**
**திருவெம்பாப் பிட்டுக்காய் தீவட்டி பிடித்ததுவும்**
**பஞ்சாமிர்தத்திற்காய் பஞ்சபுராணம் பாடியதும்**
**பூங்காவனத் திருவிழாவில் மாமிமகள் பாப்பாளென்று**
**புதுவேட்டி வாங்கி பழைய சட்டை தோய்த்ததுவும்**
**இரவல் வாச்சை இடக்கையில் கட்டி**
**அவளுக்குக்காட்டி கைதூக்கிச் சிரித்ததுவும்**
**அக்காள் பார்த்து விட அப்பாலே போனதுவும்**

**சிலப்பதிகாரமாய் திருமுறைகளாய்**
**தமிழ் மறையாய் முத்தமிழாய்**
**சிவனார் திருவிழாவாய்! கண்ணகி தேர்விழாவாய்**
**காளியம்மன் ஊர்வலமாய் மாரியம்மன் மகப்பொலிவாய்**
**பேச்சியப்பன் பெருவிழாவாய்! நாச்சி மார் குளிர்த்தியாய்**
**கல்யாண ஊர்வலமாய்! கன்னியர்கள் தேர்வலமாய்!**
**குன்றக்குடியார் உரைவளமும்**
**சச்சிதானந்தர் அருள் வளமும்**
**ம.பொ.சி மணி வீச்சும் கி.வா. ஐ. கிளிவீச்சும்**
**அ.ச.ஞா.கீரன் முத்துச்சிவன் மூதுரையும்**
**கண்ணார்குளத்து கற்றாளைப் பூவும்**
**கரந்தலியின் நெற்றாளைப் புதிரும்**
**கள்ளியாற்று மணற்பரப்பும் கேரதீவு ஈஞ்சும் வேரும்**
**இணுபிட்டியா குளத்து இங்கிதமும் இருபிட்டியின் இறும்பூதும் சோழகனோடைச் சொகுசும் தாழங்கடற்கரை காயும் கனியும் மடத்துவெளி வயற்காட்டின் வரம்புகளும் வாய்க்காலும் உப்புக்கழியின் உல்லாசமும், உவர்மண்ணின் மகிமைகளும் ஊரதீவின் உரமரபும், பாணாவிடைச் சிவமணமும் கள்ளிக் காட்டின் நெல்லிமரங்களும், புல்லிதழ்களும் குறிகாட்டு வானின் மாலைப்பொழுதும், நடுவுத்துருத்தியின் நாகரிகமும் நெல்லா, வரகா, குரக்கனா, சாமியா, எள்ளா, பயறா வள்ளியா கிழங்கா, மிளகாய், புகையிலை, வெங்காயம், உழுந்து என்ன வளம் இல்லை உன்மணிவயிற்றில் நயினைக் கடலையாய் நெஞ்சின் நினைவலைகள் வரிசை வரிசையாய் என்னுள் வந்து வந்து நோகுதம்மா!**

**உன்மடியில் மண் எடுத்து**
**மந்திரமாவது நீறு என்றபடி**
**உத்தூளனமாய் நெற்றியில் இடுவோனே**
**முற்றத்தில் புரழ்வதுவும் மழைநீரில் குளிப்பதுவும்**
**எண்ணத்திரிகளிலே எப்போதும் எரியுதம்மா**
**பெற்றதாயே! பிறந்த பொன்னாடே!**
**புலம் பெயர்ந்து வந்தேன் நான்**
**புங்குடுதீவின் வேரறுத்து வந்தேனா?**
**தொப்புள் கொடிபோல் ஆணிவேரளைய**
**அர்ப்பணிப்பு அவா ஆப்பிழுத்த ஆசைபோல்**
**உணர்வூற்று உதிரப் பெருக்கு உந்துகையில்**
**ஓலக்குரலில் கூவென்று குரலெடுத்து**
**குமைகையிலே குழந்தைப் பருவத்தில்**
**பாலைக் குடித்து தாய்மடியில்**
**படுத்திருந்த போதினிலே**
**நாசிக்குள் மணந்த சாணச்சீலை நாற்றம் இன்றைய எழுபதிலும்**
**காறித்துப்புகையில் நாசிக்குள் மணக்குதம்மா**
**இதயத்தின் இருப்பே எண்ணத்தில் எப்போதும்**
**மண்வாசனையாய் மனஓசைகளாய் வீசுகின்றாய்**
**தாயை மறவாத தனையரெல்லாம் என்னைப்போல்**
**உன்னை மறவாது உவர்ப்பர்,**
**உதவுவார், உண்மையிது.**

என்ன நண்பா! உனக்கும் உணர்வுகள், ஊர் நினைவுகள் வருகிறதா? வரவேண்டும். தாகம் தரவேண்டும், தரவேண்டும்.

வேறு என்ன?
பிற பின்பு
அன்பு
ஈழத்துச் சிவானந்தன்



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# இன்னொரு

31ஆம் பக்கத்தொடர்ச்சி

இருந்தும் தரவுகள், குறிப்புகள் எடுத்தார். தனது முன்னவர்களின் புத்தகங்களை எல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். பல ஓலைச் சுவடிகளிலும் ஏதேதோ தேடினார். சில நாட்களில் நடு இரவில் கூட நித்திரையில் நின்றும் எழுந்து ஓலைச்சுவடிகளைப் புரட்டி சில தரவுகளை திரட்டிக் கொண்டார். அம்பாளின் பூசை நேரம் தவிர்ந்த மற்றைய எல்லா நேரமும் ஏறக்குறைய இதே விடயமாகவே இயங்கிக் கொண்டு இருந்தார். வித்தியாசமான, இதுவரை எவருமே சந்தித்திராத ஒட்டிப் பிறந்தவர்களின் எதிர்காலத்தைக் கூறும் விடயமல்லவா! அக்காள் அகிலாண்டம்மாளும் தம்பியாருக்கு தேவையான அளவிற்கு ஒத்தாசையாக இருந்தார்.

இதேநேரம் அங்கே இராமலிங்கம் எப்ப சனிக்கிழமை வரும் என ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தான்.

வெகுசீக்கிரமாகவே அந்தச் சனிக்கிழமையானது நீலகண்டருக்கு வந்து சேர, இராமலிங்கத்திற்கோ பல யுகங்கள் கடந்தே அந்தப் பரபரப்பான சனிக்கிழமை வந்து சேர்ந்தது. அகிலாண்டம்மாளும் அன்று வழமைக்கப் புறம்பாக, தனது வழமையான நேரத்திற்கு முன்பதாகவே தம்பியின் வீட்டுக்கு வந்துவிட்டார். ஏனோ தெரியவில்லை அவருக்கும் பரபரப்பாகத்தான் இருந்தது.

சனிக்கிழமை காலை 10 மணி.

சரி நேரத்திற்கு இராமலிங்கம், நீலகண்ட கணிகரின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். ஒரு கிழமையாய் சேர்த்து வைத்திருந்த பரபரப்பு அவன் முகத்தில் அப்பிக் கிடந்தது. குளித்து, முகச்சவரம் செய்து, தூய ஆடைகள் அணிந்துதான் வந்திருந்தான். ஆனாலும் ஏதோ ஒன்றைத் தொலைத்தவன் போலக் காணப்பட்டான். அவ்வளவுக்கு அந்தச் சனிக்கிழமையை அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

நீலகண்ட கணிகர் கண்களில் சிவப்புக் கலந்திருந்தார். கடந்த ஒரு வாரமாகச் சரியான நித்திரையில்லை என்பதைக் கண்கள் காட்டிக் கொடுத்தன. கொஞ்சமாய் தளர்ந்தது போல் காணப்பட்டார். ஆனாலும் முகத்தில் மட்டும் ஒருவித தென்பு காணப்பட்டது. ஏதோ ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டேன், அல்லது சாதித்துவிட்டேன் என்றது போன்ற பூரிப்புக் காணப்பட்டது.

"தம்பி எப்படி இருக்கின்றீர்? களைச்சுப் போனமாதிரி தெரியுது." என்றார் நீலகண்டர்.

"அப்பிடி ஒன்றுமில்லை! கொஞ்சம் அவசரம் போன்ற எதிர்பார்ப்பு. அதுதான் கொஞ்சம் தெரியாதே…" இழுத்தான் இராமலிங்கம்.

மேலும் சில வழக்கமான சுக நல விசாரிப்புகள் முடிய நீலகண்டர் கேட்டார் "ஒப்பரேசன் அலுவல்கள் எப்படிப் போகின்றது"

"ஓமோம். அதுகளெல்லாம் டொக்டர்மார் ஒழுங்காகச் செய்யினம். பிள்ளையள் இரண்டு பேரும் தயார்நிலையில் இருக்கினம் எண்டுதான் சொல்லினம். இன்னமும் மூண்டு கிழமையிலை இன்பனையும் இனியனையும் தனித்தனியாகக் காணலாம் எண்டு டொக்டர்மார் சொல்லினம். ஒருவித ஆபத்தும் வராது எண்டுதான் சொல்லினம் எல்லாம் நல்லபடியாக நடந்தால் நல்லதுதானே!" என்றவன்,

"குறிப்புகள் என்ன சொல்லுது?" எனக் கேட்டான். அவனது குரலில் அவசரமும் ஆவலும் தொனித்தன.

- இன்னமும் வரும்

# பாரிசவாதமும்...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ளோர் நல்ல கறிமுருங்கை இலையை பாகம் செய்து உப்பு குறைத்து சுண்டி உணவுடன் சேர்த்துப் பாவித்து வருவது மிக நன்று. கொழுப்புச் சேர்ந்த உணவுவகை, சர்க்கரை, மாப்பொருள், எண்ணெய்வகை தவிர்த்தல் வேண்டும்.

எடை (நிறை) கூடாதபடி இருக்க அரிசி உணவைத் தவிர்த்து சப்பாத்திக்கு சுக்கு (வேர்க்கொம்பு) சேர்த்து தயாரித்து பாவிப்பது மிக நன்று. குளிர்ந்த நீராட்டம், குளிர்நிலையில் உலாவுதல் தவிர்த்தல் வேண்டும்.

30 வயதிற்கு மேற்பட்டோர் சோர்வடையாமல் சுறுசுறுப்பாக இருக்க பழகிக்கொள்ள வேண்டும். உடற்பயிற்சி, நடைப்பயிற்சி, யோகாசனம் போன்றவற்றைக் கையாளவேண்டும். தங்கள் பெற்றோருக்கும் நீரழிவு, இருதயநோய் இருப்பின் தாங்கள் தவறாது மாதம், மாதம் தங்கள் மருத்துவர்களிடம் சென்று பரீட்சித்து சிகிச்சை பெறுவது நன்று.

மேலும் இந்நோயால் பீடிக்கப்பட்டவர்கள் தற்பாதுகாப்பிற்கு உரிய இடத்தில் (கை, கால்) போன்ற இடங்களில் மூலிகைத் தைலவர்க்கம் போன்றவற்றைப் பூசி, மசாஜ் செய்வதுடன் கறிமுருங்கை இலையை எடுத்து ஆமணக்கு எண்ணெய்யில் இட்டு சூடாக்கி ஒரு சேலைத்துண்டில் இலையை இட்டு லேசான சூட்டுடன் உரிய இடங்களில் ஒத்தணம் இடலாம். இதனால் ஓரளவு வேதனை குறையும். நம்நாட்டில் இதற்கு உகந்த மூலிகை இலைகள் போதியளவு உண்டு. உ+ம் வாதமடக்கி, முடக்கொத்தான், நொச்சி, முத்தாமணக்கு, ஆடாதோடை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதனால் நற்பயன் பெற்றோர் பலர்.

எனவே இவ்வியாதியை சித்த ஆயுர்வேத வைத்தியர்களும் முறையாக கையாண்டு பலரைக் குணப்படுத்தியவர்களும் இருக்கின்றார்கள். தற்பொழுதும் இந்தியாவில் சித்தவைத்தியர்கள் இவ்வியாதிக்கு சிகிச்சை செய்து குணம் அடைந்து வருபவர்களையும் அறிவோம். தற்கால விஞ்ஞானம் விருத்தியடைந்த காலத்திலும் அதன் செல்வாக்கு மங்கவில்லை. எனவே அந்த சிகிச்சை பத்திய பாவனை யாவும் அந்த இடத்திற்கு ஒத்துப்போகும் தன்மை உடையது. ஆனால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் கனடா நாட்டின் கால நிலைக்கு பத்திய பாவனை கடைப்பிடிப்பது கஸ்டம் என்பதும் எல்லோரும் நன்கு அறிவோம்.

விஞ்ஞானம் விருத்தியடைந்த இக்காலத்தில் இங்கு நாம் வாழ்ந்து வருவதினால் பல உறுப்புக்களின் ஆய்வுகள் செய்து நோய்களைக் குணப்படுத்தக்கூடிய விசேட ஆங்கில வைத்தியர்கள் இருப்பதை நாம் நன்கு அறிவோம். எனவே நாம் எதற்கும் தயங்காமல் உரிய வேளையில் உரிய வைத்தியர்களைக் கண்டு விரைவில் வைத்தியம் செய்து குணமடைய முடியும். எதற்கும் நமது முயற்சியும் ஊக்கமும் உறுதுணை அளிக்கும்.



# "தமிழ் சினிமா குப்பையா போயிடுச்சு!"

## சந்திப்பு: ஓவியர் வீரசந்தனம்

நேர்காணல் - பாலு சத்யா

தமிழ் சினிமா வரலாற்றில் ஒரு மைல் கல் எனப் போற்றப்பட்ட திரைப்படம், பாலுமகேந்திராவின் 'சந்தியாராகம்'. இருபது ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த படம். என்றாலும், இன்றும் நல்ல தமிழ் சினிமா பற்றிப் பேசுபவர்கள் அனைவரும் மறக்காமல் உச்சரிக்கும் படம். அதில் கதநாயகனாக நடித்திருந்தவர், ஓவியர் வீரசந்தானம். அதன்பிறகு, நடிப்பதற்கு எத்தனையோ அழைப்புகள் வந்தும் வியாபார சினிமா மீதான விரக்தியால் மறுத்து வந்தார். அந்த வீரசந்தானம் மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு இப்போது மீண்டும் நடிக்கத் தொடங்கியிருக்கிறார். 'அவள் பெயர் தமிழரசி'யில் இவருடைய நடிப்பைப் பாராட்டாதவர்களே இருக்க முடியாது. இந்திய அளவில் முக்கியமானவர்களாகக் கருதப்படும் தமிழ் ஓவியர்களில் வீரசந்தனத்துக்கு தனி இடம் உண்டு. தன் தூரிகைக் கோடுகளால் ஒரு புது உலகைக் கண் முன் கொண்டு வந்து நிறுத்தியவர், வீர சந்தானம். தமிழ் மொழி மீதும், தமிழர் மீதும் தீராதப் பற்றுக் கொண்டவர். அவரைச் சந்தித்தோம்.

'அவள் பெயர் தமிழரசி'ல நடிக்கற வாய்ப்பு உங்களுக்கு எப்படிக் கிடைச்சது?

வீரசந்தனம்: "ஒரு பத்திரிகை நேர்காணலுக்காக ராஜேந்திரன்னு ஒரு நண்பர் வந்தார். என்னுடைய ஓவியத்தை எல்லாம் பாத்தாரு. அதுல தோல்பாவை கூத்து சம்பந்தமான பாதிப்பு இருக்கறதைப் பாத்துட்டு, இதே போல கதையைத் தானே மீரா கதிரவன் எடுக்கறாரு, அதுக்குப் பொருத்தமா இருப்பாருன்னு நெனைச்சி அவர்கிட்ட போய் சொல்லியிருக்காரு. அவரு கூப்பிட்டு விட்டாரு. போனேன். 'நானும் உங்களை மூணு மாசமா தேடிக்கிட்டு இருக்கேன்'ன்னாரு. 'அவள் பெயர் தமிழரசி' கதையை எனக்குப் படிக்கக் குடுத்தாங்க. படிச்சுப் பாத்தப்போ உணர்ச்சிவசப்பட்டேன். ஏன்னா, அதுல என் கதை, உன் கதை, எல்லாரோட கதையும் இருக்கு. அது ஒரு கலைஞனோட கதை. அழிஞ்சு போன ஒரு கலைக்கு புத்துயிர் குடுக்கக்கூடிய படம் அது. இன்னிக்கி, தோல்பாவை கூத்துக் கலைஞர்களோட வாழ்க்கை எல்லாம் எப்பிடி சிதைஞ்சு போயிருக்கு, அவங்க வாழ்க்கையையே இழந்து எப்படி தெருவுல நிக்கிதுங்கறதுதான் கதை. நான், தென்னிந்தியா முழுக்க இந்தத் தோல்பாவை கூத்தை, ஊர் ஊரா சுத்தி ஆய்வு பண்ணினவன். எந்தெந்தக் குடும்பம் இந்தக் கலையை செஞ்சுக்கிட்டு இருக்கு, யார் யார் பண்றா, எப்பிடி பண்றாங்க, எந்த மொழிக்காரங்க பண்றாங்க, எப்பிடி நாடுவிட்டு நாடு வந்து மொழி மாறிக் கிடக்கறாங்க, எப்பிடி பண்பாடு சிதைஞ்சு போயி இருக்காங்கங்கறதையெல்லாம், அவங்களோட வாழ்க்கை போராட்டத்தையெல்லாம் நான் முழுமையா பாத்தவன். அந்த அனுபவம் எனக்கு இருக்கு. தோல்பாவை படங்களை முந்நூறுக்கும் மேல சேகரிச்சு வச்சிருக்கேன். அந்த பாதிப்பு இந்தப் படத்துல அப்பிடியே இருந்துச்சு. எனவே, ரொம்ப பிரியமா நடிக்க ஒத்துக்கிட்டேன்.

தமிழ் சினிமா பத்தி எனக்கு ஒரு கருத்து எப்பவுமே இருக்கு. இருபது வருஷத்துக்கு முன்னாடி பாலுமகேந்திரா கூப்பிட்டு விட்டாரு. 'நீங்கதான் சந்தியாராகத்துல நடிக்கணும்'னு சொன்னாரு. அந்தக் கதையக் கேட்டப்போகூட, 'வேற யாரையாவது நடிக்க வைக்கலாமே'னுதான் சொன்னேன். ஏன்னா, அந்தக் கதை அவ்வளவு ஆழமானது. அதே மாதிரி மீரா கதிரவனும் நல்ல கதையா வச்சிருந்தாரு. அதுல நான் நடிச்சு நம்மளால ஏதாவது தப்பா ஆயிடுமோன்னு நெனச்சேன். ஆனா, இந்தப் படத்துல என்னோட நடிப்பை எல்லாரும் பாராட்டினாங்க. எனக்கும் நல்லாத்தான் பண்ணிருக்கோம்னு தோணிச்சு. டப்பிங்லகூட நான் நேரா பாத்துப் பேசல. சுவத்தைப் பாத்து நான் பாட்டுக்குப் பேசிக்கிட்டு இருந்தேன். ஏன்னா, அந்தக் கதை என்னை அவ்வளவு பாதிச்சிருந்துச்சு. அந்தத் தோல் பாவைக் கூத்துக் கலைஞனாவே வாழ்ந்துட்டோம்ங்கற மனநிறைவு எனக்கு ஏற்பட்டுச்சு."



படப்பிடிப்பு தளங்களில் உங்கள் அனுபவம் எப்படி இருந்தது?

வீரசந்தனம்: "கதையைத்தான் நான் ஏற்கெனவே படிச்சுப்புட்டேனே! அதனால, தளத்தில் எனக்கு எந்த அச்சமும் வரலை. என்னா... சினிமாகாரங்க சினிமாகாரங்களோட உக்காந்திருந்தாங்க. நான் ஒரு ஓவியன்ங்கறதுனால, நான் அங்க உள்ள மக்களோட உக்காந்து பேசிக்கிட்டு இருந்தேன். இயக்குநர் மீரா கதிரவன் என்கிட்ட ரொம்ப இயல்பா இருந்தாரு. நான் எங்கயாவது மக்களோட உக்காந்து பேசிக்கிட்டு இருப்பேன். இயக்குநர், 'சந்தானம் அய்யாவைக் கூப்பிடுங்க!'ம்பாரு. வருவேன். வந்து, அவங்க சொன்னதை செஞ்சுட்டுப் போயிடுவேன்."

கிட்டத்தட்ட இருபது வருஷம் கழிச்சு நடிக்கிறீங்க. பாலுமகேந்திரா என்ன சொன்னார்?

வீரசந்தனம்: பாராட்டினார். 'சந்தனம் நல்லா நடிச்சிருக்கீங்க. நான் பெருமைப்படறேன். கீப் இட் அப்!'னு சொன்னாரு. அதோட, 'இப்பிடி ஒரு புது முகத்தையும் புது கிராமத்தையும் சத்தியமா இப்பத்தான் நான் முகத்துல முதல்ல பாக்கறேன்'னு சொன்னாரு. பாலுமகேந்திராவுக்கு அடுத்து தங்கர்பச்சான் பேசினார். கவிதாபாரதி, ஜெயபாஸ்கரன், வ.கௌதமன்னு யாரெல்லாம் பாத்தாங்களோ எல்லாரும் பாராட்டிட்டாங்க. ஒரு நொடிக்கு இருபத்தி நாலு ஃபிரேம் இருக்கணுமாம். 'நீங்க நடிச்சதுல ஒரு ஃபிரேமைக்கூட எடுக்க முடியாதுண்ணே!' அப்பிடின்னு தங்கர்பச்சான் சொன்னாரு."

கேள்வி: அடுத்த பட வாய்ப்புகள் ஏதாவது வந்துச்சா?

வீரசந்தனம்: "நிறையா கூப்பிட்டுக்கிட்டே இருக்காங்க. பெரிய பெரிய ஆளுங்கள்லாம் கூப்புடுறாங்க. வேலை இருக்குன்னு சொல்லி தவிர்த்துடுறேன். ஏன்னா, பத்தோட பதினொன்னா நம்மளை நிக்க வச்சு அனுப்பிட்டாங்கன்னா, அது நமக்கு சரிப்பட்டு வராது. உங்களுக்குத் தெரியும், நான் ஒரு ஓவியன், கலைஞன். இப்பிடி போய்க்கிட்டு இருக்கறப்போ, இதை சிதைக்கிற மாதிரி நாம சினிமாவுல போயி ஒரு ஆளா நின்னுடக்கூடாதுன்னு நினைக்கிறேன். ஆனால், பொருத்தமான நல்ல பாத்திரங்களா வந்தா செய்வேன். அதுல தப்பு இல்லையே! இந்த சமூகத்துக்கு நன்மை தரக்கூடிய எந்தப் பாத்திரமா இருந்தாலும் நான் நடிப்பேன். என்னைக் கொண்டு போயி சாராயம் காய்ச்சுற பாத்திரத்துல நடிக்க வைக்கக்கூடாது அவ்வளவுதான். 'சந்தனக்காடு' எடுத்த வ.கௌதமன், எழுத்தாளர் நீல.பத்மநாதனின் 'தலைமுறைகள்' நாவலை 'மகிழ்ச்சி'ன்னு ஒரு படமா எடுக்கிறார். அதுல நடிக்கக் கூப்பிட்டார். அதுல ஒரு தொழுநோயாளியா நடிச்சிருக்கேன். அது அந்தப் படத்துல முக்கியமான பாத்திரம். ஒரு பெரிய சொத்துக்கு அதிபதி நான். என் புள்ளை என்னை ஊரைவிட்டு ஒதுக்கி வைக்கிறான். இதான் கதை. இன்னொரு படம், நண்பர்களுக்காக ஒத்துக்கிட்டு இருக்கேன். அதுல ஒரு பாதிரியாரா நடிக்கப் போறேன். 'பட்டறை'ன்னு ஒரு படம். ஆல்வின்னு ஒரு புது இயக்குநர் எடுக்கறார்."

கேள்வி: நடிக்கறதுக்கு ஊதியம் குடுக்கறாங்களா?

வீரசந்தனம்: 'அவள் பெயர் தமிழரசி'ல குடுத்தாங்க. மத்தவங்கள்லாம் நம்ம பயலுகங்கறதுனால குறைச்சுக் குறைச்சு குடுத்தாங்க."

கேள்வி: மறக்க முடியாத, அவள் பெயர் தமிழரசி அனுபவம் ஏதாவது?

வீரசந்தனம்: இந்தப் படத்துல என்னோட முருகன் ராவ்னு ஒருத்தர் நடிச்சார். அவர்தான் இந்த தோல்பாவைக்கூத்துக்கு இன்னிக்கி முன்னோடி. அவரோட வாழ்க்கையை அங்க நான் மொத்தமா பாத்தேன். அவரைப் பாத்தப்போ, 'என்னடா இந்தக் கலைஞனுக்கு இப்பிடியெல்லாம் நடக்குது! ஒரு கௌரவம் இல்லாத நாட்டுல வாழறாரே!'ன்னு தோணிச்சு. பசி, பட்டினியோட வாழக்கூடிய ஒரு மனிதன். ஆனா, இந்தத் தோல்பாவைக் கலையை உயிருக்கு உயிரா நேசிக்கிற கலைஞன். அந்தக் கலையைக் குறித்து அவருக்கு ஒரு மன அழுத்தம்கூட இருக்கு. தன்னை அறியாம பிதற்றுவாரு. திடீர்னு மேளத்தை எடுத்து அடிப்பாரு. பாட்டுப் பாடுவாரு. இப்பிடி எல்லாம் மனப் பிறழ்வுக்கு ஆளாயிட்டாரு. அந்தக் குடும்பமும் சிதைஞ்சு போச்சு. அவரோட, மகளை ஒருத்தன் கட்டிக்கிட்டு, அப்புறம் விட்டுட்டு ஓடிட்டான். இவரு மட்டும் இல்ல, இந்த தோல்பாவைக் கூத்தை தென்னாட்டுல நடத்திக்கிட்டு இருக்குற எல்லா குடும்பமும் சிதைஞ்சு போய்த்தான் கிடக்கு. தோல்பாவைக் கூத்துக் கலைதான், முதல் முதல்ல சுவத்துல இருக்குற ஓவியத்தை வீதிக்குக் கொண்டு வந்துச்சு. அப்பிடிப்பட்ட நிகழ்த்து கலையை வாழ்வாதாரமா எடுத்து செஞ்ச குடும்பம் முருகன் ராவ் குடும்பம். அவங்க குடும்பம் சிதைஞ்சு போனதைப் பாத்தப்போ உண்மையிலேயே மனசு பதறிப் போச்சு."

கேள்வி: இப்போ முருகன் ராவ் என்ன பண்றாரு?

வீரசந்தனம்: இருக்காரு. எவன் கூப்பிட்டு கூத்துப் போடப்போறான்? அரசாங்கம் வருஷத்துக்கு ஒரு நாள் கூப்பிட்டு, ஐநூறு, அறுநூறு ரூபா காசைக் குடுத்து, சோத்தைப் போட்டு அனுப்பிச்சு விடும். அவ்வளவுதான். இதான் அவர் வாழ்க்கை. இதே இந்தக் கலைஞன் வேற நாட்டுல இருந்தா இப்பிடி விடுவாங்களா? இப்பிடி ஒரு கலைஞனை தோள்ல தூக்கி வச்சு இல்ல ஆடுவாங்க? ஒரு தெருவுக்கு அவன் பேரையே வச்சுடுவாங்களே! இது தமிழ்நாடு. பேனரை ஓவியமா பாக்கும், ரிக்கார்டு டான்ஸை பரதநாட்டியமா பாக்கும், இது மாதிரி மறக்க முடியாதது நிறையா இருக்கு."

கேள்வி: இருபது வருஷத்துக்கு முன்னாடி நீங்க நடிச்ச கால தமிழ் சினிமாவுக்கும் இன்றைய தமிழ் சினிமாவுக்கும் எதாவது மாற்றம் தெரியுதா?

வீரசந்தனம்: "தமிழ் சினிமா குப்பையா போயிடுச்சுங்க. என்னமோ ரெண்டு, மூணு பேரு நல்ல படங்களைக் கொண்டு வர்றாங்க. 'பருத்திவீரன்', 'ரெட்டைச்சுழி'... இப்பிடி வந்துக்கிட்டு இருக்கு. இந்த மாதிரியான இளைஞர்கள் தமிழ் சினிமாவை காப்பாத்தினாத்தான் உண்டு. நான் நம்பிக்கையோட வாழறவன். கதையைத் தாண்டி, வாழ்க்கையைத் தாண்டி தொழில்நுட்பம் இப்போ நல்லா வளந்துடுச்சு. அது உள்ள புகுந்து நல்ல படங்களை சிதைச்சுடுது. தொழில்நுட்பம், கதையை சிதைச்சுடுது, பாடலை கேக்க முடியாத அளவுக்கு சிதைச்சிடுது, அதுல உள்ள சம்பவங்களை சிதைச்சுடுது. இதெல்லாம் என்னோட வருத்தம். இப்ப உள்ள படங்கள்ல, சில படங்கள் நம்பிக்கையைக் குடுத்திருக்கு. 'கற்றது தமிழ்'னு ஒரு நல்ல படம். அந்த இயக்குநரை தமிழ்நாட்ல தோக்கடிக்கலாமா? அப்பிடின்னா, நீ சமூகத்தை தோகடிக்கிறேன்னுதான் அர்த்தம். உன் பண்பாட்டை, உன் வாழ்க்கையை தோக்கடிக்கிறேன்னு அர்த்தம். என்னிக்கி நாம இதையெல்லாம் ஆதரிக்க முன் வர்றோமோ, அன்னிக்கி நம்ம கலை, நம்ம பண்பாடு, நம்ம இனம் எல்லாம் நல்லா இருக்கும். அதுக்கு இந்த இளைஞர்கள் எழுந்திரிக்கணும்.

குறைஞ்ச பட்ஜெட்ல படம் பண்ணினா போதும். விம்புக்கு கோடிக்கணக்குல செலவு பண்ணி, குப்பைத் தொட்டியில காகிதத்தைப் போடற

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

# Three Monkeys

22ஆம் பக்கத்தொடர்ச்சி

தாய் மேல் மாடியில் இருந்து குதித்து தற்கொலைக்கு முயல 'உனக்கென்ன விசரா' எனக் கூறி விட்டு வெளியேறுகின்றார்.



ஊர் அடங்கி அமைதியாகி விடுகின்றது. உணவு விடுதி ஒன்றின் வெளியே நின்று அதனுள் நித்திரை கொள்ளும் பாய்ராம் என்ற மிக வறிய சிப்பந்தியை எழுப்புகின்றார். பாய்ராமிடம் ஈயுப் 'உனது தண்டனைக் காலம் முடிய ஒரு பெரும் தொகை கிடைக்கும்'.. எனத் தொடர்கின்றான். படம் அத்துடன் முடிந்து விடுகின்றது.

துருக்கிய படமான இது கான்ஸ் திரைப்பட விழாவில் பலரது பாராட்டையும் பெற்ற படம். சிறந்த இயக்குனர் விருதையும் இப் பட இயக்குனர் கான்ஸ்ல் பெற்றுக் கொண்டார். மூன்று குரங்குகள் என்பது புத்தரின் "see no evil, hear no evil, speak no evil"என பொருள்படும். 'body', 'speech' and 'mind' எனவும் சொல்வார்கள். இங்கும் தாய், தந்தை, மகன் என மூவரும் உண்மைகளை மறைத்து இயல்பு வாழ்விற்கு எதிர் நிலையில் செயல்பட்டாலும் இறுதியில் இயல்பு வாழ்வு நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

பல வருட கால தாம்பத்தியத்தின் பின், கணவனின் முதலாளியுடன் சில காலங்கள் உறவு கொண்ட பின் அந்த உறவுதான் தனக்கு வேண்டும் என முதலாளியின் காலைப் பிடிக்கும் மனைவி. மனைவியின் இந்த செயல், கணவன் மனைவியின் உறவில் மனைவிக்கு ஏற்பட்ட சகல உள காயங்களையும், அவள் சந்தித்த கொடுமைகளையும் வெளிப்படுத்துகின்றது. சற்று மேலே சென்று மகன், தாயை அடிக்கும் காட்சி, பெண்கள் மீது ஆண்களுக்குள்ள அடிமைத்தனத்தின் உச்ச வெளிப்பாடு. தாயின் நடவடிக்கையின் பின் தந்தைக்கும், மகனுக்கும் அதிகரிக்கும் நெருக்கம் இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. அபர்ணா சென்னின் பரோமாவில் வரும் பரோமாவும் கேசரும் ஒரே மாதிரியான பாத்திரங்களே.

ஒரு வர்க்க வேறுபாடு என்பதன் தொடர்பு சிறப்பாக வெளிப்படுகின்றது. தனது முதலாளியின் கொலையை, தனது கொலை என ஏற்கும் ஈயுப், ஈயுப்பின் மகனது கொலையை தான் செய்த கொலையாக ஏற்கும் ஏழைச் சிப்பந்தி ஆகியோரது பாத்திரங்கள் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. கடைசி அடி ஏழைக்கே. ஏற்கனவே பேசப்பட்ட பணத்தை முற்பணமாக கேட்தற்கு ஈயுப்பின் மனைவியின் உடலை தானமாக கேட்கும் முதலாளி, முதலாளி வர்க்கத்தின் ஒரு சிறப்பான படைப்பு.

தாய், தந்தை, தனயனுக்கிடையிலான தொடர்ச்சியான மௌனங்கள், குடும்ப உறவுகளிடையே உள்ள சிக்கலையும், ஒவ்வாமையும் வெளிப்படுத்துகின்றன. இது இன்று பெரும்பாலான குடும்பங்களிடையே இயல்பாக உள்ளது. மற்றொரு துருக்கி இயக்குனரான Yılmaz Güney ன் baba படத்திலும் மகனின் கொலை ஓர் ஏழைக்கு மாறுகின்றது.

இப் படத்தின் மற்றொரு சிறப்பம்சம் திரைப்பட மொழி. வெகு குறைவான வசனங்களே உள்ளன. தேவையற்ற காட்சி நீடிப்புக்கள் இல்லை. பல இடங்களில் பார்வையாளர்களே சிந்திக்க வேண்டியுள்ளது. உதாரணம்: கதவு தட்டப்படுகின்றது. மறு காட்சி ஈயுப்பும், மனைவியும் பொலிஸ் விசாரணையகத்தில் உள்ளனர். இவ்வாறு பல காட்சிகள். படம் முழுவதும் குளோசப்பில் மூவரும் காட்டப்படுகின்றனர். ஒளியின் நிறமும் வித்தியாசமானது. பின்னணி இசை மிகவும் சிறப்பானது. அன்ரன் செக்கோவால் ஈர்க்கப்பட்ட இயக்குனரின் திரைக் கதையில் அந்த பாதிப்பை காணக்கூடியாதாகவுள்ளது. இந்தப் படத்தின் திரைக் கதையில் இயக்குனரின் மனைவிக்கும் பெரும் பங்குள்ளது. அதன் பாதிப்பே, பெண்கள் மீதான அடக்கு முறையின் வெளிப்பாடு.

இது இயக்குனரின் ஐந்தாவது படம். Nuri Bilge Ceylan ன் முந்தைய படங்களும் பல திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டுள்ளன. கெட்டதை கேளாதே, பார்க்காதே, பேசாதே என்பதன் எதிர்வினையை இப்படம் பதிவு செய்துள்ளது.

இப்படத்தை சகல ஆங்கில வீடியோக் கடைகளிலும், நூலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

# "தமிழ் சினிமா...

34ஆம் பக்கத்தொடர்ச்சி



மாதிரி செய்யாம, ஒரு சிறந்த படத்தை, குறைஞ்ச பட்ஜெட்ல அழகா பண்ணலாம். நல்ல கதையை வச்சுக்கிட்டு படம் எடுக்கத் தயாரா இருக்கற நிறைய இளைஞர்கள் இப்போ இருக்காங்க."

கேள்வி: ஆனா, நல்ல படங்கள் ஓடாத பட்சத்துல தயாரிப்பாளர்கள் எப்படி பணம் போட முன் வருவாங்க?

வீரசந்தனம்: ":அது தமிழ்நாட்டோட தலைவிதி. எழுபதுகள்ல கர்நாடகாவுல அருமையான படங்கள் வந்தது. கிரீஷ கர்னாட், ஜி.வி. அய்யர், கிரீஷ, காசரவள்ளி, காரந்த் எல்லாரும் நல்ல படங்களா எடுத்துக்கிட்டு இருந்தாங்க. 'சம்ஸ்காரா!', 'வம்ச விருட்சா'ன்னு எவ்வளவோ நல்ல படங்கள். ஜி.வி. அய்யரோட 'அம்ச கீதை' சரித்திரம் இல்லையா? அங்க அதைப் பாக்கறதுக்குன்னு ஒரு பகுதி மக்கள் இருந்தாங்க. அந்தப் படங்களைப் பத்தின விமர்சனம் பக்கம் பக்கமா வந்திருக்கு. தமிழ்ல அது ரொம்ப மோசமான காலம். அதாவது 'தலைவர் வழிபாடு'ன்னு ஒண்ணு இருக்கே அது மாதிரி இங்கெ 'நடிகர் வழிபாடு'ன்னு ஒண்ணு வந்துருச்சு. இது எவ்வளவு கேவலம்? ரசிகர் மன்றம் வைக்கறதும், பால் ஊத்தி கும்பிடுறதும், சூடம் ஏத்திக் கும்பிடுறதும். இந்தக் கேவலத்துல இருந்து தமிழகத்தை மீட்டெடுக்கவே இன்னும் அரை நூற்றாண்டு காலம் உழைக்கணும். என்னிக்கி இதெல்லாம் ஒழியுதோ, அன்னிக்கி நல்ல படங்கள் எல்லாம் வெற்றி பெறும்."


குறைந்த பட்ச ஊதியம் உயர்கிறது

நீங்கள் தொழில் அதிபர்களாயின் அறிந்து கொள்ள வேண்டியவை

| | பொதுவான ஊதியம் | 18 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் வாரம் 28 மணித்தியாலத்திற்கு உட்பட்ட வேலை அல்லது பாடசாலை விடுமுறை வேலை . | மது சேவையாளர் | வேட்டை மீன் பிடித்தல் வழிகாட்டாளர் நாளொன்றிற்கு தொடர்ந்து 5 மணித்தியாலங்களுக்கு உட்பட்ட உழைப்பாளிகள் | வேட்டை மீன் பிடித்தல் வழிகாட்டாளர் தினமும் 5 மணித்தியாலம் அல்லது அதற்கு மேலானது. அந்த நேரம் தொடர்ச்சியாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் | வீட்டுவேலையாளர் (தங்கள் வீட்டில் தொழிலதிபருக்காக ஊதியத்திற்கு வேலை செய்பவர்கள்) |
|---|---|---|---|---|---|---|
| தற்போதைய ஊதியம் | $9.50 மணித்தியாலம் | $8.90 மணித்தியாலம் | $8.25 மணித்தியாலம் | $47.50 மணித்தியாலம் | $95.00 மணித்தியாலம் | 110% குறைந்த பட்ச ஊதியம் |
| மார்ச் 31, 2010 உரிய ஊதியம் | $10.25 மணித்தியாலம் | $9.60 மணித்தியாலம் | $8.90 மணித்தியாலம் | $51.25 மணித்தியாலம் | $102.50 மணித்தியாலம் | 110% குறைந்த பட்ச ஊதியம் |

குறைந்தபட்சப் பொதுவான ஊதியம் மார்ச் 31, 2010 மணித்தியாலத்திற்கு $10.25 ஆக உயர்கிறது. தற்போது மணித்தியாலத்திற்கு $9.50.

குறைந்த பட்ச ஊதியம் பற்றிய நெறிப்படுத்தல் எப்படி தொழிலதிபர், தொழிலாளர்களைப் பாதிக்கிறது என்பதனைப் பற்றி அறிய அழையுங்கள் அல்லது தொழிலாளர் அமைச்சு இணையத் தளத்தை அணுகவும் .

ஒன்ராறியோ அரசினால் நிதி வழங்கப்படுகிறது

Ontario

1-800-531-5551 www.ontario.ca/minimumwage

# மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா

## கணித,பொது அறிவுப்போட்டி - 2010 முடிவுகள்

கடந்த பல வருடங்களாக மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடா அமைப்பு கணித,பொது அறிவுப்போட்டியை ரொரன்ரோவில் தரம் 1ல் இருந்து தரம் 12 வரை யிலான மாணவர்களுக்கு நடத்தி வந்துள்ளது. இம்முறை கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு மொன்றியலிலும் மற்றும் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கங்கள் இயங்கும் நாடுகளிலும் நடத்தப்பட்டது. அத்துடன் மொன்றியலில் ஆங்கிலம்,பிராஞ்சு மொழிகளில் போட்டி நடத்தப்பட்டுள்ளது.

இவ் ஆண்டு பெப்ரவரி 7ம்,திகதி(07-02-2010) நடைபெற்ற போட்டிகளில் ரொரன்ரோவில் 630 மாணவர்களும், மொன்றியலில் 173 மாணவர்களும் பங்கு பற்றியுள்ளார்கள். பெற்றோர்கள் எடுத்துக்கொண்ட ஊக்கமும், அக்கறையும் மாணவர்களின் ஆர்வமும் போட்டிகள் சிறப்பாக அமையவதற்கு உதவியது.

இவ் ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் **ரொரன்ரோ ரீதியாகவும் கனடாரீதியாகவும் வென்று தங்க,வெள்ளி,வெண்கலப் பதக்கங்களையும் விசேட பரிசுகளையும்** தமதாக்கிக் கொண்ட மாணவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. இவர்களுக்கான பரிசுகள் இவ்வருடம் ஜூலை மாதம் 2ம் 3ம் திகதிகளில் ரொரன்ரோவில் நடைபெறவுள்ள மகாஜனாவின் முத்தமிழ் விழாவில் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய **E-mail: contest@mahajanan.org** தொலைபேசி **இலக்கங்கள்** **Toronto** 416-705-1493 / 416-915-0316 / 416-721-9395 / 647-989-6477 **Montreal** 514-827-2068 / 514-513-7940 / 514-725-1072 .

### CANADA WIDE WINNERS

| INDEX # | FIRST NAME | LAST NAME | Prize | City |
|---|---|---|---|---|
| | | **GRADE 1 MATH** | | |
| **TA-05** | Abishanan | Sriranjan | First Prize | Toronto |
| **TA-42** | Rochan | Muralitharan | Second Prize | Toronto |
| **TA-01** | Aathrayan | Vijayaseelan | Third Prize | Toronto |
| **TA-25** | Maathulan | Baskaran | Third Prize | Toronto |
| | | **GRADE 2 MATH** | | |
| **TB-14** | Arunesh | Baskaran | First Prize | Toronto |
| **TB-12** | Anjana | Esparam | Second Prize | Toronto |
| **TB-78** | Uththami | Kukathasan | Third Prize | Toronto |
| | | **GRADE 3 MATH** | | |
| **TC-40** | Luxshen | Navanathan | First Prize | Toronto |
| **TC-31** | Kajen | Jeyarajan | Second Prize | Toronto |
| **TC-88** | Thurvan | Pakerathan | Third Prize | Toronto |
| **MC26** | Akash | Sasitharan | Third Prize | Montreal |
| | | **GRADE 4 MATH** | | |
| **TD-23** | Cynthia | Gnanaseelan | First Prize | Toronto |
| **MD07** | Kriththyka | Kandasamy | Second Prize | Montreal |
| **TD-32** | Inthuyen | Naguleswaran | Second Prize | Toronto |
| | | **GRADE 5 MATH** | | |
| **TE-51** | Prakash | Rajmohan | First Prize | Toronto |
| **TE-55** | Ramesh | Murugananthan | Second Prize | Toronto |
| **TE-57** | Remeya | Ganesh | Third Prize | Toronto |
| | | **GRADE 6 MATH** | | |
| **TF-50** | Maathuresh | Baskaran | First Prize | Toronto |
| **TF-62** | Nirujan | Kumarakuruparan | Second Prize | Toronto |
| **TF-39** | Kajan | Thanabalachandran | Third Prize | Toronto |
| | | **GRADE 7 MATH** | | |
| **TG-14** | Arunan | Suthananthan | First Prize | Toronto |
| **TG-36** | Jhanahan | Sriranjan | Second Prize | Toronto |
| **TG-23** | Cynthia | Sriskandarajah | Third Prize | Toronto |
| | | **GRADE 8 MATH** | | |
| **TH56** | Mithunan | Ravindran | First Prize | Toronto |
| **TH08** | Ajanan | Navaratnarajah | Second Prize | Toronto |
| **TH03** | Abina | Premachandran | Third Prize | Toronto |
| | | **GRADE 9 & 10 MATH** | | |
| **TI-54** | Kirushanthy | Kaneshwaran | First Prize | Toronto |
| **TI-19** | Arun | Sithamparapillai | Second Prize | Toronto |
| **TI-17** | Arjun | Arawindan | Third Prize | Toronto |
| | | **GRADE 11 & 12 MATH** | | |
| **TJ-58** | Sayon | Vasanthan | First Prize | Toronto |
| **MJ05** | Nirros | Ponnudurai | Second Prize | Montreal |
| **MJ07** | Nikesh | Muthukrishnan | Third Prize | Montreal |

| INDEX # | FIRST NAME | LAST NAME | Prize | City |
|---|---|---|---|---|
| | | **GRADE 1 GENERAL KNOWLEDGE** | | |
| **TA-42** | Rochan | Muralitharan | First Prize | Toronto |
| **MA08** | Kabisan | Vilvaratnam | First Prize | Montreal |
| **TA-30** | Meerusha | Premakanthan | Second Prize | Toronto |
| | | | | |
| | | **GRADE 2 GENERAL KNOWLEDGE** | | |
| **TB-34** | Kryishveen | Varathan | First Prize | Toronto |
| **TB-24** | Ishani | Sinnarajah | Second Prize | Toronto |
| **TB-88** | Seyon | Yogendran | Second Prize | Toronto |
| | | **GRADE 3 GENERAL KNOWLEDGE** | | |
| **TC-99** | Yadunandan | Kukenthiran | First Prize | Toronto |
| **TC-100** | Shawn | Nimal | Second Prize | Toronto |
| **TC-13** | Anushanthan | Yoganathan | Third Prize | Toronto |
| | | | | |
| | | **GRADE 4 GENERAL KNOWLEDGE** | | |
| **TD-31** | Inthujan | Panchalingam | First Prize | Toronto |
| **TD-113** | Thurigann | Easwaran | Second Prize | Montreal |
| **TD-93** | Shangi | Vijenthira | Third Prize | Toronto |
| | | **GRADE 5 GENERAL KNOWLEDGE** | | |
| **TE-14** | Apisan | Nanthivaran | First Prize | Toronto |
| **TE-86** | Umaiyahl | Nageswaran | Second Prize | Toronto |
| **TE-43** | Naveen | Varathan | Third Prize | Toronto |
| | | **GRADE 6 GENERAL KNOWLEDGE** | | |
| **TF-104** | Malavan | Ragvlogan | First Prize | Toronto |
| **TF-03** | Ahrani | Gnananayakan | Second Prize | Toronto |
| **TF-90** | Tharani | Anpalagan | Third Prize | Toronto |
| | | **GRADE 7 GENERAL KNOWLEDGE** | | |
| **TG-43** | Kuhan | Jeyapragasan | First Prize | Toronto |
| **MG09** | Sujan | Saravanamuthu | First Prize | Montreal |
| **TG-08** | Ajanth | Kaneshalingam | Second Prize | Toronto |
| | | **GRADE 8 GENERAL KNOWLEDGE** | | |
| **TH47** | Khopi | Raveendran | First Prize | Toronto |
| **TH56** | Mithunan | Ravindran | Second Prize | Toronto |
| **TH84** | Siyanththen | Vigneswararajah | Third Prize | Toronto |
| | | **GRADE 9 & 10 GENERAL KNOWLEDGE** | | |
| **TI-22** | Athavan | Karunakaran | First Prize | Toronto |
| **TI-98** | Shreeram | Senthivasan | Second Prize | Toronto |
| **MI06** | Geerthika | Thankarajah | Second Prize | Montreal |
| | | **GRADE 11 & 12 GENERAL KNOWLEDGE** | | |
| **TJ-58** | Sayon | Vasanthan | First Prize | Toronto |
| **TJ-45** | Thamiya | Vasanthakumar | Second Prize | Toronto |
| **TJ-32** | Sagan | Vinayagamoorthy | Third Prize | Toronto |

இவ் ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் **ரொரன்ரோ ரீதியாக வென்று பதக்கங்களை மட்டும்** தமதாக்கிக் கொண்ட மாணவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. இவர்களுக்கான பரிசுகள் இவ்வருடம் ஜூலை மாதம் 2ம் 3ம் திகதிகளில் ரொரன்ரோவில் நடைபெறவுள்ள மகாஜனாவின் முத்தமிழ் விழாவில் வழங்கப்படும்.

### TORONTO WIDE WINNERS

| INDEX # | FIRST NAME | LAST NAME | Prize | City |
|---|---|---|---|---|
| | | **GRADE 4 MATH** | | |
| **TD-14** | Aran | Theiventhiran | Third Prize | Toronto |
| | | **GRADE 11 & 12 MATH** | | |
| **TJ-20** | Kershanth | Thevasundaram | Second Prize | Toronto |
| **TJ-34** | Sahaana | Sriskandarajah | Third Prize | Toronto |

| INDEX # | FIRST NAME | LAST NAME | Prize | City |
|---|---|---|---|---|
| | | **GRADE 1 GENERAL KNOWLEDGE** | | |
| **TA-41** | Renesh | Babu | Third Prize | Toronto |
| | | **GRADE 7 GENERAL KNOWLEDGE** | | |
| **TG-73** | Seiiyinthan | Nageswaran | Third Prize | Toronto |
| | | **GRADE 9 & 10 GENERAL KNOWLEDGE** | | |
| **TI-24** | Balakumar | Thevakumar | Third Prize | Toronto |

# புதிய தலைமுறைக்கு...

30ஆம் பக்கத்தொடர்ச்சி



'சினிமா தூது' பத்திரிகையைச் சட்டப்படி தடை செய்தனர். அதன் பிறகு, 'இந்து நேசன்' என மற்றொரு பத்திரிகையைத் தொடங்கினார், லட்சுமிகாந்தன். அதன் மூலம் பழையபடியும் விண்பழிகளைச் சுமத்திப் பணம் பறிப்பதில் லட்சுமிகாந்தன் ஈடுபட்டார். இந்நிலையில் 1944 நவம்பர் 8ஆம் நாள் சென்னை வேப்பேரியிலுள்ள கால்நடை மருத்துவமனை அருகில் ரிக்ஷாவில் சென்றுகொண்டிருந்த லட்சுமிகாந்தனைச் சிலர் வழிமறித்துக் கத்தியால் காயப்படுத்தினர். உடனே அருகிலிருந்த காவல்நிலையத்தில் தனக்கு ஏற்பட்ட காயம் பற்றிப் புகார் செய்துவிட்டு, சென்னை பொது மருத்துவமனையில் சேர்ந்த லட்சுமிகாந்தன், மறுநாள் அதிகாலையில் மர்மமான முறையில் இறந்துவிட்டார். லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் போலிஸாரின் சந்தேகக் கண் பாகவதர் மேலும் என்.எஸ்.கிருஷ்ணன் மேலும் விழுந்தது. சென்னையில் (அன்றைய மதராஸ்) மிகப் பரபரப்பாக இது பேசப்பட்டது.

1944 நவம்பர் 27ஆம் தேதி பாகவதரும் என்.எஸ்.கிருஷ்ணனும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பாக மேலும் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களைப் பற்றி லட்சுமிகாந்தன் அவதூறாகச் செய்திகள் வெளியிட்டதைக் கொலைக்குக் காரணமாகக் காவல்துறை குறிப்பிட்டது.

சென்னை மாநில மாஜிஸ்திரேட் கோர்ட்டில் குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு வந்தது. நீண்ட விசாரணைக்குப் பிறகு பாகவதர், என்.எஸ்.கிருஷ்ணன் மற்றும் நால்வரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. பாகவதருக்கும் என்.எஸ்.கிருஷ்ணனுக்கும் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அதன்மீது செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அதன்மீது மேலும் இலண்டன் பிரிவி கவுன்சிலுக்கு முறையீடு செய்யப்பட்டது. அதன் பிறகு இவர்களின் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வழக்கை மீண்டும் விசாரணை செய்யுமாறு பிரிவி கவுன்சில் தந்த உத்தரவின்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் இரு நீதிபதிகளால் மறுவிசாரணை தொடங்கியது. பிரபலமான வழக்கறிஞர் வி.எல்.எத்திராஜ் முன்வைத்த வாதங்களும் ஆதாரங்களும் நடத்தப்பட்ட வழக்கில் தரப்பட்ட வலுவற்ற புனைந்துரைகளை முழுமையாகச் சிதறடித்தன. அதன் பிறகு, 1948இல் பாகவதரும் கிருஷ்ணனும் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டனர். இந்த வழக்கில் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்டதாக சமர்ப்பிக்கப்பட்ட ஒரு கத்தியைப் பார்த்து மனுவை விசாரித்த நீதிபதி ஒருவர் கூறினாராம்: "இந்தக் கத்தியால் ஓர் எலியைக்கூட கொன்றிருக்க முடியாது." இந்த அளவுக்கு மோசமான ஆதாரங்கள் மீது திரையுலக நட்சத்திரங்களான தியாகராஜ பாகவதரும் என்.எஸ்.கிருஷ்ணனும் கைது செய்யப்பட்டிருந்தனர். இருவரும் குற்றவாளிகள் இல்லை என்று விடுதலை செய்யப்பட்டனர் என்றாலும், அதற்குள் முப்பது மாதங்கள் ஓடிவிட்டிருந்தது. அத்தனை காலமும் இருண்ட சிறைச்சாலைக்குள்தான் இந்த இரண்டு சூப்பர் ஸ்டார்களும் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

பாகவதர் சிறை மீண்டு வந்த போது, தமிழ் சினிமாவின் போக்கே மாறியிருந்தது, ரசிகர்களின் ரசனையும் மாற்றமடைந்திருந்தது. இதனால், பாகவதர் எதிர்பார்த்த வரவேற்பு இல்லாமல் போனதும், தானே சினிமா எடுக்க முற்பட்டார். சொந்தப் படம் தயாரிப்பில் இறங்கினார். 'ராஜமுக்தி'யை, 1948ஆம் ஆண்டு எடுத்தார். பூனாவில் அதன் படப்பிடிப்பு நடந்தது. வி.என்.ஜானகிதான் கதாநாயகி. எம்.ஜி.ஆர், பானுமதி போன்றவர்களும் நடித்தார்கள். ஒரு வருஷம் பூனாவிலேயே தங்கி எடுத்த 'ராஜமுக்தி' சரியாக ஓடவில்லை. படத்தில் பாகவதரின் பாட்டுக்கள் அற்புதமாக அமைந்திருந்தாலும் படம் எதிர்பார்த்த வெற்றியை அடையவில்லை. ஏற்கெனவே, வழக்கில் தன் சொத்தில் ஒருபகுதியை இழந்திருந்த பாகவதர் 'ராஜமுக்தி' தோல்வியால் தன் சொத்தில் பெரும்பகுதியை இழந்தார். அதன்பிறகு, சேலம் எம்.ஏ.வேணு பாகவதரை வைத்து 'சிவகாமி' படத்தை எடுத்தார். அதுவும் சரியாகப் போகவில்லை. இடையில் 'அமரகவி' (1952), 'சியாமளா' (1952), 'புதுவாழ்வு' (1957) என்று மூன்று படங்கள். எதுவும் ஓடவில்லை. 'சிவகாமி'தான் (1960) பாகவதரின் கடைசி படம். அதுவும் தோல்வி கண்டது. அத்துடன் தமிழ் சினிமாவில் ஒரு சகாப்தம் ஓய்ந்து போனது.

பாகவதர் பாடல்கள் இந்தப் படங்களில் எப்போதும் போலவே சிறப்பாக அமைந்திருந்தன. ஆனாலும், எம்.கே.டி. திரைப்படங்கள் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை. அதில் நொடிந்துபோன பாகவதர் அதன்பின் எல்லாப் பற்றுகளையும் விட்டு நீங்கிய, துறவிபோல் ஆகிவிட்டார். மேற்கொண்டு நடிப்பதற்கான பல அழைப்புகளை அவர் தவிர்த்தார். நடிப்பதிலோ, பொருளீட்டுவதிலோ அவருக்கு நம்பிக்கையும் நாட்டமும் இல்லாமல் போனது.

சென்னை, புரசைவாக்கம் மில்லர்ஸ் ரோட்டில் தனி பங்களா, மூன்று வெளிநாட்டுக் கார்கள், இட்ட வேலையைச் செய்து முடிக்கப் பணியாட்கள், தினசரி வந்து போகும் சினிமாத்துறை பிரபலங்களின் கூட்டம் என படாடோபமாக வாழ்ந்த பாகவதர் ஒண்டுக்குடித்தன வாழ்க்கைக்கு வந்துவிட்டார். 'சிவகாமி'யில் நடித்துக் கொண்டிருக்கும் போதே பாகவதருக்கு உடல்நலம் சரியில்லாமல் ஆகிவிட்டது. சர்க்கரை வியாதி, ஒரு கண்பார்வை சரியாத் தெரியவில்லை. அதன்பிறகு உப்பு நீர், ரத்தக் கொதிப்பு, ரத்தக் குழாய் வெடிப்பு என அடுக்கடுக்காக நோய்கள் தாக்கத் தொடங்கின. அவரது குடும்பத்தினர், சென்னை அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக பாகவதரைச் சேர்த்தனர். அதன்பிறகு பாகவதர் வீடு திரும்பவில்லை. 1959ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதி, ஈரல் நோயினால் பாதிக்கப்பட்ட எம்.கே.டி., மருத்துவமனையிலேயே காலமானார். பாகவதரின் உடல் அங்கிருந்து நேராக திருச்சிக்கு எடுத்துப் போய் அடக்கம் செய்யப்பட்டது.

பாகவதர் காலமானபோது ஒண்டுக்குடித்தன வீட்டு வாடகையைக்கூட அடைக்க முடியாத நிலைமையில் அவரது குடும்பம் இருந்தது இன்றும் பேசப்படும் ஒரு விஷயம். தமிழ்த் திரையுலகில் அவரைப் போல வாழ்ந்தவருமில்லை, அவரைப் போல வீழ்ந்தவருமில்லை. 1934 ஆம் ஆண்டு 'பவளக்கொடி' திரைப்படத்தில் கதாநாயகனாக அறிமுகமான பாகவதர் 15 படங்களில் நடித்துள்ளார். அதில் 6 படங்கள் மிகப்பெரிய வெற்றிப்படங்கள். ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், எம்.எம்.மாரியப்பா, எம்.எம்.தண்டபாணி தேசிகர், கொத்தமங்கலம் சீனு, கே.பி.சுந்தராம்பாள், எம்.எஸ்.சுப்புலஷ்மி, என்.சி.வசந்தகோகிலம், எம்.கே.தியாகராஜ பாகவதர் உட்பட பல தலைசிறந்த கர்நாடக சங்கீத வித்வான்கள் தமிழ்த் திரையுலகில் பிரவேசித்திருக்கின்றனர். இவர்களில் அநேகருக்கும் பாமர மக்களையும் போய்ச் சேரும் வண்ணம் ஜனரஞ்சக வெற்றி சாத்தியமாகவில்லை. பலரும் வந்த வேகத்திலேயே மறைய நேரிட்டது. ஆனால், தங்கக் குரலோன் எம்.கே.டி. மாத்திரம்தான் தன் தனித்துவமான கணீரென்ற குரலாலும் அழுத்தத்தோடியைந்த தெளிவான உச்சரிப்பாலும் திரைவானில் துருவ நட்சத்திரமாக ஒளிர்ந்தார். நடிகர்களுக்கு சமுதாயத்தில் ஒரு கௌரவத்தையும் மதிப்பையும் பெற்றுத்தந்த முதல் கலைஞர் தியாகராஜ பாகவதர்தான். பாகவதர் மிகவும் செல்வாக்காக இருந்த காலத்தில் அவருக்கு காமராஜர், அண்ணாதுரை, ராஜாஜி போன்ற அரசியல் தலைவர்களிடமும் மிக நெருங்கிய பழக்கம் இருந்தது. இந்தத் தலைவர்கள் வேண்டியும் பாகவதர் அரசியலுக்கு வர மறுத்து விட்டார். வந்திருந்தால் திரை உலகிருந்து வந்து முதல் தமிழக முதல்அமைச்சர் என்ற பெருமை அவருக்கு வந்திருக்கும் என்பது உறுதி.

பாகவதர் மறைந்தாலும், காலத்தால் அழிக்க முடியாத அவரது பாடல்களும் சங்கீதமும், சிரஞ்சீவியாக பாகவதரை இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. எப்படி என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

தொடரும்...

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

**Personal Prayer To The Holy Spirit**



Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - SN

Our Mother of Perpetual Help

**Bestway Driving school**

Get your **G2** Licence in 3 weeks (If qualified)

**பெண்கள் / ஆண்கள் welcome**

***Very respectfull instructor to ladies.***

**உங்களுடைய தாய்மொழியிலேயே கற்றுக்கொள்ள முடியும்**
**நம்பகமான சேவையும் நாணயமான கட்டணமும்**




**சாரதிப்பத்திரம் உத்தரவாதம்**

*Get your G licence through me.*
*If you fail G test, we will pay your test-booking fee.*
(some condition may apply)

**Approved instructor by M.T.O.**

For further details call ***Vicky: 647.284.5373***

சேவைகள்: *Brampton - Mississauga - Toronto*

***Road test available in out cities***

# அகணியின் கவிச்சாரல்

## ஒரு விமர்சனம்




ஓர் ஆரோக்கியமான குளிர்கால மாலைவேளை. வயிற்றுப்பசியைத் தீர்ப்பதற்கெனக் காலை, மாலை, இரவு என்று பாராமல் ஓடி ஓடி உழைத்தவர்கள் ஓய்வெடுக்கும் ஒரு ஞாயிறு மாலைப்பொழுது. மனிதன் அறிவைத் தேடும் ஒரு சமூகப்பிராணி. எவ்வளவு கடின உழைப்பின் மத்தியிலும் தன்னுடைய அறிவுப்பசியை அவன் தீர்க்காமல் இருந்ததில்லை. அந்தவகையில் புலம்பெயர் தமிழர்களும் தமிழ் இலக்கிய உலகிற்கு தம்மாலான பங்களிப்பை வழங்கி வருகின்றனர். அவர்களின் வரிசையில் திரு.எஸ்.ஏ.சுரேஸ் (அகணி) அவர்களும் கவிச்சாரல் என்னும் கவிதைத் தொகுதி வாயிலாக தமிழ் இலக்கியத்தளத்தில் தமது முதலடியைத் தடம் பதித்துள்ளார்.

போர்ச்சூழல் நம்மை எம் சொந்த மண்ணிலிருந்து அப்புறப்படுத்தினாலும் எமது மொழி, பண்பாடு, அடையாளத்தைத் தக்கவைக்க நாம் அனைவரும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அந்தவகையில் திரு.சுரேஸ் (அகணி) அவர்களின் மணவாசனை மிக்க கவிதைத் தொகுதியான கவிச்சாரல் கடந்த ஞாயிற்றுக்கிழமை (28.02.2010) அன்று Agincourt குமுகமைய மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

## தேன்மொழியாள் கங்காதரன்

இவரது இக்கன்னிமுயற்சி கனடியத் தமிழ்ச் சமூகத்தால் வரவேற்றப்படவேண்டியது. இந்நூல் கனடாத்தமிழ் எழுத்தாளர் இணையம் சார்பாக வெளியீடு செய்யப்பட்டது. கனடாத்தமிழ் எழுத்தாளர் இணையம் புலம்பெயர் கனடிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் ஒரு அமைப்பு என்பது அனைவரும் அறிந்ததே. அவ்விணையத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. சிவபாலு அவர்கள் தலைமையில் கூட்டம் கிட்டத்தட்ட 6 மணியளவில் ஆரம்பமானது. இணையத்தின் செயலாளர் திருமதி மீரா இராசயா அவர்கள் வந்திருந்தவர்களை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைவர் சிவபாலு அவர்கள் தமது தலைமையுரையில், 'கவிதையை எல்லோராலும் எழுதவும் முடியாது. எல்லோராலும் படித்துச் சுவைக்கவும் முடியாது' என்றார். அவர் தொடர்ந்து இவ்வாறான நேரச்சிக்கல் மத்தியிலும் சுரேஸ் அவர்கள் கவிச்சாரல் என்னும் நூலை வெளிக்கொண்டு வந்திருப்பது பாராட்டுக்கு உரியது என்றார். கவிச்சாரல் நூலை வெளியீடு செய்து வைத்துப் பேசிய பேராசிரியர் திரு. இ. பாலசுந்தரம் அவர்கள், 'கவிஞன் என்பவன் தான் வாழும் சமூகத்தைப் புரிந்து கொள்வதோடு அதன் குற்றங்களைச் சாடுதலும் வேண்டும். அதைத் திரு.சுரேஸ் அவர்கள் நன்றாகவே செய்திருக்கிறார்' என்றார்.

அவரைத் தொடர்ந்து ஆய்வுரை நிகழ்த்திய திருமதி. கலாநிதி குலமோகன் அவர்கள் பார்வைகள் பலவிதம் அதில் தன்னுடைய பார்வை இவ்விதம் என்று கூறி கவிஞரின் பல கவிதைகளை மேற்கோள் காட்டிப் பேசினார். இவர் பழந்தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கி கவிச்சாரலை ஆய்வு செய்ததுடன் கவிஞரிடம் பல வினாக்களையும் விட்டுச் சென்றார்.

தொடர்ந்து முன்னைநாட் மகாஜனக்கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் எனக்கு கவிதை பற்றி அதிகம் தெரியாது என்ற தொடக்கத்துடன் ஆரம்பித்து, கவிஞரின் பல கவிதைகளின் குறைநிறைகளை நன்கு அலசி ஆராய்ந்தார்.

இன்னொரு ஆய்வாளரான திரு. நவம் அவர்கள் கவிதை என்றால் என்ன? என்பதற்கான விளக்கத்தை நன்கு முன்வைத்தார். அன்றிலிருந்து இன்றுவரை கவிதை வடிவம் எவ்வாறு மரபை மீறி வந்திருக்கிறது. பாரதியில் தொடங்கி, பிச்சமூர்த்தி, கு.ப.ரா என்பவர்களிலிருந்து அசை, சீர், எதுகை, மோனை, யாப்பு என்ற இலக்கண வரம்புக்குள் நில்லாமல் புதுக்கவிதை என்ற தளத்தில் இயங்கி வந்துள்ளது என விரிவாக எடுத்துரைத்தார். கவிதை பற்றிய புரிதல் இல்லாதவர்கள் கவிதையை சுவைக்கக்கூடிய வாய்ப்பை இத்தகைய விளக்கம் கொடுத்திருக்கும் என்று நிச்சயமாக நம்பலாம். அவர் தொடர்ந்து கவிதை என்பது இறுக்கமானதாகவும் நெருக்கமானதாகவும் இருக்கவேண்டும் இவை அதிகமானாலும் இன்றேல் சிறிது குறைந்தாலும் கவிதை தோல்வி அடைந்து விடும் என்று இரத்தினச் சுருக்கமாக கவிதை பற்றி விளக்கினார். மேலும் அவர் அகணியின் கவிதைகள் இத்தகைய கட்டுக்குள் உண்டா என்றால் இல்லை என்று தான் சொல்லமுடியும் என்ற கூற்றையும் முன்வைத்தார்.

தொடர்ந்து திரு.பொன்னையா விவேகானந்தன், திரு சிவமோகன் ஆகியோர் உரையாற்றினர்.

திரு. சுரேஸ் அவர்கள் தமது ஏற்புரையில் நான் எழுதிய கவிதை எல்லாம் எனது கற்பனையே என்றும் இது எனது கன்னிமுயற்சி என்றும் தனது தாயாரின் அடியொற்றி ஒரு இலக்கியவாதியாக வரவேண்டும் என்ற அவாவுடன் இப்பணியை செய்கிறேன் என்றும் கூறினார். இதுவரை இங்கு பேசிய அத்தனை பேரின் குறைகளையும் அவர்களின் ஆக்கபூர்வமான விமர்சனமாக எடுத்துக் கொண்டு தொடர்ந்த எனது படைப்புகளில் கவனம் செலுத்துவேன் என்று தனது நன்றியறிதலைத் தெரிவித்தார்.

வெறுமனே உரை என்றில்லாமல் திரு.சுரேஸ் அவர்களின் கவிச்சாரல் தொகுதியிலுள்ள சில பாடல்களுக்கு இசையமைத்து பாடிய ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டுக்கு உரியவர்கள். மாணவ மாணவியரின் இசைநிகழ்ச்சிக்கு சபையோரின் பாராட்டு நிச்சயம் உண்டு. மொத்தத்தில் ஒரு இனிய இலக்கிய மாலைப்பொழுதுக்குச் சென்றுவந்த திருப்தி எனக்கு.

# 22ஆம் குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்கு என்ன செய்ய வேண்டும்



அடுத்த குளிர்கால ஒலிம்பிக் 2014ல் இரசியாவில் நடைபெற உள்ளது.
அதில் கனடாவும் பங்குபெறும். இப்போட்டிகளில் கனடா இம்முறை செய்ததையும் விட நன்றாக செய்ய வேண்டும். அதற்கு கனேடியர்களாகிய நாம் எல்லோரும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

எங்களுடைய விளையாட்டு வீரர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். முதலாவதாய் நாம் கடையில் விற்கின்ற "கனடா" ஒலிம்பிக் உடைகளை வாங்கலாம். அதில் சேருகின்ற பணம் எமது விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்களை வாங்குவதற்கு உதவும். அவர்களது பயிற்சிக்குத் தேவையான பணத்திற்கும் உதவியாக இருக்கும். ஒலிம்பிக் போட்டிகளுக்கு உதவி செய்ய முன்வரும் நிறுவனங்களுக்கு நன்றிக் கடிதங்களை அனுப்ப வேண்டும்.

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்றிய எல்லா விளையாட்டு வீரர்களுக்கும் பாராட்டுக் கடிதங்களை எழுதி அவர்களுக்கு அனுப்ப வேண்டும். போட்டிகளின் போது சிறு தவறுகளினால் பதக்கங்களை எடுக்காமல் போன வீரர்களுக்கு ஆறுதல் கடிதங்கள் அனுப்ப வேண்டும். வீரரின் பெற்றோர்களுக்கும் பாராட்டுக் கடிதங்கள் அனுப்பி, அவர்களையும் உற்சாகப்படுத்தல் வேண்டும்.

தமிழரும் கனேடியர்களாய் இருப்பதனால் குளிர்கால விளையாட்டுகளையும் பழகவேண்டும். அவற்றை நன்றாக விளையாடி ஒலிம்பிக் போட்டிகளுக்கு போய் பதக்கங்களை வெல்லவேண்டும். ஈழத்தில் இல்லாத குளிர்கால விளையாட்டு வசதிகள் நிறைய இங்கு இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி கனேடிய தமிழர்களுக்கும் பெருமை தரவேண்டும். ஸ்கேற்றிங், பனிச்சறுக்குதல் மற்றும் ஐஸ் விளையாட்டுகளில் நாங்கள் நன்றாக விளையாடி ஒலிம்பிக் போட்டிகளுக்கு போகவேண்டும். இதற்கான ஊக்கங்களை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

இப்படி செய்து இரசியாவில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு பல விளையாட்டு வீரர்களை கனடா அனுப்ப வேண்டும். பல பரிசுகளைப் பெறவேண்டும். அடுத்த முறை கனடா முன்றாம் இடத்தில் அல்ல அதற்கு முன்னால் வரவேண்டும்.

**- சங்கவை -**
**தரம் 8**

காலம்
இதழின் ஆதரவில்
"ஈழமின்னல் சூழ மின்னுதே"
இலக்கிய நிகழ்வு



மு.பொன்னம்பலம் முடிந்து போன தசையாடல் பற்றிய கதை
உமா வரதராஜன் மூன்றாம் சிலுவை
இமையவன் தேடலும் விமர்சனங்களும்
அனார் உடல் பச்சை வானம்

ஈழத்து நூல்களை முன்வைத்து ஈழத்து இலக்கியக் கலந்துரையாடல்
ஈழத்து நூல்களின் கண்காட்சி இடம்பெறும்

சிறப்புப் பேச்சு
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தமிழ் ஒரு செம்மொழி

03 April 2010 Saturday
5:00 pm
Mid Scarborough Community Centre
2467 Eglinton Ave East, Scarborough
(Kennedy Subway)
தொடர்பு 416 731 1752

எட்டாவது
சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா



June 12, 2010
Scarborough Civic Ctr.
11a.m – 6p.m

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், பிரான்ஸ், இங்கிலாந்து, சுவீடன், நோர்வே, அமெரிக்கா, கனடா

416-450-6833, 416-804-3433, www.iafstamil.com

Sapphire place

# A Sapphire of An Opportunity

*LET THIS SAPPHIRE FIRE YOU UP*




**The Sapphire Place**, a sapphire of an opportunity to implement your business ideas is coming to the high growth town of Markham, at a prime location that almost guarantees heavy traffic volume crucial to your business ideas:

- NORTH EAST SIDE OF 407/WOODBINE AVE INTERSECTION
- NEAR BIG BOX RETAIL DEVELOPMENTS
- NEXT TO TWO HOTELS WITH 210 COMBINED ROOMS

**The Sapphire Place is a well carved gem developed by Woodjane Corporation:**

- DESIGNED BY THE AWARD WINNING ARCHITECT LOUIS K. CHEUNG, OAA, MRAIC
- SPACE EFFICIENTLY DESIGNED TO APPROXIMATELY 3% GROSS-UP

The Sapphire Place brings to you this rare and precious business opportunity: outlets for stores, restaurants or professional services. With the heavy traffic volume in the area, your business venture will shine almost right away, like a gem.

## OPEN INVITATION

DATE: APRIL 3, 2010 (SATURDAY)
TIME: 11a.m. - 3 p.m.
VENUE: HOMEWOOD SUITES BY HILTON TORONTO-MARKHAM
*50 BODRINGTON COURT, MARKHAM (BEHIND COSTCO)*





Construction will start in 2010, to be completed by 2011. Only a limited number of units are available. Let this Sapphire fire you up! Do not waste any time! Make this gem one of your prized possessions!
Pick up your phone and call.

***HURRY! DO NOT MISS THIS SAPPHIRE OF AN OPPORTUNITY! ACT TODAY!***

CALL NOW FOR DETAILS:

**416 - 321 - 6969**

EXCLUSIVE BROKERAGE
HomeLife GTA Realty Inc.

# சற்றும் வளைந்து கொடுக்காத பிடிவாதம் எனும் பிசாசு

மிகப் பிடிவாதமான கண்டிப்புடன் பிறருக்கு எந்த விதத்திலும் விட்டுக்கொடுக்காது இதுவரை வாழ்ந்ததற்காக என்னை மன்னிக்க இப்போ நான் உடன்படுகின்றேன்.

நீ இவ்வாறு முரண்பட்டுப் பிடிவாதம் பிடிப்பது சரியா? உனக்கு இவ்வளவு மன அழுத்தத்தை தரும் உனது கோபத்தினாலும் ஆத்திரத்தினாலும் ஏதாவது உருப்படியாக நடக்கிறதா? ஏதாவது பிரயோசனம் ஏற்படுகிறதா? உனது இந்தக் கடின மனப்போக்கினால் நீ விரும்புவது உனக்குக் கிடைக்கின்றதா? இவ்வாறு உனது கருத்தை வலியுறுத்தி உனது நிலைப்பாட்டினை நீ பாதுகாத்துக் கொள்வதால் ஏதாவது திருப்தியையும் நிம்மதியையும் நீ அடைகின்றாயா? இப்படி நீ மாறாமலிருப்பது என்ன விதத்தில் உனக்கு உதவுகின்றது? இத்தனை மனக்கஷ்டத்துடன் இவ்வாறு நீ அடம் பிடிப்பதனால் உனக்கு ஏதாவது பிரதிபலன் கிடைக்கிறதா?

தொடர்ந்திடும் சவால்களும் எதிர்ப்புகளும் தான் எமது அறிவைப் பெருக்கி புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குகின்றன என்பது உண்மை. ஆனால் எப்பொழுதும் இணக்கமிகு வளைந்து கொடுக்கும் மனப்பான்மை இருந்தால் தான் புதிய கருத்துக்கள் உதயமாகும். வளைந்து கொடுத்து மாறுவது உனது பலவீனத்தைக் காட்டுவதல்ல. நீ தோல்வியடைந்து சரணடைகின்றாய் என்பதுமல்ல. தருணத்திற்கேற்ப வளைந்து கொடுக்கும் போது நீ திறந்த மனதுடன் செயற்படுகின்றாய். உனக்கும் சம்பந்தப்பட்ட சகலருக்கும் எது மிக உத்தமமானதோ அதைச் செய்திட வளைந்து உனது ஒத்துழைப்பினை கொடுப்பதால் நீ நல்குகின்றாய். பிரதிபலனைக் கருதாது என்ன விதத்தில் செயல்பட வேண்டும் என்பதில் உனது அக்கறையையே இந்த மனநோக்கு பிரதிபலிக்கின்றது. காலத்தால் மாறாத தார்மீகமான தெய்வக் கட்டளையையே இது குறிக்கின்றது. உன் இதயத்தில் உறையும் தெய்வத்தின் குரலைக் கேட்க நீ உடன்படும் போது வளைந்து கொடுப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொள்வாய்.




பிரச்சனையில் நடைபெற்ற சம்பவங்கள் உனது உறவுகளின் நடைமுறைபற்றிய உனது முன்கூட்டிய அபிப்பிராயங்கள் தவறு என உணர்ந்து அவற்றை விட்டுக்கொடுப்பது தான் வளைந்து கொடுப்பது. இந்த விடயம் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று மதிப்பிட்டு நீ தீர்மானிப்பது உனது அதிகார அடக்கு முறையைத் தான் எடுத்துக் காட்டுகின்றது. இது இப்படித்தான் இருக்க வேண்டுமென நீ நினைப்பது ஒரு தீர்ப்பு. இந்த அதிகார அடக்குமுறைப் போரில் ஒருபோதும் நீ வெற்றியடையமாட்டாய். வளைந்து கொடுக்காதபோது நீ ஒடித்து வீசப்படுவாய். எங்கும் எதிலும் இருக்கும் நன்மையைக் கண்டு எப்படி வாழ்வு நீரோட்டம் செல்கின்றது என்பதை விளங்கிக் கொள்வது தான் உண்மையில் வளைந்து கொடுப்பது. உனக்கு வேண்டும் என விரும்புவதை அடைவதற்கு நீ சண்டை பிடிப்பதை அவதானித்தால் இதற்கு இப்படி வாக்குவாதப்படுவது சரியா என உன்னையே நீ கேட்டுக்கொள்.

விரும்பியதை அடைந்திட விட்டுக் கொடுக்காமல் சண்டைபிடிப்பது அத்தியாவசியம் என இன்றுவரை நீ நம்பியிருக்கலாம். இன்று உனது மன நோக்கையும் போக்கையும் மாற்றி உனக்குச் சரியான வழியைக் காட்டி அருளும்படி தெய்வத்திடம் பிரார்த்தனை செய்.

**வளைந்து கொடுக்கும் மனப்பான்மையுடன் இறைவழிகாட்டும் வாழ்க்கை நீரோட்டத்துடன் கலந்து இன்பமாக உறவுகளுடன் வாழ இன்றுமுதல் ஆரம்பிக்கின்றேன்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 167

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
RE/MAX

For Sale
$950,000

• Warden/Lawrence
• Commercial Condo Factory/ Manufacturing
• All Existing Light Fixtures, Some Chattels Included.

Houdr for Sale
$379,900

• Portunion / 401
• 3+1 bedroom
• 4 washrooms
• Detached house 2-Storey
• Stove ,Fridge ,Washer ,Dryer ,Dishwasher ,All Elf ,All Window Coverings.

House FOR SALE
$294,900

• Finch/Markham/Tapscott
• 2-Storey detached
• 3 +1 bedroom • 3 Washrooms
• 2 Fridges , 2 Fridges , Washer, Dryer , Cac

FOR SALE
$139,900

• Woodbine / Hwy 7
• Restaurant Business for sale • Prime Location • Low Rent • All The Chattels Including All Granite Tables ,Equipments And Signage And More. • Motivated Vendor

Sale Of Business

$99,800
Simcoe/Beatrice, Oshawa, ON. Busy Convienience Store In A Busy Intersection ,Very Affordable Rent Of $1650/ Month (Incl Tmi), Income From Lottery Can Pay Off Your Rent ,Opportunity To Improve Your Business , Movie Rental Brings Extra Money , Very Rarefind , Price Includes Business And Goodwill Only , Stock (Approximately 20K) Comes Extra , Lease Term Is 5+5Years.

House for Sale
$409,900

• Taunton/Baycliffe, Whitby, Ontario
• 4 bedrooms • 3 washrooms
• Stove ,Fridge, Washer, Dryer, All Elf, All Window Coverings.

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

AVM
MAX 2000
Bus & Tour Company
5215 Finch Ave. E. Unit 250
(GTA Square Mall)
Toronto, ON M1S 0C2
For More Information
Please Contact Paddy at
(416) 609-2542
paddy-avmmax2000@hotmail.com
www.avmmax2000.ca
Atlantic City Tours
⇒ July (16th - 21st)
⇒ August (13th - 18th)
5 Days Trip Starting From: $450.00 /Person
• New York City - Statue of Liberty, Empire State Building, Ground Zero
• Atlantic City - Casinos
• Washington D.C. - White House, Museums
• Pittsburgh Pennsylvania - Sri Venkateswara Temple
• Grove City, Pennsylvania - Prime Outlets (Shopping)
⇒ These prices include bus far, 4 nights hotel accommodations, and continental breakfast for 4 days
⇒ Individuals are responsible for entrance fees for all attractions, all lunches, dinners, gratuity, and any other expenses
